The "BHARATI" Reg. No. 2456.

செப்டம்பர்—அக்டோபர்—1931.




7 NOV 1931

மாலை 3. மணி 9-10.

# ஓர் தேசிய

# மாதப் பத்திரிகை.

ரா. நாராயணஸ்வாமி,

ஆசிரியர்.

பிரசுராலயம்:

உத்தமபாளையம்,

மதுரை ஜில்லா.

ஊ211, N29BH
N31·3·9-10
19654

# போஷகர்கள்.

1. Messrs. மச்சா முனுஸ்வாமி செட்டியார் & பிரதர்ஸ்,
சென்னை

2. ஸ்ரீமான் நாகையஸ்வாமி அவர்கள், மானேஜர்,
தேவாரம் ஜமீன், தேவாரம்.

3. ,, T. A. K. அழகர் ராஜா அவர்கள்,
சொந்தக்காரர், மஹேஸ்வரி விலாஸ்
ராஜா எஸ்டேட், தேவாரம்.

4. ,, C. சங்கரலிங்கம் அவர்கள், சொந்தக்காரர்,
ஆனந்த விலாஸ் எஸ்டேட், தேவாரம்.

5. ,, சி. ராமலிங்கம் செட்டியார் அவர்கள்,
மிராஸ்தார், தேவாரம்.

6. ,, S. ராமலிங்கம் செட்டியார் அவர்கள்,
மிராஸ்தார், கூடலூர்.

7. ,, ப. ச. வேலுச்சாமி அவர்கள்,
ஜவுளி வியாபாரம், கூடலூர்.

8. ,, V. S சுப்ரமணியம் அவர்கள், மிராஸ்தார்,
சித்தயங்கோட்டை.

9. ,, ஜான் அந்தோனி ஆஜா அவர்கள்,
டைசன்வாலி, தேவிகுளம், திருவிதாங்கூர்.

10 NOV 1931

# போஷகர்கள்.

10. ஸ்ரீமான் T. V. K. காமராஜ பாண்டிய நாயக்கர் அவர்கள்
ஜமீன்தார், முனிசிபல் சேர்மன் & M. L. C,
போடிநாயக்கனூர்.

11. ,, உ. ம. சே. முகியித்தீன்பிள்ளை ராவுத்தர்
அவர்கள், மானேஜர், T. C. P. A. ஏலச்சரக்கு
விற்பனைக் கம்பெனி, Ltd., கோம்பை.

12. ,, ந. ராமராஜ் அவர்கள், மிராஸ்தார். தேவாரம்.

13. ,, K. பண்டாரர் அவர்கள், மானேஜர், T. C. P. A.
ஏலச்சரக்கு விற்பனைக் கம்பனி, Ltd.,
பிராஞ்சு, போடிநாயக்கனூர்.

14. ,, K M அகமது மீரா அவர்கள், மிராஸ்தார்,
உத்தமபாளையம்.

15. ,, ராவ்சாகிப் A. S. அழகணன் செட்டியார்
அவர்கள், மிராஸ்தார், மெம்பர், ராமேஸ்வரம்
தேவஸ்தானக் கமிட்டி & M. L. C.
போடிநாயக்கனூர்,

16. ,, C A. A. அப்துல் ரஹீம் ராவுத்தர் அவர்கள்,
மிராஸ்தார் & ஜில்லாபோர்டு மெம்பர், கம்பம்.

17. ,, K. முத்துச்சாமி செட்டியார் அவர்கள்,
மிராஸ்தார், கெஷிமிநாயக்கன்பட்டி,
தேவாரம் P. O.

18. ,, ஆ. ஆ.க. இராமனுதத் தேவர் அவர்கள்,
மிராஸ்தார், ஆதியாகுடி, புளியால் P. O.,
தேவகோட்டை.

19. ,, நா. பூ. வேலுத் தேவர் அவர்கள், மிராஸ்தார்,
சிறுநல்லூர், திருவேகம்பத்து P. O,
தேவகோட்டை.

20. ,, பி. மு. முத்துவேல் உடையார் அவர்கள்,
மிராஸ்தார், அதங்குடி, புளியால் P. O.,
தேவகோட்டை.

21. மெஸ்ஸர்ஸ். V. S. ராமலிங்கம் செட்டியார் & பிரதர்ஸ்,
கோம்பை.

22 ஸ்ரீமான் P. S. குமாரசாமி ராஜா அவர்கள்,
இராஜபாளையம்.

குறிப்பு:— போஷக சந்தா குறைந்தது ரூபாய் 100.

# "பாரதி"

படங்களுடன் வெளிவந்துலவும் தேசிய மாலிகை.

## பொருள் அடக்கம்.

மாலை 3. செப்டெம்பர் & அக்டோபர் 1931. மணி 9, 10.


| தொடர் எண். | | பக்கம். |
|---|---|---|
| 1. | விடுதலை ... | 577 |
| 2. | வார்த்தைகள்—ஆசிரியர், "பாரதி." ... | 578 |
| 3. | குருகுலம்—ஸ்ரீமான். M. R. ஜம்புநாதன் அவர்கள் ... | 580 |
| 4. | ஆந்திர தேசத்தின் அபிவிருத்தி—<br>திரு. என். வேங்கடரமணன் அவர்கள் ... | 592 |
| 5. | பாலஸ்தீனமும் பிரிட்டிஷ் ஆதீனமும்—<br>ஸ்ரீமான். வி. எ. பெருமாள் அவர்கள் ... | 601 |
| 6. | வாசனைத் திரவியங்களின் பெருமை—ஆசிரியர், "பாரதி." | 611 |
| 7. | தேச நேசமும் தமிழகமும்—<br>திரு. S. சோமசுந்தர.பாரதியார் அவர்கள், M. A., B. L. | 614 |
| 8. | சாக்கரடீஸின் இறுதி காலம்—<br>ஸ்ரீமான். G. வாசுதேவன் அவர்கள், M. A. (Hons.) | 618 |
| 9. | இந்தியா, செல்வத்தை இழந்த விதம்—<br>ஸ்ரீமான். T. S. அவனாசிலிங்கம் அவர்கள், B. A., B. L. | 621 |
| 10. | மதுரை நாயக்கர்கள் காலத்துச் சேதுபதிகள்—<br>ஸ்ரீமான். K. G. கிருஷ்ணன் அவர்கள், B. Sc. (Hons.) | 628 |
| 11. | நம் நாட்டின் முப்பெரும் லக்ஷியங்கள்—<br>திரு. P. V. பத்மநாபன் அவர்கள், B. A., B. L. | 638 |
| 12. | ஆரம்பக் கல்வி—<br>ஸ்ரீமான். N. ரெங்கசாமி அவர்கள், B. A., L. T. | 644 |
| 13. | சுதந்திரம்—திரு. T. R. ராஜகோபால் அவர்கள். ... | 646 |
| 14. | வீர்மாலா கோட்மதே—திரு. M. சின்னச்சாமி அவர்கள். | 652 |
| 15. | சுயராஜ்யம் ஏன்?—திரு. சுத்தானந்த பாரதியார் அவர்கள். | 657 |
| 16. | ஆசிரியக் குறிப்புகள்: ... ...<br>1. அறிக்கை, 2. மகாத்மா காந்தியின் பிறப்பு விழா, 3. சுவாமி விபுலானந்தர், 4. வடுகபட்டியே, எழுந்திரு!, 5. மத சமூகச் சச்சரவுகள், 6. ஜனத் தொகை, 7. அழகணன் கைத்தொழிற் கலாசாலை, 8. அச்சுக்கூட மசோதா, 9. கே. வி. ராய் அவர்களின் பிரிவு, 10. தபால் கட்டண உயர்வு, 11. காந்திஜீயின் புகழ், 12. பெசண்டு அம்மையார், 13. சுதேச மன்னர்களுக்குச் சங்கடம், 14. கதர் விலை குறைந்துவிட்டது. | 663 |
| 17. | ஆராய்ச்சி மேடை: ... ... ...<br>1. சிரத்தானந்தா, 2. பொன் செய்யும் மருந்து, 3. மானுய வாழ்க்கை, 4. ருத்ர நாட்டியம். | 671 |


---

படம்:— சுவாமி விபுலானந்தா அவர்கள்.



ஸ்வாமி விபுலாநந்தா அவர்கள்.

ஓர் தேசிய மாதப் பத்திரிகை.

"எல்லாரும் ஓர்குலம் எல்லாரும் ஓர்இனம்
எல்லாரும் இந்தியா மக்கள்
எல்லாரும் ஓர்நிறை எல்லாரும் ஓர்விலை
எல்லாரும் இந்நாட்டு மன்னர்."—பாரதி.

ஆசிரியர்: ரா. நாராயணஸ்வாமி

Copy Right] உத்தமபாளையம். [Registered.

| மாலை 3 | பிரஜோற்பத்தி ஆவணி-புரட்டாசி<br>1931-ஞு செப்டெம்பர்மீ | மணி 9 |
| --- | --- | --- |


# விடுதலை.

விடுதலை! விடுதலை! விடுதலை!

பறையருக்கு மிங்கு தீயர் புலையருக்கும் விடுதலை;
பரவரோடு குறவருக்கும் மறவருக்கும் விடுதலை.
திறமைகொண்ட தீமையற்ற தொழில்புரிந்து யாவரும்
தேர்ந்தகல்வி, ஞானமெய்தி வாழ்வமிந்த நாட்டிலே. 1

ஏழையென்றும் அடிமையென்றும் எவனுமில்லை ஜாதியில்;
இழிவுகொண்ட மனிதரென்ப திந்தியாவில் இல்லையே.
வாழி கல்வி, செல்வமெய்தி மனமகிழ்ந்து கூடியே
மனிதர்யாரு மொருநிகர் ஸமானமாக வாழ்வமே. 2

மாதர் தம்மை இழிவு செய்யு மடமையைக் கொளுத்துவோம்;
வையவாழ்வு தன்னிலெந்த வகையிலும் நமக்குளே,
தாதரென்ற நிலைமைமாறி யாண்களோடு பெண்களும்
சரிநிகர் ஸமானமாக வாழ்வமிந்த நாட்டிலே. 3

—பாரதி.

# வார்த்தைகள்.

ரா. நாராயணஸ்வாமி, ஆசிரியர், "பாரதி."

நாம் வார்த்தைகளாலேயே நினைக்கிறோம்; நாம் வார்த்தைகளாலேயே பேசுகிறோம்; நாம் வார்த்தைகளாலேயே வேண்டுகிறோம்; நாம் வார்த்தைகளாலேயே உத்தாவிடுகிறோம். உலகத்தில் நாம் வாழ்வதற்கு வாக்குகளின்றி முடியவே முடியாது. வார்த்தைகள் மகா சக்தி வாய்ந்த பொருள். அவைகளைப் பேசினாலும் எழுதினாலும் மனிதனே நடுங்குகிறான்; அரசாங்கமோ அவைகளைக் கேட்டு நடுங்குகிறது. வார்த்தைகளாலேயே எத்தனையோ பிரமாண்டமான படைகள் நாசமாயின; எத்தனையோ ராஜாங்கங்கள் அழிந்தன; வார்த்தைகளாலே எத்தனையோ சக்ராதிபத்தியங்கள் ஸ்தாபிக்கப்பட்டன; எத்தனையோ மதங்கள் நிறுவப்பட்டன. ஆக்குவதும் அழிப்பதும் காப்பதும் வார்த்தைகளே. ஒரு சொல்லுக்காகவல்லோ, ஹரிச்சந்திர மகா ராஜா நாடு நகரம் அரசு அரண்மனை மனைவி மகன் யாவற்றையும் இழந்து அவதிப்பட்ட கதையைப் பாரத தேசம் நன்கறியும். ஒரு வாக்குக்காக உயிரையே சந்தோஷமாக அர்ப்பணம் செய்த சாக்ரடீஸை உலக மக்கள் அதிகம் அறிவார்கள். இவை போன்ற உதாரணங்கள் நூற்றுக் கணக்காகப் பல உண்டு. உண்மைப் புலவர் திருவள்ளுவனும் கவி கம்பநாட்டாழ்வாரும் வாக்கு வன்மையைப் பற்றி அதிகமாக விவரித்திருக்கிறார்கள். கெடுதி உண்டாக்குவதில் அம்பு வெடிகுண்டு முதலியவைகளுக்கு மேலாகவும், நன்மை உண்டாக்குவதில் அமிர்தம் சஞ்சீவி முதலியவைகளுக்கு மேலாகவும் வார்த்தைகள் இருக்கின்றன. வாக்குகளால் எத்தனையோ மனங்கள் நைந்தன; புண்ணாயின; சீர்கெட்டன; சிதைந்தன; நஞ்சாயின; தகிக்கப்பட்டன; ஆழ்த்தப்பட்டன; ஒடிந்தன. ஆனால் வார்த்தைகளால் எத்தனையோ பேர்களுக்குப் புது வாழ்வு உண்டாகி யிருக்கிறது; வெற்றி கிடைத்திருக்கிறது; சந்தோஷம் ஜனித்திருக்கிறது; ஊக்கம் பிறந்திருக்கிறது; நம்பிக்கை மலர்ந்திருக்கிறது; விடுதலை தோன்றியிருக்கிறது.

சரியாகவும் சக்தியுடனும் வார்த்தைகளை உபயோகிக்க, நாம் அவைகளைக் கற்றுக்கொள்ள வேண்டும். நல்ல அகராதிகளிலும் நல்ல நல்ல ஆசிரியர்களுடைய நூல்களிலும் நாம் கற்றறிய வேண்டும். தினந் தோறும் வார்த்தைகளைப் பாகுபடுத்தி அவைகளை அறிந்து கொள்ள

19654o



வேண்டும். வாக்குகளின் தாரதம்மியங்களைத் தெரிந்தாலல்லாது நாம் வாக்கில் வல்லமை அடைய முடியாது. உணர்ச்சியான வாக்குகளே மதிக்கப்படுகின்றன. அனாவசியமான வார்த்தைகளைப்பற்றி நாம் அதிகக் கவலைகொள்ள வேண்டும். சில தருணங்களில் பேசாமலும் சில தருணங்களில் பேசிக்கொண்டும் இருக்க வேண்டும். எதிலும் அளவுக்கு மிஞ்சிப் போகக்கூடாது. காரியமின்றி அதிகமாய்ப் பேசுவதைக் காட்டிலும் மௌனமாக இருப்பதே நல்லது. பேசுகிறவர்களுக்கும் கேட்கிறவர்களுக்கும் அதிகமாகப் பேசுவது தொந்திரவாயிருக்கும். வீணாகப் பேசாதபடி மௌனம் சாதித்து, வேண்டும் விஷயங்களைப்பற்றி மனதில் ஆலோசிக்கப் பயிற்சி செய்யுங்கள். எத்தனையோ வாக்குவன்மை யற்றவர்கள், தங்களின் விடா முயற்சியான சாதனையால் பெரும் பிரசங்கிகளாக விளங்கி யிருக்கிறார்கள். நாம் உபயோகிக்கும் வார்த்தைகள், நம்மை உலகத்திற்குக் காட்டுகின்றன. நம்முடைய பிரியங்களையும், நம்முடைய குணங்களையும், நம்முடைய அறிவின் அளவையும் அனுபவத்தின் அகலத்தையும் ஆழத்தையும், நம்முடைய குற்றங்களையும் குறைகளையும் நமது சொற்கள் வெளிக்குக் காட்டுகின்றன.

நீங்கள் எப்படிப் பகுத்தறிவுடன் நல்ல நேசர்களைத் தெரிந்தெடுக்கின்றீர்களோ, அவ்வாறே அருமை வாக்குகளைத் தெரிந்தெடுங்கள். உயிர் உள்ள வஸ்துக்கள் போலவே வார்த்தைகளினுடைய சக்திகளையும் அருத்தங்களையும் பொருத்தங்களையும் அறியுங்கள். உங்களுடைய வார்த்தைகளில் தவறு உண்டாவதை அறிந்தவுடனே அதைத் திருத்திக்கொள்ளுங்கள். ஒரு காரியத்தின் சிறப்பான வெற்றிக்குக் காரணம் அதைப்பற்றி இடைவிடாக் கவனிப்பே.

புகழவும், ஆனந்தப்படவும், அனுபவிக்கவும், ஏற்றுக்கொள்ளவும், சிலாகிக்கவும், சேவை புரியவும், மரியாதை செய்யவும், ஒப்புக்கொள்ளவும், போற்றவும், கௌரவிக்கவும், திருப்தி செய்யவும், தைரியமூட்டவும், உற்சாகிக்கவும், பட்சாதாபப்படவும். மன்னிக்கவும், உதவவும், சிபார்சு செய்யவும், மதிக்கவும், காப்பாற்றவும், சிநேகிக்கவும், சந்தோஷிப்பிக்கவும், உயர்த்தவும், ஆறுதல் அளிக்கவும், பலப்படுத்தவும், ஆவேசம் அளிக்கவும், உபசரிக்கவும், முகமன் கூறவும், தேறுதல் சொல்லவும், வந்தனம் அளிக்கவும், பரஸ்பரமா யிருக்கவும், வியக்கவும், அங்கீகரிக்கவும், சம்மதிக்கவும், போற்றவும், நன்றி பாராட்டவும், நேசிக்கவும், அன்பால் உருகவும் கற்றுக்கொள்ளுங்கள்.

# குருகுலம்

ஸ்ரீமான் M. R. ஜம்புநாதன் அவர்கள்

குருகுலத்தின் அவசியத்தை பாரத மக்களுக்கு நவீனமாய் அறிவித்தவர் மகரிஷி தயானந்தரேயாகும். கடவுளுக்குப் பிறகு குருகுலத்தைப் பற்றியே அவர் மகா ஜனங்களுக்குக் கூறுவது வழக்கம். ஆனால் அதை ஸ்தாபிக்கும் சந்தர்ப்பம் அவருக்கு வாய்க்கவில்லையாயினும், அவரின் ஆப்த சீடரான சுவாமி சிரத்தானந்தர், அவர் எண்ணத்தை நிறைவேற்றி இந்தியாவில் புதிய சகாப்தத்தைப் புலனாக்கினார். அதற்குப் பிறகு பற்பல குருகுலங்கள் நாட்டில் தோன்றி எங்கும் புத்துயிரைப் புலனாக்கிற்று. நமது தமிழ் நாட்டிலும் புனிதமான குருகுலங்கள் வேண்டுமென அன்பர்கள் முயன்று வருகின்றார்கள். ஆதலால் குருகுலத்தைப் பற்றிச் சற்று சிந்தனை செய்வது மிகையாகாது.

குருகுலம் என்றால் குருநாதரின் குடும்பமாகும். சிறுவன் தாய் தந்தையுடன் வாழ்வது போல் அங்கு குருநாதரிடம் வசிப்பதால், அவ்வாழ்க்கையே குருகுல மென்பார்கள். அங்கு ஏதோ கல்வி கற்கப் போவதாகக் குழந்தைகள் எண்ணலாகாது என்பதற்காகவே அதைக் கல்விச்சாலை யென்றழையாமல் குருகுலமென்றே கூறினார்கள். கல்வி கற்கவேண்டும் எனக் கூறியவுடன் குழந்தைகள் கல்வி என்றால் என்ன? எனக் கலங்கிக் கசப்புடனுவார்கள் எனக் கருதி "குழந்தையே, நீ இனி புதிய தந்தையுடன் சென்று பற்பல பாலர்களுடன் களிப்புடனாகிக் கானகத்திலே வசிக்கவும்" என உற்சாகமளிப்பார்கள். "நான் கல்வி கற்கிறேன்" என்னும் எண்ணம் வரலாகாது, "நான் உறங்குகிறேன்" என ஒருவன் உறக்கம் வராமல் கஷ்டப்படும்பொழுதே நினைக்கிறான். நல்ல தூக்கத்திலே ஒருவன் "நான் தூங்குகிறேன்" என நினைப்பதேயில்லை. அங்ஙனமே குருகுலத்தில் வசிக்குங்கால், "நான் கல்வி கற்கிறேன்" என்னும் எண்ணம் வரலாகாது என்னும் நினைவுடனேயே, கல்விச்சாலை என்னும் பெயரை அளிக்கவும் அவர்கள் அஞ்சினார்கள். அதுவுமன்னியில் குருநாதர்கள் தாங்கள் ஏதோ கல்வியை மற்றவர்களுக்கு அளிப்பதாகவும் கருதுவதில்லை. கல்வி



என்பது கடலாகும். நாம் அறிவதோ ஒரு அணுவின் சமமாகும். ஒருவேளை நம்மிடமிருந்து தூலமாய்க் குழந்தைகள் உணர்ந்தபோதிலும், அவர்களிடம் நாம் தினந்தோறும் கற்பதோ அதிகம். ஆதலால் கல்வி கற்பிக்கும் நிலயம் என அவர்கள் கூறவும் கலங்கினார்கள். கல்வி நிலயம் எனக் கூறிவிட்டால், பிறகு கல்வி நிலயத்தினின்றும் தோன்றியவன் என கர்வமுடன் ஒருவன் கூறலாம் என்னும் கருத்துடன் கல்விக் கழகம் என அவர்கள் அழைப்பதுமில்லை.

## கவனிப்பு

குருநாதரிடம் குழந்தை சென்றவுடன் தனது பாலன்போல் அவர் அவனைச் சதாகாலமும் பாதுகாப்பார். அவன் ஐம்புலன்களை நோக்குவார்; காயத்தைக் கவனிப்பார்; அங்கங்களை எல்லாம் உற்று நோக்குவார்; மனத்தைக் காண்பார்; புத்தியைப் பரிசீலனை செய்வார்; சித்தத்தின் வன்மையை எண்ணுவார்; சங்கற்பமுள்ளவனா? எனச் சிந்தனையிலாவார்; தியான முள்ளவனோ? எனத் தயங்குவார்; அறிவின் வன்மையை அறிவார்; திடமுள்ளவனா? எனக் கலங்குவார்; ஞாபக சக்தியுண்டோ? எனச் சோதனை செய்வார்; ஆசையும் நம்பிக்கையும் நிறைந்தவனா? அவன் பிராணன்களின் நிலையென்ன? அவனுக்கு வீரம் பொறுமை அடக்கம் உண்டோ? நிலை நினைவும், நெறிகுணமும், புலப்பயிற்சியும் புலனாகின்றதா? எனப் பார்ப்பார். சத்தியமென்னும் பெரும் நோக்கத்தில் சாய்ந்துள்ளானா? என்பதைச் சிந்தனை செய்துகொண்டு வருவார்.

## பயிற்சி

குழந்தையை அழைப்பார். வெகு தூரத்திற்கப்பாலுள்ள பொருளைப் பார்க்கிறாயா? என்பார். பார்வை குறைவானால், பற்பல முறைகள் உற்றுநோக்கி உற்சாகமுடன் அவன் கண்களுக்கு முயற்சியளித்து வன்மையுடனாக்குவார். நிலையான பார்வையுண்டோ? எனப் பரீட்சை செய்வார். இல்லையேல் பரிகாசஞ் செய்து குறிப்பிட்ட காட்சியிலே கனிந்து தன்னையும் மறந்து போகவேண்டு மென்பார். கருணையான கண்களவசியம். ஏழைகளைக்கண்டு கண் கலங்குகின்றதா? என நோக்குவார். இல்லையேல் அதற்காதரவான ஈவு இரக்கத்தை எழுச்சியாக்குவார். மலர்ந்த கண்களுடனாகி எங்கும் மகிழ்ச்சியை நிலவச் செய்கிறானா? என்பதை நோக்கிக் கண் குளிர அவனைக் கண்டு உண்மையை அறிவிப்பார். இங்ஙனம் அவன் கண்களைக் கவனித்துச் சூட்சமங்களை அறிவிப்பதுபோல், காது, நாவு, மூக்கு, காயம் முதலியவைகளுக்கும் உண்மையை உணர்த்துவார்.

கை கால்களுக்குத் தேகப்பயிற்சி யளிக்க இக்ரமங்குமைசந்து எல்லாவிதமான யோக முறைகளால் தேகத்தின் பல நிலைகளான ஆசனங்களை அறிவிப்பார். யானை குதிரை யேற்றம், மலை மடுவு செல்லல், சலம் நீந்தி வானம் குதித்தல், ஓட்டம் ஆட்டம் முதலியவைகளை எல்லாம் ஆனந்த நிலைகள் எனப் புலனாக்குவார். "ஒரு செயலைச் செய்யவேண்டுமானால் மனமன்னியில் செய்யமுடியாது. மனமில்லையேல், நீ காணமுடியாது; கேட்க முடியாது; புசிக்க முடியாது; முகருவது கஷ்டம், நடப்பதும் கனவாகும்" எனத் தனது பயிற்சிபெற்ற மனத்தால் அவர்களுக்கு மனோவன்மையைப் புலனாக்குவார். புத்தியென்பது அவசியமான பொருள். கண்ணில்லாதவன் காண்பதற்குக் கஷ்டமாவதுபோல் புத்தியற்றவன் பெருங் கொடுமைகளுக்காளாவான் என்பதைக் கண்டு புத்தியில் பெருகி வருகிறானா? எனப் பரிசீலனை செய்து பயிற்சி யளிப்பார். சுயமான சிந்தனையவசியம். சிந்தனையற்றவன் நடமாடும் சுடுகாடாகும். குழந்தையின் சிந்தனையை இரவும் பகலும்நோக்கிச் சிந்தனைச் செல்வத்தைப் பெருக்குவார். மனிதர்கள் சற்று தியானமானாலொழிய சிந்தனை பெருகாது என எண்ணிக் குழந்தைகள் தினந்தோறும் சிறிய காலமாவது தியானத்தில் தோய்ந்திருக்க முயற்சி யளிப்பார். மறுபடியும் அறிவின் அற்புதத்தை அடிக்கடி அவனுக்குப் புலனாக்குவார். அறிவிருந்தும் பயனென்ன? அதைத் திடமுடன் சாதனத்திலாக்கும் சக்தியுண்டோ? எனநோக்கி, "திடமுள்ளவனாயிருந்தாலொழிய தரணியில் வாழ்வது துர்லபம் என்னும் தூய நெறியைத் தெளிவாக்குவார். பழைய செயல்களை அறிந்து புதிய வாழ்க்கைக்குப் பயன் செய்யத் திடமான நினைவிற்கு ஞாபகசக்தி அவசியமென்று, பாராமல் பல அமுதமொழிகளை இளம் பருவத்திலேயே மனப்பாடம் செய்யச் சந்தர்ப்பமளிப்பார். மனிதர்கள் புவியிலே முன்னேற வேண்டுமானால், உற்சாகமவசியம். அவ்வுற்சாகத்திற்கு உலகத்தைப் பிடித்து ஆட்சி செய்து பூமண்டலாதிபதியாக வேண்டும் என்னும் ஆசை அத்தியாவசியமாகும். அவ்வாசையை இளைஞனுக்கு அளிப்பார். அவ்வாசை கொழுந்துவிட்டெரிய நம்பிக்கை என்னும் அனலை மூட்டிவிடுவார். அந்தப் பெரிய நம்பிக்கையினால் பெருஞ்செயல்களைச் செய்வதற்கும் அவனுக்கு உற்சாகம் தோன்றிவிடும். அதற்கு தேகத்தில் வன்மையுண்டா? என்பதைக் கவனிப்பார்.

தேக வன்மை என்பது மூச்சின் வன்மையாகும். மூச்சின் பலமில்லையேல், மனோ பலம் குறைந்து அங்கங்களின் சக்தியும் குறையும். பெருமூச்சு விடுபவன் பாழ்வழியை நாடுபவனாவான். ஆதலால் பெருமூச்சு விடலாகாது என்று, சமத்துவமான மூச்சை



விடுவதற்குப் பயிற்சி யளித்துச் சீவர்களின் சூட்சமத்தைச் செம்மை யாக்குவார். சுவாசத்தின் சத்தியத்தை அறிந்தால், ஐம்புலன்களும் ஐக்கியமாகி, சேனைகளுடன் சேர்ந்த சித்தம் சிறப்புடனாகி, நரம்பு நாடியின் குறைகள் நீங்கிப் பெருமையுடனாவதற் கேற்ற புனித சாதனங்களைப் புலனாக்குவார்.

தேகத்திற்கும் மனத்திற்கும் அவசியமான அற்புத ரகசியங்களை அறிவித்து, வீரமுடன் வாழ்ந்தாலொழிய வையகத்தில் வாழ முடியாது. மரியாதையுடன் மலர்வது கஷ்டமென வீரத்தை அவன் சுபாவத்திலாக்கி, அஞ்சா நெஞ்சுள்ளவனாக அமுத வாழ்க்கையின் அறிவை அளித்துவிடுவார். அறிவைப் பெற அவசரப்பட வேண்டாமெனக் குழந்தைகளுக்குப் பொறுமையுடன் பயிற்சியாக்க வேண்டுமென்பதைப் புலனாக்கி, பச்சை யோணான் போல் நினைவை மாற்றும் விபசார எண்ணங்களின்று மனத்தைத் தூய்மையாக்கி, நிலைநினைவளித்து நெறியின் குணத்தையும் எல்லா அங்க சாதனங்களையும் அவனுக்குச் சுபாவமா யளித்து விடுவார். சகத்திலே ஒரு நோக்கமுண்டு. சத்தியத்தைச் சதா காலம் நாடுவதே அதுவாகும். அதுவே உன் நோக்கமா யிருக்க வேண்டுமென அவன் நினைவிலாக்கிவிடுவார். இவைதான் புராதனத்தில் குரு நாதரால், குருகுலத்தால், செய்யப்படுவது.

## நவீன கலாசாலைகள்

சர்வ கலாசாலை என்பார்கள். அங்கு இயந்திரசாலைகளிலுள்ள தொழிலாளிபோல் கூலிக்கு மாரடிக்கும், நான் கற்றவன் நான் படித்தவன் என, படாடோப நாமம் தரித்தவர்களுண்டு. பெருங் கட்டிடங்கள் கட்டிச் சூரியனையும் காற்றையும் மறைத்த வீட்டிலே ஒளியும் கந்தமும் நீக்கிக் கலக்கத்தை யளிப்பார்கள். கல்வி என்றால் பெருங் கலக்கமெனக் குழந்தைகள் கருத்திலாகும். தந்தைக்குப் பதிலாய் யஜமானனையே கண்டு தன்னை அடிமையென நினைத்து ஆனந்தமன்னியில் வாழ்கின்றார்கள். நான் படித்துப் பாசாகவேண்டும், உடனே கல்விக் களஞ்சியம் என்னும் பட்டத்தைப் பெறுவேன் என்னும் எண்ணங்களுடன் கற்றுக் கலாசாலையினின்று வெளி வந்தவுடன் கர்வமுள்ளவனாகப் பயிற்சி பெறுகின்றார்கள். இப்பொழுதுள்ள குருநாதர்கள் தாங்கள் ஏதோ மேதாவிகள் எனப் பறை சாற்றிக்கொண்டு குழந்தைகளின் தன்னம்பிக்கையைக் கொலை புரிகின்றார்கள். "நீங்கள் எல்லாம் குழந்தைகள்; உங்களிடம் எனக்குக் கற்கவேண்டிய தொன்றுமில்லை; உங்கள் மனத்தின் நினைவை எனக்குரைக்க வேண்டாம்" எனக் கூறி 'நான் சொல்லுவதுபோல் செய்தால் பாஸ் செய்வீர்கள்"

எனச் சொல்லி உண்மையான கல்வியின் ஊற்றை அடைத்தும்விடுகிறார்கள். கற்றவன், கலாசாலை எனக் குறிப்பிட்ட ஸ்தலங்களுக்குப் பெயரளித்து நாட்டிலுள்ள பாமர சன சமூகத்தை கயவன் கல்லாதவன் எனக் கருதும் வண்ணம் செய்து நாட்டிலே வேற்றுமையின் விதையைத் தெளிக்கிறார்கள்.

குழந்தைகள் நவீன கலாசாலைகளுக்குச் சென்றவுடன் அடிமைகள் போல் கருதப்படுவார்கள். குழந்தைகளின் ஐம்புலன்களை ஒருவரும் கவனிப்பதில்லை. காயத்தையோ நோக்குவாரில்லை. குழந்தைகளின் அங்கங்களுக்குச் சாதனங்களும் அளிப்பதில்லை. மனத்தை மருட்டுவார்கள். புத்தியைப் படுகொலை புரிவார்கள். சித்தத்தின் வன்மையைக் கண்டால் சண்டிப்பயல் என்பார்கள். சங்கற்பம் குழந்தைகளிடம் கண்டால் பிடிவாதக்காரன் எனப் பரிகாசஞ் செய்வார்கள். தியானமுள்ளவனால் திக்பிரமை பிடித்தவன் என நிந்திப்பார்கள். அறிவதிசமானால் அதிகப்பிரசங்கி என உதறித் தள்ளுவார்கள். திடமுள்ளவனால் கலாசாலையினின்று துரத்தி அவமானஞ் செய்வார்கள். ஆசையும் நம்பிக்கையுமிருந்தால் ஆகாயத்தில் பறந்து பகற் கனவு காண்பவன் என, ஏளனம் செய்வார்கள். மூச்சைப் பழக்கினால் பழைய குடுக்கையெனப் பிதற்றுவார்கள். வீரமுள்ளவனுக்கு தண்டனையளிக்கப்படும். பொறுமையும் அடக்கமுமுள்ளவனை முட்டாளென்று நேர் முகமாய்க் கூறாமல் சாது எனச் சிதறடிப்பார்கள். நிலைநிற்கும் நெறி குணத்திற்கும் பதிலாய், மனோ சுதந்திரம் என்னும் பெயரால் தவளைச் சித்தத்தைப் போற்றுவார்கள். புலப்பயிற்சி புரிவானால் சாப்பாட்டு ராமன் எனப் பெயரிடுவார்கள். சத்தியத்தின் ஸ்தானத்தில் உண்டு உறங்கி உல்லாசமாயிருப்பதையே பெரும் நோக்கமெனக் காரிருளிலே குழந்தைகளை நடத்திச் செல்லுவார்கள். குழந்தைகளின் கண்களைக் கவனிப்பாரில்லை. கண்ணாடியணிந்து குருடராகவும் என்பார்கள். சொந்த புஸ்தகங்களைத் தவிர வேறு எதையும் காணவேண்டாமென்பார்கள். கல்விப் பிள்ளைகளுக்கு கருணை விழியும் கூறிய காட்சியும் கூடாதென கொடும் ஒளியாலும், கலங்கக் கண்களால் அவர்களைக் கலங்கச் செய்வது கண்கூடு. கண்களை இங்ஙனம் அவமதிப்பதுபோல் மற்றப் புலன்களையும் பாழாக்கிவிடுவது யாவருமறிந்த விஷயம்.

தேகப் பயிற்சி என்பதோ சூன்யம். தேகத்தைக் கவனித்தால் சர்க்கஸ்காரன் எனக் கூறித் தேகங்களை நடமாடும் பிணமாக்கிவிடுவார்கள். இக் கலாசாலைகளில் படிப்பவர்கள் அற்பாயுட்களில் அழிவது அனைவரும் அறிவதாகும்.



மனோ வன்மையுடையவனாவதற்கு எந்த சிட்சையும் அளிக்கப்படுவதில்லை. அங்ஙனம் அளிக்கப்பட்ட போதிலும் மற்றவர்களுக்கு அடிமையுடையவனாக எந்த மனம் அவசியமோ அந்த மனத்தையே பெருக்கி, சேதனமாயுள்ள மனத்தைச் சடப்பொருளான அச்சுப் பிள்ளையார் போல் குழந்தைகளைப் பொம்மையாக்கும் விந்தைகளைப் புவியிலுள்ளோர் அறிவார்கள்.

நடுத் தெருவிலே ஒரு சிறுவனை அடித்தால் கூட்டங் கூடிவிடும். அவனை ஒருவேளை கொன்றுவிட்டால், கொலை புரிந்தவனைப் பிடித்துக் கொடுந் தண்டனை விதிப்பார்கள். ஆனால் நவீன கசாப்புக் களங்களான கலாசாலையிலே மனிதர் மேன்மையாகும் புத்தியைப் படுகொலை செய்வது பாமரனுமறிவான். நான் பி. ஏ. பட்டம் பெற்றவன்; நான் புசிப்பதெங்ஙனம்? எனப் புத்தி தடுமாறியவனின் புன்மையை அறியாதவன் எவன்? "நீ சுதந்தரமாய் நினைக்காதே—நான் சொன்னதுபோல் நீ பதிலழிக்க வேண்டும். இல்லையேல் உன் வாழ் நாட்களை நாசமாக்கிவிடுவேன்" எனச் சட்டாம்பிள்ளை—ஆசிரியர்கள், நினைப்புக்களைச் சித்ரவதை செய்வது சற்று சிந்தனை செய்தால் புலனாகும். இதுவரை ஆயிரக் கணக்காய் பட்டதாரிகள் தமிழ் நாட்டில் தோன்றிய போதிலும், அவர்களில் ஒருவரையாவது நீங்கள் நினைவு மிகுந்தவராகக் காணமுடியுமோ? தியானம் செய்வதற்கோ சந்தர்ப்பமளிப்பதில்லை. "நீங்கள் தியானஞ் செய்து ஒரு விதமான உண்மையும் காணவேண்டாம்" எனக் கூறி மனத்தை மாசுபிடிக்கச் செய்யும் இந்தக் கருஞ் சாயக் கல்வியால் கனிந்து நமது கண்ணெதிரில் கொல்லப்படுவதைக் காண்பதால் நமது நெஞ்சு துடிக்கின்றது! கலாசாலையில் அறிவு என்பது விருத்தி செய்யப்படுவதில்லை. அதற்குப் பதிலாய் ஆறு போல் மூட்டை புஸ்தகத்தைச் சுமந்துபோகக் கற்கப்படுகிறார்கள். கழுதையைப் போல் சுமந்து காகிதம் புசிக்கும் இரண்டு கால் பிராணியாகக் குழந்தைகள் சபிக்கப்படுகிறார்கள். திடமுடனிருந்தால் கஷ்டங்களை எதிர்க்கச் சந்தர்ப்பம் தோன்றும், சமயோசிதமாய் நீங்கள் சுகமாயிருப்பதற்கு முயல வேண்டும். ஜீவன் என்பது சாந்தமான சுக வாழ்க்கையே எனச் சொல்லிக் குழந்தைகளைச் சித்தச் சோளியாய்ச் செய்யும் இக் கலாசாலைகளின் கொடுமைகளை யறியாதவருண்டோ?

ஞாபகசக்தி அவசியமெனச் சொல்லி, அனாவசியமான குப்பை கூளங்களை ஞாபகத்திலேயே செலுத்தி ஞாபக சக்தியை சோற்று ராமன் போல்-சுமக்கும் சடக்கருவி போல் செய்யும் பித்தலாட்ட யந்திரங்கள் அமைந்ததே கலாசாலைகளாகும்.

15 வருடம் படித்து உணவை சம்பாதிக்கவும் முடியவில்லையானால் புலியைக் கட்டியாள வேண்டுமென்னும் புனிதத் தோற்றம் அருமைக் குழந்தைகளுக்குக் கலாசாலையி லுண்டாகுமோ? எனக் கருதிப் பாருங்கள். பெரும் தோற்றமில்லையேல் மனிதருக்கு பெரும் துக்கமே புலனாகும். நவீனக் கலாசாலைகள் உற்சாகத்திற்குப் பதிலாகக் குழந்தைகளைத் துக்க வடிவமாக்கும் மூதேவிகள் வாசஞ் செய்யுமிடமாகும்.

ஆசை என்றால் பேராசை எனப் படாடோபஞ் செய்து குழந்தைகளின் மனத்தினின்று ஆசை என்பதையே அணுவுமில்லாமல் அழித்து விடுகிறார்கள் என்பதில் உங்களுக்குச் சந்தேகம் தோன்றினால், வருடந்தோறும் தற்கொலை புரிந்து கொள்ளும் மாணவர்களிடமிருந்த அறிந்து கொள்ளலாம். நிராசையாயும் நிர்உற்சாகமாயுமுள்ள இளம் பிணங்களைப் பார்க்க வேண்டுமானால் கலாசாலைகளுக்குச் செல்லலாம்.

உலகத்திலே உத்தமமாயுள்ளது நமது உயிராகும். நமது உயிரைக் காப்பாற்ற என்ன வேண்டுமானாலும் செய்து கொள்ளலாம் என அறிஞர்கள் கூறுவது வழக்கம். அவ்வுயிருக்கு ஆதாரவாயுள்ளது நமது மூச்சாகும். மூச்சில்லையேல் ஒன்றுமே யில்லை. மூச்சு வன்மையுடனானால் கண் நன்றாய்க் காணும்; செவி சிறப்புடனாகும்; தேகம் வன்மை பெறும்; நா உரமுடனாகும். எச்செயலிலும் வன்மை பெறுவான். ஆனால் பெருங் கோபுரம் போல் கட்டடம் கட்டிப் புனிதக் காற்றை இங்கு மங்கும் அடைத்துப் புழக்கம் புலனாக்கி நமது மூச்சை மலமுடன் சேர்த்து விடுகிறார்கள். அதுவுமன்னியில் நூற்றுக் கணக்கான மாணவர்களை ஒரு அறையிலே அடைத்து, காற்றை சாக்கடையாக்கிக் குழந்தைகளைத் தீராத நோய்களுக் குள்ளாக்கித் துன்பங்களை நித்தியமாய்த் தாண்டவமாடச் செய்யும் கலாசாலைகளை எமபுரி எனச் சொல்லாமல் என்னவென்றுரைப்பது?

வீரத்தை ஆவேசமெனப் புகன்று பேடித்தனத்தைப் புகழும் நிலையம் காண வேண்டுமானால் கலாசாலைக்குச் செல்லவும். அசத்தியமான சட்டத்திற்கு உள்படப் போவதில்லை என ஒருவன் வீரமுடன் வெளிச் சென்றால், அவன் ஒழுக்கத்திற் குட்படாதவன். அஞ்சாமல் பொய் புகலும் கலிகால அரக்கனின் நிலயத்தைக் காண வேண்டுமானால் கலாசாலைக்குச் செல்லவும். லட்சக் கணக்காய் குணம் நிறைந்த குடியானவர்கள் காந்தியின் ஆணைக்கு எழுந்தார்கள். கலாசாலையினின்று மாணவர்கள் இதுவரை வெளிவராம விரும்பி[illegible]வர்களிடம் வீரம் என்பது குதிரைக் கொம்பு என



எங்கும் காட்சியாக்கி விட்டது. ஒரு வேளைப் பிண்டத்திற்கு தேகத்தை விற்பவனை அவதூறு செய்து விபசாரன் என நிந்தனை செய்கிறோம். காலத்தை எல்லாம் சுகமாகக் கழிக்க மனத்தை ஒவ்வொரு இமைப் பொழுதும் விற்கக் கற்பிக்கும் கலாசாலைகளைக் குணவேஷ மணிந்த விபசார விடுதி எனச் சொல்லாமல் என்னவென்றழைப்பது? கண்டதே காட்சியென வற்புறுத்தி, எங்ஙனமாவது சாந்தமா யிருப்பதே சிறந்த வாழ்க்கை எனச் சொல்லிச் சுகமாய் உண்டு உறங்கி உல்லாசமா யிருப்பதே உத்தம வாழ்க்கை என்பதை ஒவ்வொரு விநாடியும் சூட்சமமாய் வற்புறுத்தும் இக் கலாசாலைகளினின்றும் கனிந்த புருடர் சிலராவது கடந்த 80 வருடங்களாக இதுவரைத் தோன்றாமலிருந்தும் ஏனோ? ஜனங்கள் ஏனோ இன்னம் அதற்கு மதிப்பளிக்கிறார்கள்? ஆனால் விநாச காலத்தில் விபரீத புத்தி விளங்குமென்பார்கள். அந்த விபரீத புத்திதானோ நம்மைச் சூழ்ந்துகொண் டிருக்கிறது என அஞ்சுகிறோம்.

ஆனால் இந்த விபரீத புத்தியை விலக்க அறிஞர்கள் பலர் தோன்றியுள்ளார்கள். நவீனத்தில் உண்மையான குருகுலத்தை எங்ஙனம் ஸ்தாபனஞ் செய்யலாமென்பதை இனி கவனிப்போம்.

## குருநாதனாயிருப்பதற்கு அருகர் எவர்?

ஆத்மஞான மறிந்து ஆலஸ்யமழிந்து சுக துக்கம் சகித்துத் தர்மத்திலே நித்தியமாய்த் தோய்ந்து, கோடி ரூபாயானாலும் அதர்மத்தை எண்ணாதவனே குருநாதராகும்.

அன்னியர்களின் அபிப்பிராயத்தைத் துரிதமாயறிந்து, சாவதானமாய்ச் செவியுற்று நிஷ்காம கர்மமுடனாகி அணுவினின்று அகண்டவரை அறிந்து, தனம், மனம், தனத்துடன் எல்லாச் செயல்களையும், காமம், குரோதம், மோகம் முதலியவைகளினின்று கழிந்து, கனிந்த குணமுள்ளவனே குருகுலத்திற்கு அதிபதியாக அருகன்.

செவியுற்றதைச் சித்தத்திலே சாய்த்துச் சத்தியந்தானா? என உணர்ந்து கொடுமைகளைக் கழித்துச் சதா களிப்புடனாகிச் சமூக சேவையில் சித்தமுள்ளவனே குழந்தைகளைப் பாதுகாக்க அருகனாவர்.

கிட்டாததை விரும்புவதில்லை; நஷ்டமடைந்ததை நினைப்பதில்லை; விபத்திற்கஞ்சி சத்தியத்தினின்று பிரியார்; குழந்தைகளைத் தெய்வமெனக் கருதுவார்.

எந்த முட்டுக்கட்டையும் அவரை மயக்காது. சீதமும், உஷ்ணமும் அவரை நாடாது. பெருமையையும் பயத்தையும் அவர் லட்சியஞ் செய்வதில்லை.

அந்நியர்களின் உதவி பெற்றால் தன் சித்தாந்தத்திற்கு இடையூறு தோன்றுமெனப் புலனானால் அவ்வுதவியை அழைப்பதில்லை.

ஜாதி மதத்தைப் பாரார்; உயர்வு தாழ்வை நோக்குவதில்லை; பொன், பொருளை பெரிதெனக் கருதார்; பட்டும் பொன்னாபரணங்களும் அணியார்.

'பூமண்டலத்தை அளித்து உனக்குப் பட்டாபிஷேகம் செய்கிறேன்' என மகா ஜனங்கள் புகன்றாலும், குழந்தைகளுக்குக் கற்பிக்கும் புனிதப் பணியினின்றும் பிரியார்.

புவியிலே குழந்தைகளைத் தவிர வேறு பெருமையான பொருளிருப்பதாக அவர் கனவிலும் கருதார். நடமாடும் கடவுள் என அவர்களைக் கொண்டாடுவார்.

குழந்தைகளுக்கு ஊழியஞ் செய்வதைவிட வேறு வேலை இருப்பதாக அவர் எண்ணுவதில்லை. இகமும் பரமும் இணைந்துள்ள பரமபதம் ஒன்று உண்டென்றால் அது குழந்தைகளின் நிலயம் என்பார்.

குழந்தைகள் ஆடினால் களிப்புடனாவார்; கானஞ் செய்தால் குதூகலமாவார்; கும்மாளமடித்தால் கொண்டாட்டமாவார்; இங்குமங்கும் ஓடுவார்; குழந்தைகளை நோக்குவார்.

குழந்தை கலங்கினால் கண்ணீர் விட்டழுவார்; களைப்படைந்தால் தட்டிக் கொடுப்பார்; காயம், சுனலுடனானால் தானும் கூடப் படுத்துச் சிகித்ஸை செய்வார்.

குருநாதர் குழந்தைகளுடன் சேர்ந்துண்பார். சமமாய் நீர் பருகுவார். வேற்றுமையன்னியில் தன் குடும்பமெனவே எண்ணுவார்.

அவருக்கு மந்த புத்தியுள்ள மகனைக் கண்டால் பிரியமதிகம். தாயானவள் தன் நொண்டிக் குழந்தையை அதிகமாய் நேசிப்பது போல் சற்று புத்திக் குறைந்தவனைக் கண்டால் பிரியமதிகம்.

நான் என் வீட்டிற்கும் தபால் எழுதப்போவதில்லை. தூலமான தாய் தந்தையைவிட ஞானசட்சுவான குருநாதரே எனது தாயும் தந்தையுமாகும் என குழந்தைகள் கூறும்.



## குருகுலத்தில் குருவின் தின வேலைகள்

காலையில் துரிதமாய் எழுந்திருப்பார். தன்னுடைய நித்திய கடன்களை முடித்துக்கொண்டு குழந்தைகளை எல்லாம் எழுப்புவார். பிறகு வெளியில் சென்று வந்தவுடன் ஆனந்தமாய் விடியற்காலையில் இங்குமங்குமோடி ஆடிப்பாடிக் குதித்துத் தேகப்பயிற்சியில் குழந்தைகள் அறியாமலே தோயும்வண்ணஞ் செய்து அமுத நீரிலே நீந்தி அவர்களுடன் கரையேறி, உபாசனைக் கிருகம் சென்று உலர்ந்த உடை அணிந்து, அனைவரும் ஒன்றாய்ச் சேர்ந்து ஈசோபாசனை செய்வார்கள். பிறகு பால் பருகுவார்கள். அப்பால் பொழுது விடியும்; மறுபடியும் விளையாட்டம்; குதிரையுண்டு; யானையுண்டு; மலையையும் பார்; நதியையும் நோக்கு; மரத்திலேறு; கம்பம் பழகு; சிலம்பமாடவும், குஸ்தி செய்யலாம். நாணேற்றவும் உனக்கு எது வேண்டுமானாலுஞ் செய்யவும். ஆனால் இணைந்து ஆனந்தமுடன் ஒன்று சேர்ந்து விளையாடவும் எனச் சொல்லி உற்று நோக்குவார். விளையாட்டில் ஒருவனுக்குப் பிரியமில்லையானால், தானும் அவனுடன் சென்று கொஞ்சிக் கூத்தாடி அவனுக்குக் குதூகலமளிப்பார். விளையாட்டம் முடிந்தவுடன் குழந்தைகளை நதியின் கரையிலோ, மரத்தின் நிழலிலோ, மலையின் வாரத்திலோ சூரியன் நட்சத்திரங்காண உட்காரவைத்து ஏதோ கதை சொல்வார்; பெரியார் சரித்திரம் கூறுவார். பிறகு எண்ணும் எழுத்தும் எண்ணுவார்கள். உடனே மறுபடியும் பிரிந்துவிடுவார். பகலிலே சற்று களைப்பாறுவார்கள். பிறகு சற்று படிப்பார்கள். மறுபடியும் மாலையிலே தேகப்பயிற்சி, ஈசோபாசனை; இரவு போஜனமாகும். பிறகு ஆனந்தமாய் நித்திரையிலாவார்கள்.

## குருநாதர் எங்ஙனம் கற்பனை செய்வார்?

கற்பனை என்பது அங்கு இல்லை. தான் கற்றவன் எனக் கருதினாலல்லவோ கற்பனை. கற்பனை என்றால் ஏதோ இல்லாததை ஒன்று திணிப்பதாகும். அல்லது தெரியாததைச் சொல்லிக் கொடுப்பதாகும். ஆனால் இங்கு குருநாதர் உனக்கு இது முன்னரே தெரியுமே, நீ மறந்துவிட்டாயே. நான் விளக்கேற்றினால் உனக்கு நன்றாய்த் தெரியும் என, அவன் இருள் நிறைந்த வானத்திலே தன் மொழி ஒளியால் பிரகாசமளிப்பார். ஆமாம். நான் சரியாய்க் கவனிக்கவில்லை. நெஞ்சிலிருந்தது. நான் அறியவில்லையே என வருந்தி முயற்சியுள்ளவனாவான். குழந்தைகளை எங்ஙனம் குருநாதரிடம் அனுப்ப வேண்டுமெனக் கிருஹ்ய சூத்திரத்தில் எவ்விதம் கூறியுள்ளார்கள்? ஈசனுடைய ஆக்ஞையைப் பரிபாலனஞ்

செய்வதற்காக உங்களிடம் என் மகனை கொடுத்து விடுகிறேன். ஈசனின் சொரூபத்தை அவனறிய வேண்டும். சல வித்தை ஐஸ்வரியங்களை அறிய வேண்டுமென்பது என் எண்ணம். புவியிலுள்ள எல்லா சக்திகளையுமறிய வேண்டும். எல்லாப் பிராணிகளும் இன்பமுடன் எங்ஙனம் வாழ வேண்டுமென்னும் இரகசியத்தை அறிய வேண்டும்; என்றும் ஆயுஷ்மானாகவும், அறிஞனாகவும், அறப்புருடனாகவும், பரோபகாரியாக வேண்டுமென்னும் நினைவோடு மகனை குருநாதரிடம் அனுப்புவார்கள். பிறகு பரஸ்பரம் மொழிவார்கள்.

## குருநாதர் குழந்தையை நோக்கி

உன் பெயரென்ன? என்பார்.

நான் தேவத்தன். நீ எதற்காக இங்கு வருகிறாய்? என் மனம் மலர்வதற்காக வருகிறேன். நான் பிருமசரிய விரதம்கொள்வேன். நீ யாருடைய பிருமசாரி? உங்களுடைய பிருமசாரி. உடனே குருநாதர் குழந்தையை அருகில் உட்காரவைத்து அன்புடன் அணைவார். பின்பு பிரும்மோபதேசம் என்னும் காயத்திரி உபதேசம் செய்வார். ஞானமும் சோதியும் வேண்டுமென ஈசனை நாடும் மொழிகளை வடமொழியில் காயத்திரி என்பார்கள்.

பிரும்மச்சாரிகள் குருநாதரிடம் சேர்ந்தவுடன் கௌபீனம் ஒன்றே அவர்கள் உடையாகும். குழந்தைகளுக்கு அத்தியாவசியமான உடைகளைத் தவிர அதிக உடைகளும் வஸ்திரங்களும் கூடாதென்பது இதன் நோக்கம்.

குழந்தைகளுக்கு கைகளில் தண்டங்கள் கொடுக்கப்படும். தண்டங்கள் என்பது கழிகளுக்குப் பெயர். கையில் கழியுடன் எப்பொழுதுஞ் செல்வது கொடிய மிருகங்களிடமிருந்தும் துஷ்டர்களிடமிருந்தும் தன்னைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டுமென்பதற்கேயாகும். தன் தேகத்தைக் காப்பாற்றிக் கொள்ளலாம் என்னும் தீரம் இருந்தாலொழிய மனோ சாந்தியுடன் மனனஞ் செய்வது பெரும் கஷ்டமாகும். இதை எண்ணித்தான் பிருமச்சாரிகளுக்கு அழகு கையில் எப்பொழுதும் தண்டமுடனிருப்பது என சாஸ்திரங்கள் கூறும். தண்டமென்பது அச்சமன்னியில் நான் எத் தீமையையும் தொலைப்பேன் என்பதைத் தெளிவாக்குவதற்காகும். ஸ்ரீ ராமர் குருகுலவாசத்திற்கு விசுவாமித்திரருடன் சென்றபோது தண்டத்தின் ஸ்தானத்தில் கையில் அம்புடனிருந்தார். பிறகு வனவாசத்தில் சென்றபொழுதும் நாவிலே சத்தியமும் கையிலே ஆயுதமுமிருந்தபடியால் தன்னைக் காப்பாற்றிக் கொண்டார். இவ் வுண்மையைக் குழந்தைகளறிய வேண்டுமெனவே கையில் தண்டமளித்து இரகசியத்தை விளக்குவார்கள்.



பிறகு மகனுக்கு தந்தை இவ் வுபதேசத்தை விளக்குவார். குழந்தையே! அடிக்கடி ஜலம் பருகித் தேகாரோக்கியத்தை நோக்கவும்; சதா காலமும் ஏதாவது செயலைச் செய்யவும்; செயலன்னியில் எந்த நிமிஷத்தில் நீ சும்மாயிருக்கின்றாயோ, அந்த சும்மாயிருக்கும் தருணத்திலேயே சைதான் உன்னைப் பற்றிக்கொள்வான். பகலில் ஒரு பொழுதும் நித்திரை செய்யாதே. பகல் நித்திரை தேகத்தைப் பாழாக்கும். ஆச்சாரியனுடைய ஆக்ஞையிலே நீ ஆதரவுடன் அணைய வேண்டும். ஆசாரியருடைய நல்லுபதேசத்தை நாடவும், தீயோபதேசமானால் அதைத் தள்ளிவிடவும், போகத்தை நீ விட்டுவிட வேண்டும். கோபத்தால் உன் காயமழியும். பொய் ஒருபொழுதுமுரைக்காதே. மனத்திலும், கதையிலும், பரிசத்திலும், பார்வையிலும், ஸ்திரீகளை எண்ணாதே. நிலத்திலே சாய்ந்து உறங்கியபோதிலும் குற்றமில்லை. சங்கீதம், நாடகம், சாந்தம், எண்ணெய், தைலம் முதலியவைகளில் உன் புத்தி செல்ல வேண்டாம். அதிக ஸ்னானம், அதி போஜனம், அதி நித்திரை, அதி விழிப்பு, நிந்தை, லோபம், மோகம், பயம், சோகம் முதலியவைகளின்று நீங்கவும். க்ஷௌரம் செய்து கொள்வதும் உசிதமில்லை. செருப்பு, குடை சின்னமான சுக வாழ்க்கையும் வேண்டாம். தேகத்தை அடிக்கடி பரிசித்துக்கொள்ளாதே. எப்பொழுதும் முயற்சியுடனிருந்து குருநாதருக்குத் தாழ்மையாய் நடக்கவும்.

குருநாதர் குருகுலத்திலே யாவற்றையும் விளக்கமாகக் கூறுவாரா? குருநாதர் எப்பொழுதும் விளக்கமாய்க் கூறுவதில்லை. நீங்களே உங்கள் முயற்சியால் யாவற்றையும் அறிந்துகொள்ள வேண்டுவதற்கேற்ற துணை புரிவார். மர்மமாய் ஒரு மொழியைச் சொல்லி நீங்கள் நன்றாய்ச் சிந்தனை செய்து பிறகு சந்தேகமானால் என்னிடம் வரலாம் என்பார். இங்ஙனம் படிப்பதற்கே சுவாத்தியாயம் எனப் பெயர். பிருகுவும், நாரதரும், ராமரும், அர்ச்சுனனும் இங்ஙனமே படித்தார்கள்.

## குருகுல மாணவர்கள் எவைகளெல்லாம் படிக்க வேண்டும்?

இயல்பின் சட்டங்களை அறிய வேண்டும். சத்தியம் எங்கே? என நாடவும், சுவாத்தியாயத்தினால் தெளிந்து பயிற்சியைப் பெறவும், அனுபவம் நாடி அடக்கமறியவும், புலன்களின் சூட்சமத்தைப் பயிற்சியினால் செம்மையாக்கவும், சக்தி சம்பந்தமான சூட்சமங்களைச் சிந்தனையிலாக்கவும், மனிதகோடிகளை நன்றாயறியவும், இராஜப்பிரஜா சாஸ்திரத்தில் இணையவும், ஜனன சாஸ்திரமும்

# ஆந்திர தேசத்தின் அபிவிருத்தி.

திரு. என். வேங்கடரமணன் அவர்கள்.

ஆந்திர தேசம் என்பது தெலுங்கு மொழி பேசப்படும் நாட்டையே குறிக்கும். எனவே இக் கட்டுரையில் தெலுங்கு நாட்டின் முன்னேற்றத்தைப்பற்றிச் சிறிது பேசுவோம். சென்னை ராஜதானியில் வட பாகத்தில் உள்ள ஜில்லாக்களும், நைஜாம் ராஜ்யத்திற் சில இடங்களும் தெலுங்கு மொழி பேசும் நாடாகும். மொத்தத்தில் எண்பதினாயிரம் சதுர மைல்கள் கொண்ட பரப்பளவும், இரண்டு கோடியே

---

தெரிய வேண்டும். புவியிலே இரண்டு உண்டு. ஒன்று சத்தியம்; மற்றது முயற்சி; ஆனால் சத்தியமும் முயற்சியும் ஒன்றே. இவ்விரண்டையும் உணர வேண்டும்.

## குருகுலம் எங்கு எப்படி இருப்பது நலம்?

நகரத்தில் குருகுலங்கள் இருக்கலாகாது. சிறிய கிராமத்திலுமிருப்பது சஞ்சலமளிக்கும். கானகத்தில், கானக மிருகங்களின் நடுவே, குளிர்ந்த வனஸ்பதிகளின் காட்சியிலே, ஓடி ஒய்யாரமாய்ப் பாயும் நதியினருகே குருகுலத்தை ஸ்தாபிக்க வேண்டும்.

குருகுலத்திற்கு வேண்டிய நூல்களை அவர்களே எழுதி பிரசுரஞ் செய்துகொள்ள வேண்டும். எல்லாம் தாய் பாஷையிலேயே தெளிவாக்க வேண்டும். பாஷை என்பது, நாம் ஒரு நகரஞ் செல்லுவதற்கு உதவும் வண்டியைப் போலவேயாகும். நாம் நினைத்த ஊரை அடைந்தவுடன் வண்டி சுகமாயிருக்கின்றதே என எண்ணி வண்டியிலேயே உட்கார்ந்து காலத்தைக் கழிக்காமல் கிராமஞ் சென்று நமது வேலைகளை எங்ஙனம் பார்க்கிறோமோ அங்ஙனமே பாஷையையும் உபயோகஞ் செய்துகொள்ள வேண்டும். ஒரு நோக்கத்தை அறிவதற்கும், மனத்தை அறிந்து கொள்வதற்குமே பாஷையன்றி சாஹித்திய சேவை எனச் செய்வதற்கில்லை. பசிக்காக புசிப்பதே உசிதமன்னியில், நாவின் ருசிக்காகவும் சிற்றின்பத்திற்காகவுமில்லை. இந்நோக்கத்துடனேயே குருகுலங்களை ஸ்தாபிக்க வேண்டும் என ஆதியில் எண்ணினார்கள்.

அச்சிலிருக்கிறது! விரைவில் வெளிவரும்!!

பாரத நாட்டின் வீரப் புதல்வி

# ஜான்ஸி மஹா ராணி

## லக்ஷ்மீ பாய் சரித்திரம்

அச்சிலிருக்கிறது.

விரைவில் வெளிவரும்.

**பிரதி ஒன்றுக்கு விலை அணா 2 தான்.**

வேண்டுவோர் தபாற் செலவுக்கும் சேர்த்து
இரண்டரை அணா ஸ்டாம்பு அனுப்பி வைக்கவும்.

10-க்கு மேற்பட்ட பிரதிகளை வாங்குவோர்
தபால் செலவு அனுப்ப வேண்டியதில்லை.

வியாபாரிகளுக்குத் தகுந்த கமிஷன் கொடுக்கப்படும்.

**பாரதி பப்ளிஷிங் கம்பெனி,**

உத்தமபாளையம், மதுரை ஜில்லா.

இருபது லட்சம் ஜனத் தொகையும் வாய்ந்து, பதின்மூன்று ஜில்லாக்களாக ஆந்திர தேசம் இருந்து வருகிறதெனக் கூறலாம். சென்னை ராஜதானியின் வரும்படியில் பேர்பாதி ஆந்திர தேசத்திலிருந்து கிடைக்கிறது. சென்னை மாகாணத்தில் தமிழர்களுக்குப் பிறகு ஆந்திரர்களே முதன்மையானவராகும். நிலப் பரப்பிலும், மக்கள் தொகையிலும், பண்டைச் சிறப்பிலும், மொழி வளத்திலும் தமிழ் நாடே முதன்மைப் பெற்றதாகும். இயற்கைச் சிறப்புகள் இத் துணைப் பெற்றிருப்பினும் இன்று தமிழ் நாடு தனக்கு இரண்டாவதாகிய ஆந்திர நாட்டைவிட பின்னடைந்திருக்கிறதென்பதை யாரே மறுக்க வல்லார்? ஆகவே ஆந்திர தேசம் எவ்வளவு தூரம் முன்னேற்றமடைந்திருக்கிறதென்பதை ஒவ்வொரு தமிழரும் நன்குணர்ந்து, தாமும் அவ்வாறு அபிவிருத்தியடைய முயல வேண்டுவது அவசியமாகும்.

## மொழி வளர்ச்சி

இன்று இந்தியாவில் முதன்மைப் பெற்றுள்ள மொழிகளில் ஆந்திரம் இரண்டாவதாகக் கூறப்படுகிறது. ஒரு மொழி மிகவும் பழமையானதென்பதாலேயே அதை உயர்வானதாக—முதன்மையானதாகக் கூற முடியாது. இக் கால நிலைமைக்கேற்ப நூல் வளப்பமும், நுண் பொருள் விளக்கமும், மக்கட் பெருக்கமும், செல்வச் சிறப்பும், உலகியலறிவும் வாய்ந்த ஒரு மொழியே உயர் மொழியெனக் கருதப்படும். அவ் வகையில் இந்தியாவில் இன்று உயர் தனிச் சிறப்புற்று விளங்கும் மொழிகள் ஒரு சிலவேயாம். அவற்றுள் வங்காள மொழி முதன்மையானதாகும். இதுகாலை இந்தியாவில் வங்காள நாட்டினர் அறிவிலும், ஆற்றலிலும், தேசாபிமானத்திலும் முதன்மைப் பெற்று விளங்குவதற்குக் காரணம் அவர்களுடைய தாய் மொழி அடைந்துள்ள செழுமையேயாம். வங்காள மொழியில் அறிவு நூல்களும், ஆராய்ச்சி நூல்களும், சுதந்திரமான சரித்திர நூல்களும் எண்ணற்றனவாம். காலஞ் சென்ற ஈஸ்வர சந்திர வித்யா சாகரரால் வங்காள மொழி அடைந்த நன்மைகள் பலப்பல. வீரமும், தேசாபிமானமும் செறிந்து விளங்கும் பல கீதங்களும், நாவல்களும், ஆராய்ச்சித் துறைபோய அறிவு நூல்களும் எழுதி வங்காள மொழி அன்னையை அழகுபடுத்திய பங்கிம் சந்திர சட்டர்ஜி, கவி ரவீந்திரநாத டாகூர் முதலியோர் உலகப் பிரசித்தியானவர்களன்றோ? இந்தியாவில் உயர்தனிச் சிறப்புற்ற மாதப் பத்திரிகையாகிய 'மாடர்ன் ரிவ்யூ'வின் ஆசிரியராகிய திரு. ராமாநந்த சட்டர்ஜி அவர்களும் ஒரு வங்காளியரே யாவர். அத்தகைய வங்காள நாட்டுக்கு

இரண்டாவதாக இந்தியாவில் தெலுங்கு நாட்டைச் சொல்லவேண்டும்.
வங்காள மொழியைப் போலவே தெலுங்கு மொழியும் வெகு தூரம்
வளர்ச்சியுற்றிருக்கிறது. காலத்திற்கேற்பத் தம் மொழியை வளர்த்து
வரும் முயற்சியில் தெலுங்கர்களுக்குத் தமிழர்கள் ஈடாகமாட்டார்கள்.
தெலுங்கு மொழியில் சுதந்திரமான சரித்திர நூல்களும், ஆராய்ச்சி
நூல்களும், அறிவு நூல்களும் எண்ணற்று வெளியாகின்றன. சாத்
திரம், சமயம், ஆசாரம், தேசாபிமானம் முதலிய துறைகள் பற்றிய
நவீனக் கொள்கைகளை ஆராய்ந்து எழுதப்பட்ட ஆந்திர நூல்கள் பல.
ஆந்திரர்கள் தம் மொழியின் பழமையையும், சிறப்பையும் பற்றிப்
புகழ்ந்துகொண்டு வாளா யிருக்காமல், இக் காலத்தில் எவ்வெத்
துறைகளில் தமது மொழியும். தாமும் முன்னேற வேண்டுமென்ப
தைச் சிந்தித்து அவ் வகைகளில் வேலை செய்கின்றனர். ஆந்திர மொழி
யில் பெருங் காப்பியங்களெனப் பெயர்பெற்ற பெரு நூல்கள் பலவற்
றினை நடு நிலைமையில் நின்று குற்றங்களைக் கண்டித்துக் குணத்தைப்
புகழும் ஆந்திரர்களின் ஆராய்ச்சித்திறனை என்னென்பது! பழமையான
தென்ற மாத்திரத்தில் ஒரு நூலினை ஆராய்ந்து பார்க்கத் துணியாது
அப்படியே ஒப்புக்கொள்ளும் தமிழனுக்கும், எதையும் ஆராய்ந்து
பார்த்துக் குற்றங் கண்டவிடத்துக் கண்டிக்கப் பின்னடையாத தெலுங்
கனுக்கும் உள்ள வேற்றுமையைக் கவனிக்க வேண்டும். பெரும்
புலவர்களெனப் பெயர் தாங்கிய தமிழர்கள் தமிழ் மொழியின் பெரு
மையை எழுதப் புகுந்தவிடத்து, வைகை யாற்றில் எதிர் நீந்தியதும்,
நெருப்பிடை வேகாது நின்றதும், மறைக் கதவினைத் திறந்ததும்
முதலாய மகத்துவங்கள் புரிந்தது தமிழ் மொழியெனக் கூறி, அத
னால் வேறு மொழிகளைவிட அம் மொழி உயர்வுடைத்தென வெட்க
மின்றி எழுதப் புகுகின்றனர். இவ் வற்புதங்க ளியற்றிய பெருமை
வெறுந் தமிழ் மொழிக்குச் சிறிதும் இல்லை யென்பதும், அவ்வச்
செயல்களை யாற்றிய பெருந்தகையாளரின் பெருமையாலேயே அவை
நிகழ்ந்திருக்க வேண்டுமென்பதும் இவ் வாராய்ச்சியாளருக்கு ஏனோ
புலனாவதில்லை! தெலுங்கு மொழியின் வரலாற்றைப் பற்றியும்,
தெலுங்கு நாட்டின் வரலாற்றைப்பற்றியும் ஆராய்ந்து உண்மை
கண்டு சரித்திர நூல்கள் எழுதுவதற்கெனவே ஆந்திர நாட்டில்
பல கழகங்கள் தோன்றி யுழைத்து வருகின்றன. நாட்டில்
மறைந்து கிடக்கும் ஓலைச் சுவடிகளையும், சாசனக் கற்களையும்,
சரித்திரச் சின்னங்களையும் தேடி. ஆராய்ந்து அவற்றைப் புதுக்கி
யும், உண்மை வரலாற்றை விளக்கியும் வெளியிடுவதற்கான சங்கங்
களும் தெலுங்கு நாட்டில் வேலை செய்கின்றன. "ஆந்திர பரிஷத்
மகா சபை" இத் துறையில் அரிய வேலை செய்து வருகிறது. இதன்
தலைமையில் ஆண்டுதோறும் ஆந்திரப் புலவர்கள் பலரும் ஒருங்கு
கூடி ஆந்திர மொழியின் ஆக்கத்திற்கு ஆவன தேர்ந்து அரும் பாடு



படுகின்றனர். அவர்கள் முயற்சியால், தெலுங்கு மொழியில் இது
காறும் யாருங் கேள்விப்பட்டிராத அரும் பெரும் பழமையான நூல்
கள் பல வெளிப்பட்டு அச்சுவாகனமேறி பவனி வந்துள்ளன—வருகின்
றன. இச் சங்கத்தாரின் அரிய உழைப்பால் பழஞ்சுவடிகள் பல
சேர்ந்த ஒரு பெரிய புத்தகாலயமும், ஓரிய பெரிய பத்திரிகையும்
தோன்றிப் பண்டிதர்களுக்குப் பெரு விருந்து செய்து வருகின்றன.
அவ்வளவு முயற்சிகளும் அந் நாட்டுப் பொது மக்களின் ஆதரவிலேயே
நடைபெறுகின்றன வென்பதை நாம் கவனிக்க வேண்டும். இன்று
துரைத்தனத்தாரும் பாஷை சம்பந்தமான விஷயங்களில் ஷை
பொதுச் சபைகளின் உதவியை நாடி வருகின்றன ரென்பதைப்
பெருமையோடு குறிப்பிடுகின்றோம். ஆங்கில முணர்ந்தவர்கள்
ஆங்கிலத்திலுள்ள 'என்சைகிலோ பீடியா பிரிட்டானிகா' என்ற
பெரிய நூலைப்பற்றி யறிந்திருப்பார்கள். அதுபோல் தெலுங்கிலும்
ஒரு விரிவுரை அகராதி "ஆந்திர விஞ்ஞான சர்வஸ்வம்" என்ற
பெயரால் எழுதி முடிக்கத் தொடங்கி இற்றைக்குச் சில வால்யங்கள்
எழுதி வெளியிட்டிருக்கின்றனர். அவ் வால்யங்களைக் காணுமிடத்து
அதை எழுதி வெளியிடும் விஷயத்தில் அவர்கள் பட்டுள்ள சிரமம்
நன்கு வெளியாகும்.

## நூல்களின் பெருக்கம்

ஆந்திர நாட்டில் பி. ஏ., எம். ஏ. முதலிய ஆங்கிலப் பட்டங்கள்
படைத்த அறிவாளிகள் பலரும் தங்கள் தாய் மொழியினிடத்தில்
அதிகப் பற்றுக் கொண்டிருப்பதோடு தாய் மொழி நூல்களையும், தாய்
மொழிப் பத்திரிகைகளையும் முக்கியமாக ஆதரிக்கின்றனர். ஆங்கிலம்
முதலிய பிற மொழிகளில் தாம் கற்ற அறிவாராய்ச்சிகளின் பயனைத்
தந் தாய் மொழியாந் தெலுங்கு மொழியில் நூல்களின் முகத்தால்
நாட்டுக்கு உதவி வருகின்றனர். தற்கால ஆங்கில விஞ்ஞான சாஸ்தி
ரக் கருத்துக்களைத் தமிழில் வெளியிடுவதற்கேற்ற சொற்கள் இல்லை
யென்று தமிழர்கள் வாய் வேதாந்தம் பேசிக்கொண் டிருக்கையிலேயே,
ஆந்திரர்கள் தம் மொழியில் அத்துறையில் பல நூல்களைக் கண்டு
விட்டனர். தெலுங்கு யூனிவர்சிடியில் வைஸ் சான்சலராக விருந்த
ஆங்கிலப் புலவர் திரு. சி. ஆர். ரெட்டி (எம். ஏ. காண்டெப்) அவர்
களைப் போன்ற பெரு மக்கள் பலர் தங்கள் தாய் மொழியாகிய ஆந்தி
ரத்தில் உயர்ந்த நடையில் அரிய பெரிய காப்பியங்கள்—நூல்கள் எழுதி
யிருக்கிறார்களென்றால் ஆந்திரர்களின் தாய் மொழி அபிமானத்திற்கு
வேறு உதாரணம் வேண்டுமோ? இப் பாராவின் தலைப்பில் குறித்தபடி
நூல்களின் பெருக்கத்தாலேயே ஒரு மொழி வளர்ச்சி யடைந்துவிட
முடியாது உபயோகமற்ற நூல்கள் கணக்கின்றி எத்தனை வெளி

யாயினும் அம் மொழிக்கு என்ன பயன் உண்டாகப் போகிறது? மக்களின் அறிவு வளர்ச்சிக்கும், உலக ஞானத்திற்கும், மக்கள் வாழ்க்கைக்கும், சாத்திர ஆராய்ச்சிக்கும், தேச நன்மைக்கும், செல்வ நிலைக்கும், தொழில் வளர்ச்சிக்கும் பயன்படும் நூல்கள் எம் மொழியில் அதிகப்படுகின்றனவோ அம் மொழியே வளர்ச்சியுறுவதாம். எனவே இம் முறையில் ஆந்திர மொழி வளம்பெற்று இருக்கிறதென்றால் அதன் நிலையை வாசகர்களே ஊகித்துக்கொள்ளலாம். மேலே கூறிய திரு. சி. ஆர். ரெட்டியார், எம். ஏ. அவர்கள் தெலுங்கில் பொருளாதார சாஸ்திரத்தைப்பற்றி ('பொலிடிகல் எகானமி' என ஆங்கிலத்தில் வழங்கும்) அர்த்த சாஸ்திரம் என்ற பெயரால் எழுதியுள்ள இரு நூல்களுக்கு இணையான ஒரு நூல் இன்னும் தமிழில் எழுதப்படவில்லையென்று துணிந்து கூறுவோம். மேற்படியாரே அதற்கு முன் ஒரு காப்பியத்தை—நூலை—எவ்வாறு ஆராய்வதென்பதை விளக்குவான் வேண்டி ஆந்திரத்தில் எழுதியுள்ள "கவித்துவ தத்துவ விசாரம்" என்ற அரிய பெரிய நூலின் சுவையைத் தமிழர்கள் அறியும் நாள் எந்நாளோ! ஆராய்ச்சி என்ற பெயர் தாங்கித் தமிழில் வெளிவந்துள்ள பல நூல்களை நாம் ஆவலோடு வாங்கிப் படித்துப் பார்த்து ஏமாற்றமே யடைந்தோம். ஆராய்ச்சி நூல்கள் எழுதுவதற்கு இன்னும் தமிழர்கள் எவ்வளவோ அறியவேண்டி யிருக்கிறது. தெலுங்கு மொழியில் ஒவ்வொரு துறையிலும் அவர்கள் ஆராய்ச்சி நூல்களை எழுதி வெளியிட்டு வருகின்றனர். அதனால் சாமானிய மக்களும் சுலபத்தில் ஆராய்ச்சி அறிவு பெறுகின்றனர். இங்கு, தெலுங்கு மொழியும், தெலுங்கர்களும் இவ்வளவு தூரம் நாட்டில் இன்று முதன்மையடைந்து விளங்குவதற்குக் காரணமாயிருந்து அடிகோலியவர் காலஞ்சென்ற கந்துகூரி. வீரேசலிங்கம் பந்துலு என்ற பெரியாரென்பதைக் குறிப்பிடவேண்டும். வங்க நாட்டில் வித்யா சாகரர் அந் நாட்டின் முன்னேற்றத்திற்கு எவ்வாறு வேலை செய்தாரோ அவ்வாறே இவர் ஆந்திர நாட்டின் வளர்ச்சிக்கு அரிய ஊழியம் செய்தார். அவர் பல துறைகளைப்பற்றியும் நூற்றுக் கணக்கான நூல்களை எழுதி வெளியிட்டு, ஆந்திரர்களைக் கண் விழிக்கச் செய்து, அறிவாளிகளாக்கினர். (இவரது சரித்திரம் "பாரதி"யில் தனியாக வெளிவரும்; எதிர் பாருங்கள்.) இன்று ஆந்திர நாட்டின் தலைவர்களா யிருப்போர் பலரும், அப் பெரியாரின் உபதேசங்களால் அறிவு பெற்றவர்களே யாவர். நாட்டில் மலிந்திருந்த மூட நம்பிக்கைகளையும், ஜாதி வேற்றுமைகளையும், சமய பேதங்களையும் வன்மையாக அவர் கண்டித்து, அறிவுச் சுடர் கொளுத்தி எழுதிய எழுத்துக்களும், பேசிய பேச்சுக்களும் ஆந்திர நாடெங்கும் இன்றும் ஒலித்துக்கொண் டிருக்கின்றன. அவர் வழிபற்றி மற்றும் பல அறிஞர்கள் தொடர்ந்து வேலைசெய்து வருகின்றனர். அவர்களுடைய உழைப்பால் ஆந்திர தேசத்தில் தமிழ்



நாட்டைப்போல் சாதிச் சமயச் சண்டைகள் அத்துணையில்லை யென்பதைக் காணலாம். பிராமணர்களில் பெரும்பாலார் ஆசார சீர்திருத்தவாதிகளாகவே யிருக்கின்றனர். தமிழகத்தைப்போல் சாதிச் செருக்கு பூண்ட பிராமண தேசீயத் தலைவர்களை ஆந்திர நாட்டில் காண்பது அரிது.

## புத்தகப் பிரசுராலயங்கள்

மக்கள் அறிவு வளர்ச்சிக்கேற்ற நல்ல நூல்கள் சுலபத்தில் கிடைக்கமாட்டா. நல்ல அறிவு நூல்களை எழுதுவது கஷ்டம். அப்படி எழுதியபோதிலும் அவற்றை அச்சிட்டு வெளியிடுவதும் கடினம். அவ்வாறு எழுதி வெளியிடுவதற்குப் பெரும் பொருள் தேவை. அவ்விதம் வெளியிடப்பட்டால் அந் நூல்களைப் பெரும் பாலாரான மக்கள் விலை கொடுத்து வாங்கி யாதரிக்க வேண்டியது மிக அவசியம். அவ்வாறு வாங்கப்பட்ட அறிவு நூல்கள் சாமானிய படிப்புடையவரும் படித்தறியுமாறு எளிய நடையில் இருத்தல் வேண்டும். மேலும் படிக்க விரும்பும் ஏழை எளியோர் முதல் யாவருக்கும் நல்ல நூல்கள் கிடைப்பதற்குத் தகுந்த வசதிகள் வேண்டும். இவ் வளவு அமைப்புகளும் இருந்தாலேயே ஒரு மொழியில் நல்ல நூல்கள் தோன்றி, அவை நாடெங்கும் பரவி, பொது ஜனங்களுக்கு அறிவு நலத்தைக் கொடுத்து, அவ் வழியே நாட்டின் நலத்திற்குத் துணைபுரி வனவாகும். ஆந்திர நாட்டில் அத்தகைய சாதனங்கள் அமைந்திருக் கின்றன. பொது மக்களுக்கான அறிவு நூல்களைத் தக்காரைக் கொண்டு எழுதுவித்து, அவற்றை அழகு பெற அச்சிட்டுச் சகாய விலைக்கு விற்பனை செய்வதற்காகப் பல சங்கங்கள் நிறுவப்பெற்றுள் ளன. இத்தகைய ஸ்தாபனங்கள் பல ஜமீன்தாரர்களுடையவும், பிரபுக்களினுடையவும் ஆதரவைப் பெற்று, தக்க அறிஞர்களுக்குப் பணம் கொடுத்து நல்ல நூல்களை எழுதச் செய்து அச்சிட்டு, தங்கள் பிரசுரங்களைத் தவறாமல் விலை கொடுத்துப் பெற்றுக்கொள்ளச் சம்மதித்துச் சிறு தொகை கொடுத்துச் சந்தாதாரர்களாகச் சேர்ந்துள்ள வாசகர்களுக்கு, அப் புத்தகங்களைப் பிறருக்கு விற்பதைவிடச் சகாய (குறைந்த) விலைக்கு விற்றுவருகின்றன. ஆந்திர நாட்டில் இது போன்ற ஸ்தாபனங்கள் பலவற்றுள்ளும் "விஞ்ஞான சந்திரிகா கிரந்த மண்டலி," "ஆந்திரப் பிரசாரணி கிரந்த மண்டலி" முதலியவற்றை முதன்மையாகக் கூறலாம். இந்த ஸ்தாபனங்களின் சீரிய முயற்சிகளால் தெலுங்கு மொழியில் அநேக சுதந்திர நூல்களும், மொழி பெயர்ப்பு நூல்களும் அறிவுத் துறைபற்றி வெளிவந்திருக்கின்றன. கலாசாலைப் படிப்புக்குரிய சாத்திர நூல்களும், சரித்திர நூல்களும் தெலுங்கிலிருக்கின்றன. ஆந்திர நாட்டில் பெண் மக்களிடையும்

கல்வி விரிவாகப் பரவி யிருக்கிறது. வித்யாவதிகளாகிய பெண்மணிகள் தெலுங்கு மொழியில் பல பத்திரிகைகளையும், பல புத்தகங்களையும் எழுதி வெளியிட்டு வருகின்றனர். ஆந்திர நாட்டில், 'முன்னால் இரண்டு பேர் செல்லுகிறார்களென்றால் அவர்களில் ஒருவர் கவியாக (புலவராக) விருக்கலாமென்று' துணிந்து கூறலாமென ஒரு பெரியார் எழுதுகின்றார். எனவே அவ்வளவு தூரம் கல்வி அந் நாட்டில் பரவி யிருக்கிறதென அறியலாம்.

## பத்திரிகைகள்

இக் காலத்தில் ஒரு நாடோ, ஒரு மொழியோ மேன்மையடைவதற்குப் பத்திரிகைகள் முக்கிய காரணமாகும். எம் மொழியில் சிறந்த பத்திரிகைகள் வெளிவருகின்றனவோ அம் மொழி நாட்டில் வளர்ச்சியடைவது திண்ணம். அதற்கேற்ப ஆந்திர நாட்டில் ஆந்திர மொழியில் வெளியாகும் பத்திரிகைகள் அநேகம். அப் பத்திரிகைகளில் ஆங்கிலப் பட்டதாரிகள் பலரும் கட்டுரைகள் எழுதுகின்றனர். ஆங்கிலம் படித்தவர்களும் தாய் மொழிப் பத்திரிகைகளையே பெரும்பாலும் படிக்கின்றனர். தனித் தமிழ்ப் பண்டிதர்களைப் போலன்றி தனித் தெலுங்குப் பண்டிதர்கள் அறிவுக்கும் ஆராய்ச்சிக்குமே முதன்மையைக் கொடுக்கின்றனர். பத்திரிகைக்குக் கட்டுரைகள் எழுதும் அறிவாளிகளுக்குப் பொருளுதவி புரிந்து பத்திரிகைகள் ஆதரிக்கின்றன. தமிழ் நாட்டில் ஒரு தமிழ் தினசரியில் ஒரு விஷயம் வெளியிடப்பட்டால் அஃது நாட்டில் படித்தவர்களால் (கல்வியாளர்களால்) கவனிக்கப்படுவதில்லை. அதற்குக் காரணம் தமிழ் நாட்டுக் கல்வியாளர்கள் பெரும்பாலும் ஆங்கில தினசரிகளையே படிப்பவர்களாக விருப்பதாம். ஆனால் ஒத்துழையா இயக்கம் ஆரம்பித்ததற்குப் பின் தமிழ் நாட்டில் தமிழ்ப் பத்திரிகைகளுக்கு ஒரு சிறிது முக்கியம் ஏற்படத் தலைப்பட்டிருக்கிறது. தெலுங்கு நாட்டில் நெடுநாள் முன்னேயே தெலுங்கு மொழிப் பத்திரிகைகளுக்கு அதிக செல்வாக்கேற்பட்டிருக்கிறது. தெலுங்கு நாட்டில் நல்ல நிலையில் பல பத்திரிகைகள் நடைபெற்று வருகின்றன. "ஆந்திர பத்திரிகை," "கிருஷ்ணா பத்திரிகை," "சமதர்சனி" என்பவை முறையே தின, வார, வாரமிருமுறைப் பத்திரிகைகளில் நாட்டில் தலைசிறந்து விளங்குகின்றன. இவை அவ்வப்போது நாட்டு நிகழ்ச்சிகளைப் பற்றிய சித்திரப் படங்களையும் வெளியிட்டு வருகின்றன. இன்று தெலுங்கு மொழியில் வெளியாகும் மாதப் பத்திரிகைகளில் உருவத்திலும், விஷயச் செறிவிலும், சித்திரப் படங்களிலும் சிறந்து விளங்கும் உயர் தனிப் பத்திரிகைகளாகிய "பாரதி," "கிருக லக்ஷ்மி" போன்றவற்றிற்கும் இணையாகத் தமிழில் இதுகாறும் ஒரு பத்திரிகையும் காணோம். சமாசாரப்



புதினங்களாகிய "ஆந்திர பத்திரிகை," "சமதர்சனி" முதலிய தெலுங்கு பத்திரிகைகள் ஆண்டுதோறும் பல துறைபற்றிய சிறந்த கட்டுரைகளையும், கதைகளையும், கீதங்களையும் சேகரித்துப் பதித்து, பற்பல வர்ணச் சித்திரப் படங்களையும், சாதாரணச் சித்திரப் படங்களையும் சேர்த்து ஆண்டு மடல்களென்ற பெயரால் பெரிய சைசில் (உருவில்) புத்தக உருவமாக சஞ்சிகைகளை வெளியிட்டு வருகின்றன. அதுபோன்ற ஒரு பிரசுரமாவது இன்றுவரையில் தமிழில் வெளியிடப்படவில்லையெனின் தமிழர்களின் அசிரத்தை வெளியாகிறதல்லவா? தெலுங்கு நாட்டில் தபால் வசதி யில்லாத குக்கிராமங்களிலிருந்துகூட பல பத்திரிகைகள் வெளி வருகின்றனவெனில் ஆந்திரர்களின் பத்திரிகாபிமானம் எத்தகையதென்பதை யறியலாம்.

## புத்தகசாலைகளும் வாசகசாலைகளும்

ஒரு மொழியில் நல்ல நூல்களும், நல்ல பத்திரிகைகளும் வெளிவந்திருக்கலாம். ஆனால் அவை பொது மக்கள் அனைவரும் படிப்பதற்கேற்ப யாவருக்கும் எளிதில் எட்டக்கூடியனவா யிருக்க வேண்டும். ஒரு மனிதனே அறிவு தரும் பல நூல்களையும், பல பத்திரிகைகளையும் ஒருங்கே விலை கொடுத்து வாங்கிப் படிப்பதென்பது முடியாத காரியம். ஆகவே பதின்மர் ஒன்றுகூடி ஆளுக்குச் சிறிது தொகையாகச் சேர்த்துப் பொதுவில் பல புத்தகங்களையும், பல பத்திரிகைகளையும் வாங்கி வைத்து யாவர்க்கும் படிக்க எட்டச் செய்யலாமல்லவா? அதற்காகவே உலகில் புத்தகாலயங்கள் (லைபரெரி) ஏற்பட்டுள்ளன. அதற்கென ஒரு இயக்கமும் தோன்றி வேலை செய்து வருகிறது. இந்தியாவில் பரோடாவுக்குப் பிறகு தெலுங்கு நாட்டில் தான் புத்தகாலய இயக்கம் நன்கு வேலை செய்திருக்கிறது. தெலுங்கு நாட்டில் இன்று சற்றேறக்குறைய முந்நூறுக்கு மேற்பட்ட புத்தகாலயங்களும், வாசகசாலைகளும் ஏற்பட்டிருக்கின்றன. தெலுங்கு நாட்டில் பொது உபயோகத்திற்கானப் புத்தகாலயம் ஒன்றேனும் இல்லாத ஒரு நகரமுமில்லை யென்பது தவறாகாது. அப் புத்தகாலயங்களுள் பல ஏழைகளுக்கு இலவசமாகவே புத்தகங்களும், புதினங்களும் கொடுத்துதவி வருகின்றன. சில புத்தகாலயங்கள் 'சஞ்சாரக் கிரந்தாலய'ங்களென்ற பெயரால் கிராமங்கள்தோறும் சுற்றி வருகின்றன. பொது மக்களிடையில் கல்வி யறிவை எவ்வாறு எளிதில் பரவச் செய்யலாமென்ற கவலையைக் கைக்கொண்டே நூல் நிலையங்களனைத்தும் வேலை செய்கின்றன. இவ் வியக்கத்திற்கெனவே ஒரு மாதப் பத்திரிகையும் நடைபெற்று வருகிறது. ஆண்டுதோறும் ஆந்திர நாட்டின் சார்பாகப் புத்தகாலய மகா நாடுகள் கூடி அவ்வியக்க வளர்ச்சிக்குப் பாடுபட்டு வருகின்றன. தெலுங்கு மொழி நூல்களை

அச்சிட்டுப் பிரசுரிக்கும் கம்பெனிகளில் முதன்மை வாய்ந்த சென்னை "வாவிள்ள ராமஸ்வாமி சாஸ்துருலு அண்டு சன்ஸ்" கம்பெனியார்கள் ஒரு முறை, தெலுங்கு நாட்டில் ஸ்தாபிக்கப்பெறும் முதன்மையான (நிலையான) நூல் நிலையங்களனைத்திற்கும் தங்களிடமுள்ள எல்லா நூல்களிலும் ஒவ்வொரு பிரதி இலவசமாக வழங்க முற்பட்டனர். இவ்வாறு தெலுங்கு நாட்டினர் இவ் வியக்கத்திற்குச் செய்துள்ள ஊழியம்—உதவி, நாட்டின் நன்மைக்கு இன்று அரண்செய்து வருகிறது. சித்திரக் கலையிலும் ஆந்திரர்கள் முன்னேறியுளர்.

## ஆந்திரர்களின் எழுச்சி

ஆந்திரர்கள் அவ்வாறு பல துறைகளிலும் தங்கள் முன்னேற்றத்தைச் சாதித்து வந்ததன் பயனாய், தங்களுக்கெனத் தனி மாகாணம் வகுத்துக்கொள்ள முன்வந்திருக்கின்றனர். தெலுங்கு மொழியின் வளர்ச்சிக்கெனத் தனிச் சர்வகலாசாலை (ஆந்திரா யூனிவர்சிடி)யும் கண்டனர். காங்கிரஸ் அமைப்பில் ஆந்திர மாகாணம் என்ற உரிமையைப் பெற்றுவிட்டனர். அரசியலிலும் தனி மாகாணம் பெற முயன்று வருகின்றனர். அரசியல் அதிகாரங்களிலும் இன்று ஆந்திரர்கள் முதன்மையடைந்து வருகின்றனர். காங்கிரஸ் தொண்டில் இன்று தமிழர்களைவிட ஆந்திரர்களே முதன்மையா யிருப்பதைக் காணலாம். உப்புச் சத்தியாக்கிரகப் போரின் போது தமிழ் நாட்டுத் தலைவர்கள் திருச்சியினின்றும் கடற்கரைக்குச் செல்ல மெல்ல மெல்ல ஊர்கோலம் வந்துகொண் டிருக்கையிலேயே, ஆந்திர வீரர்கள் உப்பு (போர்)க் களத்தில் சிறைக்குப் பலியாயினர். தமிழ் நாட்டுக் காங்கிரஸ் தலைவர்களுக்குப் பெயர்போன சென்னை யம்பதியில் உப்புப் போரில் முதன் முதலில் சிறை புகுந்த மூன்று தலைவர்களும் (திருவாளர்களான. K. நாகேசுவர ராவ், கத்தே. ரங்கய நாயுடு, டி. பிரகாசம்) தெலுங்கு நாட்டுத் தலைவர்களேயாகும். தமிழ் நாட்டுக் கடற்கரையில் உப்புப் போரில் உயர் தலைமைப் பூண்ட பெண்கள் நாயகம் ஸ்ரீமதி. ஆசண்ட ருக்மணி யம்மையாரும் ஆந்திர மாதேயாவர். தமிழ் நாட்டில் தேசாபிமானங் காட்டும் எத்தனைப் பண்டிதைகள்—பண்டிதர்கள், புலவிகள்—புலவர்கள், ஆசிரியைகள்—ஆசிரியர்கள் இருக்கின்றனர்! அவர்களில் எத்தனைப்பேர் உப்புப் போரில் புகுந்து நாட்டுக்கு ஊழியம் செய்தனர்? தெலுங்கு நாட்டைச் சற்று ஏறிட்டுப் பாருங்கள். அவர்களுக்கிருக்கும் காரிய வீரம் தமிழர்களாகிய உங்களிடையில் காணப்படுகின்றதா? சைவ வைணவச் சண்டை, வடகலை—தென்கலைச் சண்டை, புறமொழிக் கலவாத தனி மொழிச் சண்டை, ஆஸ்திக நாஸ்திகச் சண்டை முதலியன உங்களிடையில் காணப்படுவதுபோல் அத்துணை ஆந்திர நாட்டில் காணப்படுகின்றனவா? கால

# பாலஸ்தீனமும் பிரிட்டிஷ் ஆதீனமும்.

ஸ்ரீமான். ஸி. ஏ. பெருமாள் அவர்கள்.

பாலஸ்தீன நாட்டின் நிலைமை உலக சரித்திரத்தில் மிகவும் துக்ககரமானது. பாலஸ்தீனம் கிறிஸ்தவர்கள் முகமதியர்கள் யூதர்கள் ஆகிய மூன்று சமயத்தவர்களுக்கும் தெய்வீகம் பொருந்திய புண்ணிய நாடாகும். இந் நாட்டிலேதான் விவிலிய வேதத்தில் காணப்பெறும் ஆபிரகாம், ஈசாக்கு, தாவீது ஆகியவர்களும்

---

நிலைக்கேற்ற சமூகச் சீர்திருத்தங்களுக்கு நீங்கள் விரோதிகளா யிருக்கின்றீர்களே! சென்னைச் சட்டசபையில் கோயில்களில் பெண்களுக்குப் பொட்டுக் கட்டுதலை யொழிக்கவந்த சட்டத்தை உங்கள் தமிழ் நாட்டுத் தலைவரே எதிர்த்து நின்றாரென்பதை எவ்வாறு மறப்பது! இந்தியா சட்டசபையில் பாலிய விவாகத் தடை மசோதாவுக்கு எதிர் நின்று அதை வீழ்த்த முயன்ற புண்ணியமும் உங்கள் தமிழ் நாட்டுத் தலைவருக்கே வாய்ந்தது! இன்று ஆந்திர நாட்டில் அநேக வாலிபர்கள் அமெரிக்கா, ஜப்பான் முதலிய அயல் நாடுகளுக்குச் சென்று கல்வியும், தொழிலுங் கற்றுவந்து, தம் நாட்டின் நலத்திற்கு உழைத்து வருவதைக் கவனித்துப் பாருங்கள், 1927-ம் ஆண்டு சென்னையில் நடைபெற்ற காங்கிரஸ் மகாநாட்டுக்கு விஜயம் செய்திருந்தவர்கள், அம் மகாநாட்டின் பிரதிநிதிகளாக ஆந்திரர்களே அதிகம் வந்திருந்ததைக் கண்டிருக்கலாம். ஆந்திர தேசத்தார்கள் அதிக ஊக்கத்துடன் தங்கள் நாட்டினிடையில் காக்கிநடாவில் ஒரு முறை அகில இந்திய காங்கிரஸ் மகாசபையை நடத்திச் சிறப்புற்றிருக்கின்றனர். தமிழ் நாட்டினிடையில் அம் மகாநாட்டை நடத்த விரும்பிய புண்ணிய புருஷர்கள் இதுவரையில் ஒருவரும் தென்படவில்லை. ஓரே மாகாணத்தில் தமிழர்களாகிய உங்களுக்குச் சமீபத்தில் வசிக்கும் ஆந்திர ஜில்லா வாசிகள் அடைந்துவரும் அபிவிருத்தியை (முன்னேற்றத்தை)க் கண்டேனும் நீங்கள் விழித்தெழுந்து வேலை செய்ய வேண்டாமா?

---

மற்றுமுள்ள அனேக தீர்க்கதரிசிகளும் ஆதி காலத்து மக்களுக்கு கடவுளின் பெருமையை யெடுத்து விளக்கினார்கள். இங்கேதான் கிறிஸ்து பெருமானும் அவரது சீடர்களும் உலக மக்களுக்கு சகோதரத்வத்தையும் சன்மார்க்க விதிகளையும் அஹிம்சா நெறியில் உபதேசித்தனர். இங்கேதான் முகம்மது நபி அவர்கள் சாம்பிராஜ்ய பதவியை அடையப்பெறலானார். இங்கேதான் அவருக்குப் பின் தோன்றிய "ஓமர்" என்பவர் மக்கள் யாவருக்கும் சமத்துவம் வளங்கி நீதி பரிபாலனம் செய்து பெரும் புகழ் படைத்தார். என்றாலும் பாலஸ்தீனம் நாகரீக காலமாகிய இக் காலத்தில், மக்கள் வாழுகின்ற துன்பக்களமாய்-ஓயாத துக்கமும் ஒழியாத தொல்லையும் விளைவித்துவரும் அநியாய நாடாய் விளங்குகிறது.

## பூர்வீக நிலைமை

பாலஸ்தீனம் விஸ்தீரணத்தில் பதினாயிரத்துநூறு சமசதுர மைல் கொண்ட, அதாவது இந்தியாவிலுள்ள இந்தூர் சமஸ்தானத்திற்கு ஏகதேசம் ஒப்பான ஓர் சிறிய நாடா யிருப்பினும் அந் நாட்டின் சரித்திர வரலாறும் அந் நாடு கொண்ட போர்க்கோலங்களும் அவைகளுக்குக் காரணமா யிருந்த அற்பத்தனமான பொறாமையும் குரோதமும் உலகத்தில் எந்த நாட்டிலும் எக் காலத்திலும் இருந்ததில்லை. உலகத்தில் மன்னாதி மன்னர்களாக விளங்க வேண்டுமென்ற நோக்கத்தில் உலக நாடுகளை யெல்லாம் கைப்பற்ற வேண்டுமாய் ஒவ்வோர் காலத்தில் தோன்றிய வீர மன்னர்களுக்கு, அந் நாடு ஐரோப்பிய தேசங்களுக்கும் ஆசியா நாடுகளுக்கும் மத்தியி லிருப்பதால், அதுவே இரத்த ஆறு பெருகியோடும் போர்க்களமா யிருந்துவந்தது. எனவே அவர்கள் தமது இஷ்டம்போல் அந் நாட்டைச் சூறையாடி ஆலயங்களைக் கொள்ளையிட்டு மக்களையுமழித்துப் பாழ்படுத்தி வந்தனர்.

மூன்றாவது "தி ஹூற்றி-மெஸ்" (The Huti-mess III), மகா ராமஸஸ் (Rameses the Great), மகா அலெக்சாந்தர் (Alexander the Great), "பாம்பி" (Pompey), சிங்கநேர் நெஞ்சு படைத்த ரிச்சர்ட் அரசன் (Richard the Lion Heart), நெப்போலிய மன்னன் ஆகிய வீரப் பிரதாபகர்கள் யாவருக்கும் பாலஸ்தீனமே ஏற்றதோர் போர்க்களமாய் விளங்கிற்று. கோட்டைகளாலும் கொத்தளங்களாலும் வளையப்பெற்ற ஜெருசலேம் பட்டணம் எதிரிகளால் நாற்பது தரம் தாக்கப்பெற்று அழிவுற்றது. இக் காலங்களில் ஜெருசலேம் பட்டணத்தைச் சார்ந்த இதர பிரதேசங்களும் தப்பித்துக்கொண்டதெனக் கூறவியலாது. ஓய்வு



ஒழிவு இன்றி அந் நாடு திரும்பத் திரும்பத் தாக்கப்பட்டு பகைவர்களின் கொலைக் களமாய் விளங்கப்பெற்றும், அடைக்கலம் புகுந்தவர்கள் அந்நியர்களுக்கு விற்கப்பட்டும், அத் தேசத்துச் சிற்பச் சித்திரங்கள் யாவும் அழிக்கப்பட்டும் போனதால், அது பாழாகிப் பாழாகிப் பின்னரும் வடிவுற்றது. எகிப்தியர்கள் பாபிலோனியர்கள், கிரேக்கர்கள், ரோமானியர்கள், தார்த்தாரியர்கள் ஆகிய ஒவ்வொரு தேசத்தார்களும் அது பட்டபாட்டில் பங்கெடுத்தார்கள்.

பாலஸ்தீனம் அந்நிய நாட்டுப் பகைவர்களால் துன்புறுத்தப்பட்டதன்றியும் உள் நாட்டிலேயே சமூக கலகங்கள் ஆதிகால முதல் தலைதூக்கி பல இடுக்கண்களை விளைவித்துக்கொண் டிருந்தது. சிற்றரசர்களும் டம்பத்தனமான கவர்னர்களும் பொறாமையே வடிவாய மதக் குருக்களும் இக் கலகங்களுக்குக் காரணமாயிருந்து பெருந் துன்பங்களை உண்டுபண்ணி வந்தனர். சிருஷ்டி கர்த்தாவின் சீரிய வடிவங்களை உலக மக்களுக்கு எடுத்தூட்டிய அப் புராதன நாடு, நாலாயிர வருடங்களாக மத குருக்களின் பொறாமைகளுக்கும் அக்கிரமச் செயல்களுக்கு முள்ளாகி தவித்துத் தத்தளித்தது. ஒவ்வொரு சமூகத்தினரும் ஒருவர்பால் ஒருவர் அச்சமும் அவநம்பிக்கையுங் கொண்டு ஒருவரை யொருவர் அடக்கி ஆளவேண்டுமென்ற எண்ணத்தில், சமாதான காலங்களிலும் பொது மக்களது ஆலயங்களையும் அவற்றைச் சேர்ந்த பொதுவிடங்களையும் தமது சொந்த ஆதீனத்திற்குக் கொண்டுவரும் பொருட்டுப் பெருந் தொந்திரவுகளையும் இடையூறுகளையும் உண்டுபண்ணி சிக்கலான சமூக குழப்பங்களை நிலைநிறுத்தி வந்தனர். அக் காலங்களில் இருந்துவந்தது போன்று இக் காலத்திலும் அந் நாடு கொண்ட சமூகச் சச்சரவுகளும் சண்டைகளும் பல சிக்கலான பிரச்சினைகளைக் கிளப்பிக்கொண் டிருக்கின்றன.

## பிரிட்டிஷ் ஆதீனம்

ஐரோப்பிய மகா யுத்தம் முடிவுறப்போகும் தருவாயில் அதாவது 1917-ம் வருடம், பிரிட்டிஷ் தளபதியான "ஜெனரல் ஆலன்பி" துருக்கியர்களைத் தோற்கடித்ததும், பிரிட்டிஷ் அரசாங்கம் பாலஸ்தீனத்தில் யூதர்களது தேசீய அரசாங்கத்தை நிலைநாட்டுவதென அறிக்கை வெளியிட்டது. நேச தேசங்களும் அமெரிக்க ஐக்கிய நாடுகளும் அதற்கிணங்கவே, ஜெனரல் ஆலன்பி அவர்கள் வெற்றி முரசோடு ஜெருசலேம் பட்டணத்துட் பிரவேசித்தனர். ஆனால் இவ்வறிக்கை வெளியாவதற்கு இரண்டு வருடங்களுக்கு முன்னர் பாலஸ்தீனத்தில் துருக்கி சுல்தானது பிரதிநிதியாக அரசாண்டு வந்த ஹூஸேயன் அரசர், துருக்கியர்களை முறியடிப்ப

தில் பிரிட்டிஷ் துருப்புகளுக்கு உதவி செய்ததினால், பிரதியுபகாரமாக அரபியர்கள் யாவரையும் துருக்கியின் ஆதீனத்திலிருந்து விடுவித்து பாலஸ்தீன நாட்டைச் சுதந்திர நாடாக விட்டுவிடுவோமென ஹுஸேயன் அரசரோடும் அவரது தளபதிகளோடும் செய்துகொண்ட பிரிட்டிஷ் அரசாங்கத்தின் இரகசிய உடன்படிக்கை இச் சமயமே வெளியாயிற்று. எனவே, அரபியர்கள், பிரிட்டிஷ் அரசாங்கம் உடன்படிக்கைக்கு விரோதமாக பாலஸ்தீனத்தை யூதர்கள் நாடாக ஆக்கிக்கொள்வதென வெளியிட்ட அறிக்கையைக் கண்டித்து அரபிய சுதந்திரத்தைக் கோரி நிற்கலானார்கள். இந் நிலைமையில் பிரிட்டிஷ் அரசாங்கம் இதற்கோர் வருடத்திற்கு முன்னால் பாலஸ்தீனத்தை சர்வதேச சங்கத்தின் அரசியலுக் குட்படுத்திக் கொள்வதாக பிரஞ்சு தேசத்தோடு ஒரு இரகசிய உடன்படிக்கையைச் செய்து பிரஞ்சுக்காரர்களின் உதவியைச் சம்பாதித்துக் கொண்டதும் உலகமறிவதற்கு ஏதுவாயது. எனவே இவ்விரண்டு உடன்படிக்கைகளும் பிரிட்டிஷ் அறிக்கை வெளியாவதற்கு முன் இரகசியமாகவேயிருந்தன. இவ்வுடன்படிக்கையில் பாலஸ்தீனத்தில் வசித்துவரும் யூதர்களது உரிமையைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டுமெனவும் கூறப்பட்டிருந்தது.

பிரஞ்சு தேசத்து இரகசிய உடன்படிக்கையா லெழுந்த கஷ்டங்கள் “ஸிரியா,” தேசத்திலோர் பாகத்தைப் பிரஞ்சுக்காரர்களுக் களித்ததினால் ஒருவாறு முடிவுற்றது. ஆனால் அரபியர்கள் தமது உடன்படிக்கையின்படி அரபிய பாலஸ்தீனத்தை நிலைநிறுத்தும்பொருட்டு பிரிட்டிஷ் அதிகாரிகளோடு இன்னும் வாதாடியே வருகின்றனர். பாரிஸ் நகரில் கூடிய மகா யுத்த சமாதான மகா நாட்டில் அரபியர்களும் யூதர்களும் தங்கள் தங்கள் உரிமையை யிட்டுப் போராடியதால் சர்வதேச சங்கம் அமெரிக்காவின் தலைவரா யிருந்த “வில்ஸன்” அவர்களின் விருப்பத்திற்கிணங்க, நீதியும் பாதுகாப்பும் வேண்டி நிற்கும் இரு சமூக மக்களின் பொருட்டு, பிரிட்டிஷ் அரசாங்கம் சர்வ தேச சங்கத்தின் பார்வையில் பாலஸ்தீனத்தை ஆண்டு வருவதற்கு அனுமதியளித்தது.

இவ்வாறு பிரிட்டிஷ் ஆதீனத்தின் கீழ் விடப்பெற்ற பாலஸ்தீனம், யூதர்களுக்கும் அரபியர்களுக்கும் நெடுங் காலமா யிருந்து வந்த தகராறுகளையும் தொல்லைகளையும் தீர்த்து வைப்பதில் ஒரு விதத்திலேனும் வெற்றி பெறாது பழைய நிலைமையையே யடைந்தது. அன்றியும் பிரிட்டிஷ் ஆட்சியின் பயனால் யூதர்கள் அரபியர்களின் மனக் கசப்பை அதிகமாகச் சம்பாதித்துக் கொண்டனரென்றும் கூறலாகும்.



## தற்கால நிலைமை

பாலஸ்தீன நாட்டின் உண்மையான நிலைமையை அறிவது அவ்வளவு இலகுவான காரியமன்று. அந் நாட்டில் மூன்று விதமான அரசியல் கக்ஷிகளிருந்து வருகின்றன. பிரிட்டிஷ் அரசாங்கம் சர்வ தேச சங்கத்தின் கீழ் அதனை ஆண்டு வருவதால், சர்வ தேச சங்கத்திற்கு அது பூரண பொறுப்புதாரி யாகும். ஜெருசலேம் கிறிஸ்தவர்கள் சர்வ தேச சங்கத்தின் தீர்மானப்படி யூதர்களுக்குச் சுதந்திரம் வளங்கும் விதத்தில் தீவிரமான முயற்சியெடுத்து வருகின்றனர். ஆனால் அந் நாட்டில் பெரும் பகுதி மக்களா யிருந்துவரும் முஸ்லீம்களோ யூதர்களது பொறுப்பில் நாடு போய்விடாதவாறு அவர்களது ஒவ்வோர் விஷயங்களிலும் முட்டுக் கட்டையிட்டு, தங்கள் சுதந்திரத்திற்காக மகா தீவிரத்துடன் உழைக்கின்றனர். அந் நாட்டில் மூன்று சமயங்களைத் தழுவிய கூட்டத்தார்களிருந்து வருகிறார்கள். யூதர்கள், முஸ்லீம்கள், கிறிஸ்தவர்கள். கிறிஸ்தவருள்ளும் ஒருவரோடொருவர் வேறுபட்டு நிற்கும் ஆறு தனிப் பிரிவுகளிருந்து வருகின்றன. இவர்களுடன் இன்னும் பன்னிரண்டு வகுப்பார்களைச் சேர்ந்த அந்நிய நாட்டு மக்களும் அங்குக் காணப்படுகின்றனர். இத்தனை வகுப்பார்களும் ஒருவரோடொருவர் நம்பிக்கையின்றி சுயநல நோக்கமே பிரதானமாகக் கொண்டு தங்கள் தங்கள் விஷயங்களையே அரசாங்கத்தில் வற்புறுத்தி பலமான பிரசாரங்கள் செய்து கக்ஷிப் பிரதி கக்ஷிகளை வலுப்படுத்தி வருகின்றனர்.

பாலஸ்தீனத்தில் சமூகப் பிரிவினர்களுக்குள் ஏற்பட்டுவரும் தகராறுகள் யாவும் பெரும்பான்மையும் ஜெருசலேம் நகரத்தில் புராதன கால முதற்கொண்டு இருந்துவரும் சாலமோன் கோவிலைச் சேர்ந்த ஓர் பழைய சுவரைப் பற்றியதே யாகும். இக் கோவிலின் சுவர் ஒன்றுமட்டுமே பண்டைக் காலந்தொட்டு யூதர்களுக்குப் பிரதானமாக யிருந்துவருகிறது. யூதர்கள் உலகில் எப் பாகத்தில் வசிப்பதாயினும், தமது சமூகத்திற்குக் குறைகள் நேரிடும்போதெல்லாம் இந் நகருக்கு யாத்திரை செய்து இச் சுவரின் முன்னால் தங்கள் குறைகளைக் கூறி அழுது தொழுது வருவது பல நூற்றாண்டு முதலாக வழக்கமா யிருந்துவருகிறது. இதனாலேயே இந் நாளும் அதற்கு “அழுகைச் சுவர்,” (Wailing Wall) என்ற காரணப் பெயரும் வளங்கி வரப்படுகிறது. ஆனால் இக் கோவிலின் சுவர் முஸ்லீம் மக்களின் மூன்று பிரதானமான மசூதிகளில் ஒன்றாகிய “ஹாரம்-எஷ்-ஷெரிப்,” என்ற மசூதியின் ஓர் பாகத்தைச் சேர்ந்ததாகும். ஏனென்றால் இவ்விடத்தி லிருந்தே முகம்மது நபி அவர்கள் தனது பரிவாரங்களுடன் பிரயாணப்பட்டு மதப்

பிரச்சாரம் செய்வதற்காக வெளியிறங்கினார்கள். ஆகவே அரபியர்கள் அந்தயிடம் என்றென்றும் ஓர் புண்ணிய ஸ்தலமாக யிருக்கும் பொருட்டு அழகியதோர் மசூதியை அங்கு கட்டி முடித்தனர். இம் மசூதி பல நூற்றாண்டுகால முதற்கொண்டு உலக முஸ்லீம்களுக்கு ஓர் புண்ணிய ஸ்தலமாகவும் விளங்குகிறது.

இந்த இடம் எச் சமூகத்தினர்களுக் குரியது என்பதுபற்றி யாதொருவிதமான கேள்வியும் தற்போது கிடையாது. அது முஸ்லீம் வகுப்பார்களுக்கே சொந்தமாகும். ஆனால் யூதர்களை அங்கு சென்று வணங்கி வருமாறு முன்னர் துருக்கியர்களும் இப்பொழுது பிரிட்டிஷ்காரர்களும் அனுமதித்துள்ளனர். இவ் வனுமதியின் பேரில் இவர்கள் சேர்ந்து வணங்கி வருவதில்தான் பெரும் தொல்லைகளும் துன்பங்களு முண்டாக ஏதுவாகின்றது. ஒருவர்க்கொருவர் பொறாமையின் நிமித்தம் பெரும் கலவரங்களை யெழுப்பிவிடுகின்றனர். அரபியர்கள் யூதர்களைக் குறை கூறுவதும் யூதர்கள் அரபியர்களைக் குறை சொல்லுவதுமாக ஓயாத சண்டைகளை உண்டுபண்ணி அற்பக் காரணங்களி லிருந்தும் உயிர்ச் சேதங்களுக்கும் இரத்தப் பிரவாகங்களுக்கும் இடனாகிவிடுகின்றது. சமய நோக்கங்களின் உண்மைத் தத்துவங்களை அடியோடு மறந்து மூடக் கொள்கைகளில் வெறி கொண்டவர்களாகி தாங்க முடியாத மனக் கசப்பை உண்டாக்கி என்றுந் தீராத பகைமையை வளர்த்து வருவதால் பாலஸ்தீன சரித்திரம் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் நோக்கத்திற்கேற்ப, அதாவது அதனை யூதர்களது நாடாக ஆக்கிவிட வேண்டுமென்ற உடன்படிக்கையைச் சரிவர நிலை நிறுத்துவதில் மகா பயங்கரமான கலக்கத்தை உண்டுபண்ணும் துக்ககரமான சம்பவங்களி னூடேதான் எழுதப்படல் வேண்டுமோ வென ஐயுறவேண்டியதா யிருக்கிறது.

## பிரிட்டிஷ் தன்னலம்

பிரிட்டிஷ் அரசாங்கம் சர்வ தேச சங்கத்தின் பார்வையில் பாலஸ்தீனத்தை அரசாளுவதற்கு ஒப்புக்கொண்டதானது, அந் நாட்டில் வதியும் கிறிஸ்தவர்களின் நன்மையையிட்டோ அல்லது யூதர்களின் நலத்தைக் கருதியோ அன்றி அரபியர்களின் பாதுகாப்பையிட்டோ அன்று. ஆனால் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் சர்வாதிகாரத்தை உலக மத்தியில் அதிகப்படுத்திக்கொள்ளவேண்டுமென்ற ஒரே கருத்தே அதற்குக் காரணமாகும். பாலஸ்தீனம் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் கீழிருக்குமாயின் அவர்களது முதலெண்ணம், ஐரோப்பாவையும் ஆசியாவையும் பிரித்துவைத்து தனிக்காவல் புரிந்துவரும் "சூயஸ்" கால்வாயை மிகப் பத்திர



மாகப் பாதுகாத்துக்கொள்ள முடியுமென்பதாகும். அவர்களின் இரண்டாவதெண்ணம், யூதர்களுக்குச் சுதந்திரம் கொடுப்போம் என்ற வாக்குறுதியால் உலக தேசங்களில் அங்கங்கே சிதறிக் கிடக்கும் யூதர்கள் சமுதாயத்தின் நல்லெண்ணத்தைச் சம்பாதித்துக்கொள்ள முடியுமென்றும் இதனால் பொதுவாக நேச தேசங்களோடும் சிறப்பாக அமெரிக்க ஐக்கிய நாடுகளோடும் பிரிட்டிஷ் அரசாங்கத்திற்குள்ள ஓர் ஐக்கிய தொடர்பு வளர்ந்தோங்கக்கூடு மென்பதேயாகும். இவ்வெண்ணங்களை அடிப்படையாகக் கொண்டுதான் பிரிட்டிஷ் அரசியல் ஞானிகள் முதலில் இரகசிய உடன்படிக்கைகளைச் செய்து பின்னர் சர்வ தேச சங்கத்தின் சம்மதத்தையும் பெற்று பாலஸ்தீனத்தைப் பிரிட்டிஷ் ஆதீனத்தி லுட்படுத்திக் கொண்டார்கள். இப்பொழுது புராதன பாலஸ்தீனம் இங்கிலாந்து தேசத்தின் ஏழாவது குடியேற்ற நாடாக விருந்து வருகிறது.

காலனல் ஜொஸியா ஸி வெஜ்வுட் என்பவர் பிரிட்டிஷ் பார்லிமெண்டில் ஓர் தொழிற்கக்ஷி அங்கத்தினர். இவர் "ஏழாவது குடியேற்ற நாடு" என்பதாக பாலஸ்தீனத்தைப் பற்றிய ஓர் நூலை வெளியிட்டுள்ளார். அதில் அவர் பாலஸ்தீனம் பிரிட்டிஷ் சாம்பிராஜ்யத்திற்கு எவ்வாறு துணையாக யிருக்கக்கூடு மென்பது பற்றி விவரிப்பது கருதற்பாலது. அவர் கூறுவதாவது:- "உலகமெங்கும் ஒருகோடியே நாற்பது லக்ஷம் யூதர்கள் வசித்து வருகிறார்கள். ஆனால் பாலஸ்தீனத்தில் வசித்துவரும் பத்து லக்ஷத்திற்கும் குறைவான யூதர்கள் பிரிட்டிஷ் மன்னர்பிரான் பேரில் எக்காலத்தும் ராஜ விசுவாசத்துடன் நடந்துகொள்வார்களென்று நிச்சயம் செய்துகொள்ள முடியாது. நாலா திசைகளுக்கும் செல்லுகின்ற ஆகாய விமானங்களும் கப்பல்களும் இவ்விடத்தைக் கடந்தே செல்லுகின்றன. சூயஸ் கால்வாயும் "ஹேய்பா" (Haifa) துறைமுகமும் மெஸபட்டோமியாவின் வியாபார அபிவிருத்திக் குறுதுணையாக யிருந்து வருகின்றன. ஹேய்பா துறைமுகத்திலிருந்து பிரிட்டிஷ் கப்பற் படைகள் கீழ் நாடுகளின் பாதுகாப்பையும் சுக வாழ்வையும் செவ்வனே கவனித்துவர முடியும். எகிப்து தேசம் நம்மை விரும்புவதேயில்லை. அங்கு நமக்கு நண்பர்களுமில்லை. பாலஸ்தீனமோ நமக்கு வேண்டிய நண்பர்களும் திறமையுள்ளவர்களுமான மக்களைப் பெற்ற ஓர் நாடென்பதை நன்கு உணரவேண்டும். அம் மக்களை நாம் நிச்சயமாக நம்பலாம். ஏனென்றால் அவர்கள் நம்மை நம்பி வாழுகின்றவர்கள். யூதர்கள் நம்மையே நம்பியிருக்கிறார்கள்." இவ்வாறு கூறும் காலனல் வெஜ்வுட் என்பார், பாலஸ்தீனத்தின் பிரதான நிலைமையை நன்கு

கவனித்து யூதர்களுக்குச் சுதந்திரம் வாங்கி அந் நாட்டை அவர்களது ஆதீனத்தில் விட்டுவிடுவது பற்றி சமீபத்தில் இஷ்டப்படுவதாகத் தெரியவில்லை. ஆனால் அவர் பாலஸ்தீனத்தில் வாழும் பெரும்பான்மை மக்களாகிய அரபியர்களை அந்நிய நாட்டார்களென்றும் அவர்கள் பிரிட்டிஷ் சாம்பிராஜ்யத்தை எப்பொழுதும் காப்பாற்றிக் கொள்வார்களென்பதில் தமக்கு நம்பிக்கையில்லையென்றும் கூறுகிறார். அத்துடன் யூகர்கள் வெள்ளையர்கள் வகுப்பைச் சேர்ந்திருப்பதால் தமது பாதுகாப்புக்கு அவர்கள் பிரிட்டிஷ் அரசாங்கத்தையே எப்பொழுதும் நம்பமுடியுமென்றும் ஆதலால் அவர்களது நிலைமையைப் பலப்படுத்திக் கொள்வது சாலவும் சிறப்புடையதென்றும் கருதுகிறார்.

## அரபியர்கள் கூறுவது

பாலஸ்தீனத்து அரபியத் தலைவர்களில் "பாரிஸ் கௌரி," (Faris Khouri) என்பவரும் ஒருவராவர். இவர் பீஸல் அரசரின் (King Feisal) மந்திரி சபையில் ஓர் பிரதான அங்கத்தினராயிருந்தவர். இவர் பாலஸ்தீன நிலைமையை யிட்டு மனம் வருந்திக் கூறுவதாவது:— "நாங்கள் அனுபவிக்கும் துன்பங்கள் யாவற்றிற்கும் அமெரிக்கர்களையே குறை கூறவேண்டும். "வில்ஸன்" என்பவரே இப் புதியதான பாதுகாப்பு அரசாங்கத்தை யுண்டுபண்ணி எங்களை அடிமைப்படுத்தி வைத்தார். இதற்காக அவர் நிச்சயமாக இப்பொழுது நரக லோகத்திலேயே யிருக்க வேண்டும். அமெரிக்கர்கள் யாவரும் இங்கு "பாதுகாப்பு அரசாங்கம்" என்பதின் பொருளைப்பற்றி நேரில் வந்து பார்க்கட்டும். மோசையின் காலத்தில் எகிப்திலிருந்து யூதர்கள் இங்கு வந்து கிராமங்களைச் சுட்டெரித்து ஆடு மாடுகளை விரட்டி மக்களையும் எவ்வாறு துன்புறுத்தி அப்புறப்படுத்தினார்களோ அதேபோல் தற்காலத்திலும் அந்நிய நாடுகளிலிருந்து குடியேறும் பொருட்டாக இங்கு வரும் யூதர்கள் அதே மனப் பான்மை யுடனேயே நாட்டினுட் பிரவேசிக்கின்றார்கள். இந் நிலைமையில் வரும் யூதர்களையே நாங்கள் வெறுக்கிறோம். எங்களுக்கு அத்தகையதான துன்பங்களும் தொல்லைகளும் ஏற்பட்டதற்கு பிரிட்டிஷ் அதிகாரிகளே காரணமென நம்புகிறோம். இங்கிலாந்து குரோதத்தனமாகவும் வெட்கத்தனமாகவும் எங்களைப் புறக்கணித்துவிட்டது. காலனல் லாரன்ஸ் (Colonel Lawrence) என்பார் உரிமையைப் பற்றி ஒரு நூறுதரம் வாக்களித்துச் சென்றார். ஆனால் அவைகள் யாவும் புரட்டு என்பதை நாங்கள் அறிவோம்." இவ்வாறு 'பாரிஸ் கௌரி' அவர்கள் கூறுவதிலிருந்து அரபியர்களுக்கு ஏற்பட்டுள்ள தகராறுகள் யாவும் "அழுகைச் சுவர்" காரணமாகாதென்பது நன்கு புலனாகும். முஸ்தபா காஸீம் பாஷா எல் ஹுஸேயின் என்பவர், பாலஸ்தீனத்து நிர்வாக சபைக்குத் தலைவராயிருந்து வருபவர். இவர் பாலஸ்தீனத்தில் ஓர் மாகாண கவர்னராகவும் ஜெருசலேம் நகர அதிகாரியாகவும் துருக்கி பார்லிமெண்டில் உப அக்கிராசனாதிபதியாகவு மிருந்து. அரசாங்கத்திலும் பொது மக்களிடமும் மிகுந்த நன் மதிப்புப் பெற்றுவந்த ஓர் அருந் தலைவர். பால்ஸ்தீனத்து நிலைமையைக் குறித்து இவர் கூறுவதாவது:— "இரண்டு சமூகத்தார்கள் ஒருவரோடொருவர் பகைமையிலும் தப்பெண்ணத்திலும் ஒன்று சேர்ந்து வாழ்வதென்பது இயலாத காரியம். எங்கள் பாலஸ்தீன பிரச்சினைகள் எளியதும் நேர்முகமானதுமாகும். சென்ற நவம்பர் மாதம் இரண்டாம் தேதி பாலஸ்தீனத்தி லிருக்கும் எல்லா அந்நிய நாட்டு அதிபதிகளுக்கும் பாலஸ்தீன பிரிட்டிஷ் பிரதிநிதிக்கும் சர்வ தேச சங்கத்திற்கும் எங்களது கண்டனங்களை அனுப்பிவைத்தோம். நாங்கள், பால்மோர் உடன்படிக்கையானது கையாளுந் தரமல்லவென்பதை நம்புகிறோம். நாங்கள் கிறிஸ்தவர்கள் யூதர்கள் முஸ்லீம்கள் ஆகிய மூன்று வகுப்பார்களுக்கும் குடியேறும் விஷயத்தில் பூரண உரிமை யிருக்கவேண்டுமென்று கூறினோம். ஏனென்றால் பாலஸ்தீனமானது மூன்று சமூக மக்களுக்கும் தெய்வீகம் பொருந்திய ஒரு புண்ணிய நாடாகும். ஆனால் அவ்வாறு குடியேற்றப்படுவதானது நாட்டின் பொருளாதாரத் தொகுதிக்கு ஏற்றதாக விருக்க வேண்டும் என்றோம் நாங்கள் பிரிட்டிஷ் பாதுகாப்பின்கீழ் நாட்டில் வதியும் எல்லா சமூக மக்களுக்கும் அரசாங்கத்தில் சமத்துவமான பிரதிநிதித்வம் அளிக்கப்பட வேண்டுமெனக் கேட்டோம். நாங்கள் பிரிட்டிஷ் சர்வாதிகாரத்திற்கு ஓர் முடிவு ஏற்பட வேண்டுமென்றும் கூறினோம். நாங்கள், முடிவாக எங்கள் வேண்டுகோள் நிராகரிக்கப்படுமானால் அரபியர்களுக்கும் யூதர்களுக்குமுள்ள சச்சரவுகள் வளர்ந்தோங்குமென்றும் தற்கால நிலைமையைப் பொருத்த வளவில் அது ஏற்பட்டே தீரும் என்றும் கூறினோம். எனவே பூரண பொறுப்பு யாவும் பிரிட்டிஷ் அதிகாரிகளையே சாரும். எதிர் காலம் என்னவாகுமென்பதை குறித்து இறைவனே நிச்சயம் செய்துகொள்ள முடியும்." பாலஸ்தீனத்திலும் பாலஸ்தீனத்தைவிட்ட வெளி யிடங்களிலும் அரபியத் தலைவர்கள் இவ்விதக் கருத்துக்களை கொண்டிருக்கின்றனர். ஆங்கு வதிகின்ற அரபியர்கள் தங்கள் பாரம்பரையான வாழ்க்கை வரலாறுகளை ஏழாவது நூற்றாண்டு கால முதற்கொண்டே எடுத்துக் காட்டுகின்றனர். உண்மையில் அவர்களே அந் நாட்டுக்கு உரிமையாளர்களுமாவார்கள்.

## அரசியற் சுதந்திரம்

பிரிட்டிஷ் அரசியல் ஞானிகளுக்குள் பாலஸ்தீன அரசியல் விஷயமாகப் பலவித கருத்து வேற்றுமைகளிருந்து வருகின்றன. வைதீகப் போக்குடைய பாதிரிமார்கள் பாலஸ்தீனத்து சுதேசக் கிறிஸ்தவர்கள் பக்கமே அனுகூலமா யிருந்துவருகின்றனர். வேறு சிலர் முஸ்லீம்களுக்கு விரோதமாயிருந்து அவர்களைத் தலைதூக்கா திருக்கும் விஷயங்களில் கருத்துடையவர்களா யிருக்கிறார்கள். மற்றவர்கள் பாலஸ்தீன அரசாங்கம் யூதர்களின் அபிவிருத்திக்கு எப்பொழுதும் துணையாக யிருந்து பிரிட்டிஷ் சாம்பிராஜ்யத்தின் கீழ் யூதர்களது ராஜ்யமாக முடிவில் ஏற்பட்டுவிட வேண்டுமென்ற கருத்துக்கொண்டு அதற்கேற்ற முறைகளில் வேலை செய்து வருகின்றனர்.

எவ்விதமாயினும் பாலஸ்தீனத்தில் பெரும்பான்மை மக்களா யிருந்துவரும் அரபியர்களின் சுதந்திரத்தையே ஒவ்வொரு கீழ் நாட்டு வாசிகளும் கருத முடியும். அரபியர்கள் தமது சுதந்திரத்தை யடைய வேண்டுமென்ற நோக்கத்திலேயே பிரிட்டிஷ் அதிகாரிகளுடன் உடன்படிக்கை செய்து, தமது மதத்தினரா யிருந்தபோதிலும் துருக்கியர்களை எதிர்த்து பிரிட்டிஷ்காரர்களுக்குதவி செய்தனர். ஆனால் பிரிட்டிஷ் அரசியல் நிபுணர்கள் தமது பூர்வாங்க முறைப்படி கள்ளத்தனமாக பிரஞ்சுக்காரர்களுடன் ஓர் உடன்படிக்கையை இடையில் உண்டுபண்ணி, ஸிரியாவின் ஓர் பாகத்தை அவர்களுக்கு அளித்துவிட்டு, பாலஸ்தீனத்தைத் தமது ஆதீனத்தில் ஆக்கிக்கொண்டனர். பின்னர் அதே அரசியல் தந்திரிகள் அமெரிக்காவிலிருக்கும் யூதர்களது உதவியைப் பெறும்பொருட்டு பாலஸ்தீனத்தை யூதர்களது நாடாக ஆக்கிக்கொள்வோமென, பால்மோர் உடன்படிக்கையின் மூலம் பறைசாற்றினர். அரபியர்களும் பால்மோர் உடன்படிக்கையைக் கண்மூடித் தனமாக அச்சமயம் ஒப்புக்கொண்டனர். இப்பொழுதோ பாலஸ்தீனத்தில் அரபியர்களின் வலிமையைக் குறைத்துவிட வேண்டுமென்ற பிரிட்டிஷ் சூட்சியின் பயனால் பால்மோர் உடன்படிக்கையின்படி யூதர்கள் நாலா திசைகளிலுமிருந்து வந்து குடியேறிவிட்டார்கள். நிலங்களை வாங்கியும் வியாபார நிலையங்களை ஏற்படுத்தியும் பெரும் மூலதனங்களைக் கொண்ட தொழிற்சாலைகளை நிறுவியும் யூதர்கள் நாளொரு வண்ணமுமாகப் பெருகி வருகின்றார்கள். இதுகண்டு அரபியர்கள் தமது நியாயமான உரிமைகளைப் பெற முடியாதெனத் தேர்ந்து மதத்தின் பேரால் அழுகைச் சுவரைக் காரணமாகக் கொண்டு பெரும் சச்சரவுகளை உண்டாக்கிவிடவே, எத்தனையோ தடவைகளில் பெரும் உயிர்ச் சேதங்களுக்கும் பொருட் சேதங்களுக்கும் இடமாகிவிட்டது. இக் கலவரங்களை சமயத்தின் சார்பாகக் கூறப்பட்ட போதிலும் உண்மையில் அரசியற் சுதந்திரத்தை அரபியர்களுக்கு மறுக்க பிரிட்டிஷ் அரசாங்கம் உடன்படிக்கையையும் மீறி நடந்ததே காரணமாகு மென்பது சரித்திர ஞானிகளின் ஆழ்ந்த கருத்தாகும்.

# வாசனைத் திரவியங்களின் பெருமை. *

ரா. நாராயணஸ்வாமி, ஆசிரியர், "பாரதி."

பண்டைக் காலத்தில் செல்வத்தால் சிறப்புற்று இந்தியா உலகத்தில் சிரோமணியாக விளங்கியது. மற்றத் தேசங்களைக் காட்டிலும் இந்தியாவையே உலகம் அன்று அதிகமாக அறிந்திருந்தது. இதற்குப் பல காரணங்கள் உண்டெனினும் அவைகளை யெல்லாம் விட்டுவிட்டு ஒன்றை மட்டும் இங்குக் கவனிப்போமாக. செடி கொடிகளின் உற்பத்திகால முதற்கொண்டே, வாசனைத் திரவியங்களின் உற்பத்தியைப் பற்றியும் உபயோகங்களைப் பற்றியும் ஆச்சர்யமான கதைகள் இருக்கின்றன. நாகரீகம் அடைந்த கால முதல் உலகத்தின் நாலுபக்கங்களிலிருந்து வாசனைத் திரவியங்களைத் தேட ஆரம்பித்தார்கள். இரத்தினங்களையும், தங்கத்தையும் தேடுவதில் எவ்வளவு அதிக கவனம் செலுத்தினார்களோ அவ்வளவு அதிக கவனம் ஏலம் முதலிய வாசனைத் திரவியங்களைத் தேடுவதில் பண்டைக்காலக் கண்டுபிடிப்பாளிகள் காலஞ் செலுத்தினார்கள். கிறிஸ்தவ பைபிளிலும் அதன் பழைய புதிய ஏற்பாடுகளிலும் வாசனைத் திரவியங்களைப்பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. கிறிஸ்து பிறப்பதற்கு 2700 ஆண்டுகளுக்கு முன்னரே சீன தேசத்தில் பச்சிலைகளைப் பற்றிய புஸ்தகமொன்றில் வாசனைப் பொருள்களைப்பற்றி எழுதப்பட்டிருக்கிறது. முற் காலத்தில் சீன தேசத்து அரசர்களுடன் சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் பேசும் பொழுது வாயில் வாசனைத் திரவியத்தைப் போட்டுக்கொண்டே பேசவேண்டுமாம். பிளினி, டாலமி, ஸ்ட்ராபோ, பெரிபிளஸ் முதலிய கிரேக்க ரோம ஆசிரியர்களும் இன்னும் மற்றவர்களும் நெடுங் காலத்திற்கு முன்னரே வாசனைப் பொருள்களைப்பற்றி எழுதியிருக்கிறார்கள். பண்டை அரபியரும், பெர்சிய சரித்திரக்காரர்களும் வெகு காலத்திற்கு முன்பே இவைகளைப்பற்றி நூற்களில் வரைந்திருக்கிறார்கள். அயல் நாட்டு யாத்திரிகர்களான மார்கோபோலோ,

* 23—9—31 "நவசக்தி"யில் எழுதியது.

நிக்கலோ-காண்டி (வெனிஸ் வர்த்தகர்), பார்போசா (போர்த்துக்கீய யாத்திரிகர்), மாண்டிகார் விர்ஞேஜான், கார்ஸியா டா ஆர்தர் முதலியவர்கள் கேரள நாட்டுச் சம்பார வர்க்கங்களைப் பற்றிக் குறிப்புகள் அவர்களுடைய புஸ்தகங்களில் எழுதியிருக்கின்றார்கள். சில அரசர்களுக்குக் கப்பங்கட்டும் பொன் நாணயங்களுடன் வாசனைத் திரவியங்களும் அவசியம் கொடுக்க வேண்டுமாம். ஏலம், கிராம்பு, மிளகு, ஜாதிக்காய், ஜாதிப்பத்திரி, இலவங்கப்பட்டை, இஞ்சி முதலியவைகளைப்பற்றிப் பற்பல புராதன தேசப் பண்டை நூற்களில் காணப்படுகின்றன. வாசனைத் திரவியங்களில் அநேகம் இந்தியாவில்—முக்கியமாகக் கேரள நாட்டில் இருந்தபடியால், ஆதிகாலம் முதற்கொண்டு, இந்தியாவை உலகம் பெரிதும் கௌரவித்து அதனுடைய நேசத்தை அதிகமாக விரும்பியது.

## இந்தியா! இந்தியா!! இந்தியா!!!

15-ம் நூற்றாண்டு பரியந்தம் ஆசியா, ஆப்பிரிக்கா, ஐரோப்பா ஆகிய மூன்று கண்டங்களையே அப்பொழுது ஜனங்கள் தெரிந்திருந்தார்கள். அப்பொழுது உலக வியாபாரம முற்றிலும் பொதுவாக ஆசியா கண்டத்தினிடமே யிருந்து வந்ததெனினும், இந்தியாவிலிருந்தே அநேக வகை அதிகச் சரக்குகள் மற்றத் தேசங்களுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. இவ்வித வியாபாரத்தால் ஆசியா கண்டத்து வியாபாரிகள் பணம் திரட்டுவதைக் கண்ட ஐரோப்பியர்கள் தாங்களும் இந்தியாவுடன் வாசனைத் திரவிய வியாபாரம் செய்ய விரும்பினார்கள். அந் நாட்களில் அவர்களுக்கு இந்தியா எங்கே யிருக்கிறதென்று தெரியாது. ஐரோப்பா கண்டத்தில் அப்போது இந்தியா! இந்தியா!! என்ற பேச்சே எங்கும் பலமாயிருந்தது. இந்தியா தேசம் கிழக்குப்பக்கத்தி லிருப்பதாகக் கருதி கோலம்பஸ் என்பவன் இந்தியாவை நோக்கிப் புறப்பட்டான். கடைசியில் மேற்கு இந்தியத் தீவுகளைக் கண்டுபிடித்தான். புதிய உலகமாகிய அமெரிக்காக் கண்டமும் கடைசியில் கண்டுபிடிக்கப்பட்டது. இந்தியா கொலம்பஸ் என்பவனால் கண்டுபிடிக்க முடியவில்லை.

இவ்வாறு ஐரோப்பியர் அரிய பிரயத்தனம் செய்துகொண்டிருக்கையில், போர்த்துக்கல் அரசராகிய ஜான் என்பவர் வாஸ்கோடி. காமா என்பவனை இந்தியாவைக் கண்டுபிடிக்க அனுப்பினார்.

அரபிக்கடலுக் கடுத்த மேற்குத்தொடர்ச்சி மலையின் குன்றாத இயற்கை வளங்களாலும் குறையா மழை வீழ்ச்சியாலும் செழுமை பெற்று ஏலம், மிளகு, இஞ்சி, மஞ்சள் முதலியவைகள் ஏராளமாக உண்டாகும் கேரளத்தின் கடற்கரையைக் கண்டவுடன், போர்த்



துக்கீய மாலுமிகள் அடங்கா ஆனந்தத்தால், இந்தியா! இந்தியா!! இந்தியா!!! என்று கூவிக்கூவி மகிழ்ந்தார்கள். கள்ளிக்கோட்டைத் துறைமுகத்தில் இறங்கி ஜாமோரின் அரசனைக் கண்டு வணங்கினார்கள். அவரும் அவர்களுக்கு வேண்டிய வசதிகள் செய்து கொடுத்தார். பின்பு டச்சுக்காரர்களும் புறப்பட்டு மலையாவில் வர்த்தகம் செய்ய ஆரம்பித்தார்கள். இதுபோது ஐரோப்பாவில் பல தேசத்தார்களும் வியாபார நிமித்தமாய்க் கடல்கடக்க ஆரம்பிக்கவே, ஆங்கிலேயர்களும் 'ஈஸ்ட் இந்தியா கம்பெனி'யை ஸ்தாபித்துக் கொண்டு இந்தியாவுக்குப் புறப்பட்டார்கள். பிரமாண்டமான அலைகளையும் எதிர்த்துக் கொடூரமான புயல் காற்றையும் தாங்கிக் கடுங் கஷ்டங்களையும் ஏற்று பெரும் சமுத்திரங்களை ஆவலோடு கடந்து குன்றா உற்சாகத்துடனும் குலையா ஊக்கத்துடனும் அயல் நாட்டார்களை இங்கு வரும்படி செய்தது, மலையாள தேசத்தின் வாசனைத் திரவியங்களல்லவா? புதிதாகப் பல தேசங்களைக் கண்டு பிடிக்கச் செய்தது இந் நாட்டின் செல்வச் சிறப்பேயாகும்.

## கேரள நாடு

ஜமதக்னி முனிவரது புதல்வரான பரசுராமரால் கேரள தேசம் ஸ்தாபிக்கப்பட்டதாகப் புராணங்கள் கூறுகின்றன. சில ஆயிர வருட காலமாக சில நம்பூதிரி பிராமணக் குடும்பங்கள் கேரளத்தில் இருப்பதாக அக் குடும்பச் சரித்திரங்கள் கூறுகின்றன. கிறிஸ்து பிறப்பதற்கு ஆயிரக் கணக்கான வருடங்கள் முன்னிருந்து வாசனைத் திரவியங்களும், யானைத் தந்தங்களும் வாங்கும் பொருட்டு பொனிசீயர்கள் மலபார் கரைக்கு வந்ததாக ரிகார்டுகளிருக்கின்றன. கிறிஸ்தவ பைபிளில் சொல்லப்பட்ட சாலமன் அரசனது கப்பல்கள் மலையாளம் கரையை அடைந்ததாகப் பண்டைச் சரித்திரம் கூறுகின்றது. மெகாஸ்தனிஸ் என்னும் கிரேக்க தூதுவனும் மலையாளத்தைப் பற்றி எழுதியிருக்கிறான். கிரேக்கக் கப்பல்கள் மலையாளத்திற்கு வந்ததாகப் பிளினி என்னும் பண்டை ஆசிரியர் எழுதுகிறார்.

சேரநாடு சீன தேசத்துடனும் முற்காலத்தில் வியாபாரம் செய்திருக்கிறது. அரேபியர்களும் 8-வது நூற்றாண்டில் சேர நாட்டுடன் வியாபாரம் நடத்தி யிருக்கின்றார்கள். பிளினி காலத்தில் வசித்தவரான பெரிபிளஸ் அநேக முறை இத் தேசத்திற்கு யாத்திரை செய்திருக்கிறார். பாரதத்திலும், ராமாயணத்திலும் கேரள நாட்டைப்பற்றி விவரிக்கப்பட் டிருக்கிறது. திருவாங்கூரைச் சேர்ந்த காடுகளில் உண்டாகும் வாசனைத் திரவியங்களின் விற்பனையால் பாண்டிய சோழநாடுகள் செல்வத்தில் செழித்து

# தேச நேசமும் தமிழகமும்.

திரு. S. சோமசுந்தர பாரதியார் அவர்கள், M. A., B. L.

தற்போது அகில பாரத நாட்டிலும் புதிய ஆதர்ஸம் எழுந்து பரந்து வளருகிறது. நாடெங்கும் நம துரிமைப் புத்துணர்வு வேரூன்றித் தழைகின்றது. நாகரிக உலக முழுவதையும் நாசமாக்கி முடிந்த சமீப காலப் பெரும் போரின் பயனாக மக்கள் வருக்கத்தினர் யாவருமே எங்கணும் அடிமை வாழ்வகற்றிச் சுயவுரிமை நாட்டத்தை மேற்கொண்டு முயல்கின்றனர். இத்தகைய முற்றுலக முழுக்கிளர்ச்சி தமிழரைத் தவிர்க்கவில்லை. பிறர்க்கன்றித் தனக்குழையா மெய்த் துறவியான காந்தி யடிகளின் அறமுயற்சித் திறம் அயர்ந் துறங்குந் தமிழரையு மெழுப்பி யாடச்செய்கிறது.

நெடிதுநாள் நீர் வறந்த ஆற்றகத்தே புகுந்தொழுகும் புது வெள்ளம், தெளிந்து குளிர்ந்திருப்பதில்லை. பொங்கிய நுரையும், தங்கிய கழிமுடைக் களியழுக்கும் எங்கணும் பரந்து, வெங்கொதியலை மலைந்து, கரைகடந்து அணுகிய அனைத்தையு மழித்திழுத்து விரையும். அதில் விழுவார் நீந்தலரிது. அதன் வேகத்தை விரும்பி

---

விளங்கின. இயற்கை வளங்களால் செழிப்புற்று வனங்களில் தானாகவே ஆதியில் ஏலச் செடிகள் உண்டாகி வளர்ந்து காய்த்துக் கொண்டிருந்தன. எவ்வளவு வளப்பமாயிருந்தால், தானாகவே ஏலம் உற்பத்தியாகும்! ராமர், லட்சுமணர் சீதையைக் கண்ட வனத்தில்—பாண்டவர்களைக் கண்ட கானகத்தில்—பொது மகள் வயிற்றிலே குல மகளாய் அவதரித்து அப்பால் அறமகளாய் விளங்கிய அம்மை மணிமேகலாவின் அபிமானத் தாயாகும் கண்ணகி என்னும் வீரபத்தினி சென்ற பொழிலில்—பற்பல பண்டைச் சின்னங்கள் நிறைந்த காட்டில் எத்தனையோ உயரிய மூலிகைகளும் வாசனைத் திரவியங்களும் அரிய பண்டங்களும் இன்னும் உண்டாகிக்கொண் டிருக்கின்றன. இம் மலையில் உண்டாகும் ஏலமே உலகத்தில் தனிப் பெரும் பெருமை பெற்றது. உலகத்தில் இந் நாட்டில் அதுவும் இந்த ஏல மலையில்தான் இவ்வளவு விஸ்தார மான பூமியில் ஏலம் பயிரிடப்பட்டிருக்கிறது.

---



வீழ்ந்தாழாது, அதன் ஒழுக்கியலும் துறையும் தேர்ந்து அறிவாற்றல்களால் அதையடக்கி யாளுபவருக்கு அது அளவற்ற பயன் தரும். அன்றிச் செம்மாந்து குதிப்பவரைச் சுழியிற் செறித்து அலைத் திழுத்தாழ்த்திக் கொன்று கழியும். அதுவே போல, புதிய தேச நேச வெறியாட்டும் நன்கறிந் தாளுபவரை நல்வழிப்படுத்தவும், திமிர் கொண்டு திரிபவரைத் தொலைத்தொழிக்கவும் வன்மையுடைய தென்பதை மறத்தற்கில்லை.

இத் தொடர்பில் மற்றோருண்மையும் மறவாது போற்றற்குரியது. தீமை விதைத்து நன்மை யறுத்தவரை இவ்வுலகில் யாரும் எஞ்ஞான்றும் கேட்டதில்லை. நன்மை நோக்கத்திற் குதவுமெனத் தீங்கிழைப்பவர், அமிழ்தின் பயன் தருமென நஞ்சருந்துமவரை யொப்பார். சிங்கி குளிர்ந்தும், கொல்லும். மருந்து கசந்தாலும், பிணி தணித்து வாழ்வு தரும். சிகிச்சை மேற்கொண்ட பின், மருத்துவன் ஆணை மறுத்து, அவன்கரு மருந்தினை வெறுத்து, அவபத்தியப் பொருளருந்தின், பழைய நோய் தணியாது வளர்வதுடன், புதுப் பிணிகளுக்குமாளாகி மிக வருந்தி விரைந்து மாள நேரும். தேர்ந்த மருத்துவன் தெளிந்த மருந்தோ, காளடைவில் நலமே வளர்க்கும்; எவ்வகைத் தீமையுமிழையாது.

தற்காலத் தமிழருக்குத் தேசீய முயற்சி சிறிது புதிய பயிற்சி. இதிற் கைபழகித் தேர்ச்சி பெறுமுன், நாட்டினை யாட்டும் பெருங் கிளர்ச்சி வேக வெள்ளத்தில் விரைந்து பாய்ந்து கைகா லாடித் தோய்ந்து தாழ்ந் தாழ்ந்து ஒழிவது பேதமையன்றோ? நிலை நீர்க் குட்டத்தும் நீந்தி யறியாதார் யாற்று வெள்ளத்தில் துள்ளிக் குதிப்பாரா? தேர்ந்த ஆசானைச் சார்ந்து அவன் சொற்கடவாமற் கைபழகிய பின், ஆற்றிலும் அருங் கடலிலும் நீந்தித் தன்னைக் காப்பதுடன் தப்பிய தம்மவர் பிறரையும் ஏந்திக் கரை சேர்க்கலாம். பழகாமலும், பழகுவதில் ஆசான் பணித்த வரம்பு திறம்பி நல்வழிப்படாமலும் திரிபவருக்குப் பெரு வெள்ளத்தை அடக்கியாண்டு பயன்படுத்தல் கைகூடும் காரியமா? இவ்வாறு திரிபவர், கரையழித்து விரைந்து வரும் வெள்ளத்தைத் தடுக்கவுமியலாது; அடக்கியாண்டு பயன்படுத்தற்கோ அவர் அருகரில்லை. இந் நிலையில் அன்னவர் கையறவுகொண்டு அழிந்தொழிவதன்றிப் பிறிது வழி காணமாட்டார்.

புதிய தேசீயக் கிளர்ச்சி தடுப்பரிய வெள்ளமாகி நாடெங்கும் பரந்து வளர்ந்து வருகிறது. இனி யிதனை வேண்டாமென விலக்கி விட விரும்பினும், தப்பி நிற்க இடமிந் நாட்டிலில்லை. வருகின்ற புதுப்புனலைப் பயன்படுத்த வழிதேடி யாகவேண்டும்; அதற்குரிய துறைகளினை முறையாகப் பயிலுதற்கு விரைய வேண்டும். நம்ம

வரோ நெடுங்காலம் நீரறியா வெஞ் சுரத்தில் வசித்து வந்தோர். பிற நாட்டுப் புது வெள்ளப் பெருக்குகளில் நெருக்குண்டு நீந்தி நன்கு கைவந்த நஞ்சுற்றத்தொரு தலைவன் நமக்கிக்கால் வாய்த்துமுள்ளான். தன்னலத்தை அறமறந்து, நம்மவரை ஈடேற்ற அவனணுகிக் கைகொடுத்து நந்நீந்தத் திற நமக்குப் பயிற்றுவிக்க விழைந்தருகே நிற்கின்றான். நாளும் நம்மவரை உய்விப்பதையே தனக்குரிய வேதனமாகக் கருதுகின்றான். நீந்தப் போர் வல்லுநர்கள் பிறரெல்லாம் இவனை முதற் றிறத்தவனாய், நல்ல மனம் படைத்தவனாய் வழுத்துகின்றார். துணையற்ற நாமுமிவன் தனைத்தானே தஞ்சமெனக் கொண்டு விட்டோம். என்னினியும் நாமிவன் சொற்கேளாமல், அறத்துறைகள் அவன் முறையிலாளாமல், வாழாமல் மாளுகின்றோம்.

துணையின்றி மெலிந்துள்ளோம், வலியுமில்லேமாகிய நம்மவருக்கு அறத்துணையன்றி ஆக்கவழி வேறுமுண்டோ? விடுதலை (மோக்ஷத்தை)யைத் தரும் கைம்மாறு தருவதாயினும் "பிறர்க்கின்னா செய்யாமையே மாசற்றார் கோள்" என்று வற்புறுத்திய தமிழ்வேதம் பன்னூறாண்டுகள் பயின்றுள தமிழகத்தில், அவ்வடிபட்ட தமிழ்ச்சுருதி மருந்தையே காந்தியடிகள் நம்மவருக்கு மீட்டு மூட்ட முன்வந்துள்ளார். "எனைத்தானும், எஞ்ஞான்றும், யார்க்கும், மனத்தானும் மாணா செய்யாமை தலை"யறமாக நாம் கையாள வேண்டுமென்று அடிகள் கூறின், அது பண்டைத் தமிழ் மூதறமாவதேயென விரைந்து மேற்கொள்ளாமல் மயங்குவானேன். இவ்வறத்தைச் செவ்வனே கையாண்ட பண்டைநாளில் தமிழர் தனியரசு நடத்தியதுமன்றி, அக்கால உலகனைத்தும் தமை வியக்கத் தலை சிறந்து ஓங்கி வாழ்ந்தார். பிறகதனை நெகிழவிட்ட இடையிருட் காலத்தே தான் நம்மவர் நாட்டுரிமை நாகரிக வாழ்வுகளையிழந்து மிலேச்சருக் கடிமையானார். நம்முரிமை நலங்களை நாம் பெறுதற்கு மீட்டுமித் தமிழ்த் தொல்லை நல்லறத்தை நாடெங்கும் தழைவிக்க விழைய வேண்டும். அடிகளுமிங் கதனாட்சி ஒன்றனையே வேண்டுகின்றார்.

உண்மை யிதுவாகவும், தேசத் தொண்டியற்றுவதாகக் கூறி, இத் தமிழறம் திறம்பி நாட்டின் நன்மைக்கு அயலில் ஏதிலார் மாட்டு இயன்றாங்கு இன்னா இயற்றுவதும் கடனெனப் பிதற்றுவாரும் சிலருளராகையால், உண்மைத் தேச நேசத்திற்கு முதற்படியும் கடைப்பிடியும் இன்னா விலக்கே இன்றியமையாததாகுமென்பதை ஈண்டு முதலில் வலியுறுத்த விடைகொள்கின்றேன்.

என்றும் எந் நிலையிலும் யாருக்கும் எனைத்துணையும் தீங்கிழைப்பதன் பயன் தீமையே யாவதன்றி நன்மையாகாது. "பிறர்க்கின்னா நமக்கு நல"மென்பார். பிறர்க்குவிடம் நமக்கமுதென்று மனப்பால் குடித்து மாய்வார். ஒரோவழி நலம்போலத் தோற்றுமேனும், இன்



னாமை யாண்டும் இன்னாமையையே விளைப்பதாகும். "அறனறிந்து தீதின்றி வாராத எப்பொருளும்" இனிமையவாது. கடனறிந்து தேசத் தொண்டு மேற்கொள்ளும் சான்றோர் எவர்க்கும், தெய்வத் தொண்டருக்குப் போலவே, "நல்லவை எல்லாம் கடனென்ப." தீயார் மாட்டும் தீங்கிழைப்பது, மெய்க்கடன் மறந்து அறங்கொல்லும் பெருமித வெறியேயாகும். "நம்மோடொவ்வார், நம்பகையாவார்" என்று கொள்ளும் குறு நோக்கம் தமிழகங்கொள்ளாத சிறு நோக்காம். "அறத்திற்கே அறம் துணையாம்" என்பார் அறிவிலார்; ஆராயின், மறத்திற்கும் கோடாத நல்லறமே இறவாத் துணையாக நிற்கும். கயவரையும் கயமைகளைந்து கனிவித்து நல்வழிப்படுத்துவது இன்னா விலக்கிய இனிய நல்லறத் துறையேயாகும்.

மது விலக்கல், அந்நியத்துணி மறியல் முதலிய தேச நற்றொண்டுகளிலும், வழிப்படா வன்கணாளரையும் அடைவில் வயப்படுத்தற்குரிய வழி இன்னா விலக்கிய இனிய முறைகளேயாகும். கடுஞ் சொல்லும் கொடுஞ் செயலும் கெடுந் தொழிலாரைத் திருத்தும் நன்னோக்க நிறைவுக்கும் கேடே தருமன்றி, இனிதுதவாது. இப்போது நாம் வெறுக்கும் தீநெறி யொழுகுவாரும் நம்மவரென்பதை நாமறக்கொணாது. அடிகள் பறையடிக்கு முன் நம்மிற் பலரு மிவர்போலவே பல துறைகளில் நாட்டினலத்தொடு நம்மறமும் மறந்து திரிந்தவரே என்பதை ஞாபகத்தில் அனவரதமிருத்தல் வேண்டும். ஏதிலருக்கும் தீது கருதுதல் தீதேயாகும். அப்படியிருக்க நம்மவர் தவறு பொறாமல் நாமே யவர்க்கின்னா விளைப்பது அறிவன்று; அறமுமன்று. இந்தியாவின் வட பகுதிகள் சிலவற்றுள் சில இளைஞர் அறந் தடுமாறி நாட்டுத் தொண்டுக்குப் பொருள் தேடுபவராய் ஆறலைத்தும் தனிகர் மனை புகுந்து கொடுமையாற்றிப் பணம் பறிமுதல் செய்தும் வருவதை நாமறிவோம். இதுவேயுமன்றி நம்மை அடிமை நிலையி லிருக்கவைக்கு அந்நிய ஆட்சி வெறுப்பின் பயனாக அவ்வாட்சிக்குரியார் அந்நியர் சிலரை மறைந்தும் வலிந்தும் உயிர்வௌவும் வன்கண்மை தேசத் தொண்டெனக் கருதி மருளும் சிறு சேவகர் சிலரைப்பற்றியும் அடிக்கடி கேட்கின்றோம். சிந்தியாது சிலபோது இன்னவரைப் புகழ்ந்தும், இவர் தீத் தொழில்களை யிகழாமலும் இருக்கின்றோம். இத்தகைய மறத் தொழில்களால் நாட்டுக்கு விடுதலை நாள் விடியாது அகன்று வருவதுமன்றி, நமது சமுதாய வாழ்வும் நலிகின்றதென்பதைத் தெள்ளறிவாளர் தெருட்டி வலியுறுத்துவது கண்டேனும் தெளிந்து தேர்தல் வேண்டும். அனுபவத்தோடறிவாலும் தூய பெரியரென நாம் கண்டுகொண்ட அடிகளின் ஆணை மீறுவது அறக்கொலையும் ஆக்க மழித்தலுமாகுமென்பதைத் தெளிதல் வேண்டும்.

# சாக்கரடீஸின் இறுதி காலம்.

ஸ்ரீமான் G. வாசுதேவன் அவர்கள், M. A. (Hons.)

எந்நாட்டிற்கும் முன்னோடாக உலக சரித்திர கால வரைக்குள் முற்பட்டதாகவும், செல்வத்திற் செல்வமாகிய எக்காலு மழியாச் செல்வத்தை உலகில் வாழ் மக்கள் யாவரும் கற்றுணர்ந்து தெளியும் வண்ணம் ஈந்தருளிய கலைஞானங் களைப் பெற்றெடுத்த நாடுகளில் பழமையானது கிரீஸ் தேசமாகும். ஐரோப்பா கண்டத்திலேயே ஆதியில் நாகரீகமடைந்த நாடுகள் ரோம் தேசமும், கிரீஸ் தேசமுந் தான். இவ்விரண்டிலும் முற்பட்டது கிரீஸ். சமஸ்கிருதம், தமிழ் எவ்

---

மேலும் ஒத்த படையுடைய வீரருள்ளே போர் ஒரோவழி நேரல் கூடும். அப்போதும் அவருள்ளும் அறத்துறை யிறந்த போர் வென்றவருக்கும் பீழையே தந்து முடியும். வலியற்ற பஞ்சை முட வருக்கோ போர் கொம்புத்தேனுகும். ஆகவே அறப்போரும் எஞ் ஞான்றும் தலைத் துணையாகாது. எப்போதும் அஃதறச் சார்பிலேயே வெற்றி விளைக்கும் நியதியுமில்லை. வலிமிகுந்த இராவணனும் இரணி யனும் வலிந்து போர் புரிந்து மாய்ந்தொழிந்தார். மறத்துறை வெறுத்து அறம் தலைநின்ற துருவனும் பிரகலாதனும் தேவரை வென்ற வீரர் வெந் திறத்தையுமழித்து மெய் வெற்றிகொண்டு நாட் டிற்கு விடுதலையும் வழங்கி இறவாத சரிதஞ் செய்துள்ளார். மெலி வுடைய நம்மவருக்கோ அறப்போரும் ஆகாத காரியம். அதையும் துறந்து, தலைசிறந்த அறந்துணையான எஞ்ஞான்றும் இன்று விலக்கிய சத்தியாக்கிரகப் போரையு மறந்து, தேச நேசப் பொய் வேடம் புனைந்து ஆண்மையற்ற பேடிகள் போல இடம் நோக்கி நம்மின் மெலிவுடையார் அயர்ந்தார்க்குத் தீங்கு செய்தும் இன்று இழைத்தும் ஒழுகுவது உண்மையில் தேச நாசம் தேடுவதாகும். தொண்டராய்த் தொழிலாற்றும் தவத் தூய்மைக்கு அறம் மறவா நெறிபடர் மனவலி மிக்குடையோரே அத்துறையி லிறங்கற்பாலார். அவ் வலியற்றோர் அயல் நின்று அத் தூமனத் தொண்டருக்கு ஆவன புரிந்துதவற் குரியார். 'வலியில் நிலைமையார்' தேசத் தொண்டரின் 'வல்லுருவம் தாங்கி' நெறிபிறழ்ந் தொழுகுவது, வலியற்றம் அற்றம் பார்த்துப் புலியின் தோல் போர்த்து மேய்ந்தற்று.

---



வாறு இந்தியாவின் புராதன பாஷைகளாக யிருக்கிறதோ, அதுபோல் ஐரோப்பாவிலும் கிரீஸ் தேசத்தில் வழங்கின கிரீக் பாஷையும், ரோம் தேசத்தில் வழங்கின லாத்தின் பாஷையும் மேல் நாட்டாரின் புராதன பாஷைகளாம். கிரீஸ் தேசம் சிறந்தோங்கி பெருமையுடன் விளங்கிய காலம் சற்றேறக்குறைய கி. மு. ஏழாம் நூற்றாண்டுக்கும் மூன்றாம் நூற்றாண்டுக்கு மிடையே என்றறிகிறோம். அந் நாட்டில் சகல கலா ஞானிகளுக்கெல்லாம் ஆதி பகவான் போன்றவரும், யாவ ரும் எக் காலத்தும் போற்றத்தக்க அறிவே உருவெடுத்தாற் போல கிரீஸ் தேசத்திற்கே ஓர் கலங்கரை விளக்கம்போல் தோன்றி அவதரித் தவரும், சிறந்த ஞானியான அரிஸ்டாட்டல் (Aristotle) என்போரின் குருவாகிய பிளேட்டோ (Plato) என்பவரை சிஷ்யராகக் கொண்டவர் சாக்ரடீஸ் (Socrates) ஆவர்.

சுயநலங் கருதாது பொது நன்மைக்காக உழைத்து உயிர் துறந்தவர் அநேகர். உண்மைக்கும் சத்தியத்திற்கும், பொதுஜன நன்மைக்கும், தேசீயத்திற்கும், கல்வியின் வளர்ச்சிக்கும், மதத்தைப் பரவச்செய்யும் பொருட்டும் தேச சுதந்திரத்திற்காகவும் ஐரோப்பிய நாடுகள் மட்டுமல்ல, உலகத்தில் எல்லாத் தேசங்களிலுமேயே வீரர்கள் தோன்றி உயிரையும் மாய்த்துக்கொண் டிருப்பதை நாம் சரித்திர வாயிலாகப் படித்துணரலாம். இத்தகைய வீரர்கள் கிரீஸ் தேசத்தில் அநேகரிருந்தனர். அவர்களில் கல்வியின் வளர்ச்சிக்காகவும், பொது ஜனங்களுக்கு கல்வியின் அவசியத்தை வற்புறுத்த ஓர் ஊக்கத்தை உண்டாக்க, அரசாங்கத்தாருடன் போராடிப், பாஷாணத்தை யருந்தி உயிர் துறந்தவர் சாக்கிரடீஸ்.

இப் பெரியாரின் காலமும் கி. மு. 469 லிருந்து 399-ம் வருடம் வரை. இவர் வாழ்ந்திருந்தது ஏதன்ஸ் (Athens) மாநகரம். ஐரோப்பாவிலே புராதன நகரங்களில் ஒன்றாக ஏதன்ஸ்மா நகரத்தைச் சொல்லலாம். பல்லாண்டுகளுக்கு முன்பு கீர்த்தியுடன் விளங்கிய தலை நகரங்கள் மெம்பிஸ் (Memphis), (Thebes) தீப்ஸ், பாபிலோன் (Babylon), ஏதன்ஸ் (Athens), ஸ்பார்ட்டா (Sparta), ரோம் (Rome), அலெக்ஸாண்டிரியா (Alexandria) முதலியவைகளாகும். இவைகளில் ரோமாபுரிக்கு முன் கீர்த்தியுடன் பொலிவுற்ற நகரம் ஏதன்ஸாகும்.

கிரீஸ் தேசத்தில் பற்பல கூட்டத்தார் அவரவர்களுக்கென்று தலை நகரங்களை ஏற்படுத்திக்கொண்டு அரசாட்சி செய்து வந்தனர். குடி ஆட்சி என்று சொல்லப்பட்ட பொது ஜனங்களுடைய அரசாங்க பரிபாலனத்திற் குட்பட்ட நகரங்களில் ஒன்று ஏதன்ஸ். இந்த நகரத்திற்கு முப்பது வயதிற்கு மேற்பட்டதும் ஜனங்களால் பொறுக்கி

யெடுக்கப்பட்டதுமான ஆறாயிரம் நியாயாதிபதிகள் நியாய விசாரணை ஸ்தலத்தை நடத்தி வந்தனர். இவர்களுக்கு முன்பாகத்தான், கிரீஸ் தேசத்து வாலிபர்களை யெல்லாம் மத விரோதிகளாகச் செய்து விட்டாரென்றும், கடவுள் இல்லையென்று சொன்னாரென்றும் குற்றம் சாட்டப்பட்டு சாக்கிரடீஸ் நீதிஸ்தலத்திற்குக் கொண்டுவரப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்.

ஆனால், சாக்கிரடீஸ் நீதிஸ்தலத்தில் விசாரணை நடந்த கி. மு. 399-ம் வருடம் 501 நபர்கள் நியாயாதிபதிகளாக ஆஜரா யிருந்தனர். ஒவ்வொரு நியாயாதிபதியின் கையிலும் இரண்டு பித்தளைப் பட்டைகள் கொடுக்கப்பட்டன. குற்றவாளி யென்றால் ஒரு பட்டையும், குற்றவாளி யென்றால் மற்றொன்றையும் கொடுக்குமாறு ஏற்பாடு செய்யப்பட்டது.

சாக்கிரடீஸினுடைய சரித்திரத்தில் இவ் விசாரணைதான் அவரை ஓர் உண்மை வீரன் என மற்றவரறியும்படி செய்தது. அவர் உயிர் தப்புவதற்குப் பற்பல வழிகளிருந்தன. சாக்கிரடீஸோ தப்புவதற்கு வேண்டிய ஒரு உபாயத்தையாவது கவனித்தவரல்ல. தன்னுள்ளத்தில் தோன்றியதை வெளிப்படுத்தித், தன்னைக் குற்றம் சாட்டும் எல்லோரையும் அன்புடன் நோக்கிப் பின் வருமாறு பதிலளித்தார்.

“நான் பரம்பொருளின் ஆணையாகச் சொல்வேன். நான் ஒரு தேச சஞ்சாரம் செய்பவன். நான் செல்லும் மார்க்கத்தில் என் வழியே தோன்றும் எனது மாணாக்கர்களைப் பற்பல கேள்விகள் கேட்டு அவர்கள் மூலமாகவேயே தக்க பதிலளிக்குமாறு செய்வேன். இவ்வாறு நான் தர்க்கம் செய்துகொண் டிருக்கும்பொழுது அவர்களுக்கு உண்மை புலப்பட்டுக் கடைசியில் ஒவ்வொருவனும் நான் சொல்லும் வார்த்தைகளுக் கிணங்குவான். இவ்வாறு பாடுபடும் எனக்கு, கடவுள் வறுமை நோயைப் பரிசாக அளித்திருக்கின்றார். எனக்கு ஏதன்ஸ் நகரத்தில் வசிக்கும் ஜனங்களிடம் பூர்ண வாஞ்சையுண்டு. என் காலத்தை வீணாக்காது, ஜனங்களிடையில் ஊக்கத்தையுண்டாக்குவதற்கு முயற்சித்ததுதான் நான் செய்த குற்றம். இது அரசாங்கத்திற்கு விரோதமாக இருக்கலாம். ஆனால் எனக்குக் கடவுளாலிடப்பட்ட ஆணையை மீறி நடக்கமாட்டேன். என்னைக் குற்றம் காட்டும் நண்பர்களில் எவன் கடவுளிடம் மேலான நம்பிக்கை யுண்டென்று சொல்லுகிறானோ அவனைவிடப் பதின் மடங்கான நம்பிக்கை எனக்குண்டு. ஆகையால் எது உங்களுக்கு உசிதமாகவும் நியாயமாகவும் படுகிறதோ அதனை நிச்சயித்து நான் குற்றவாளி யென்றும் குற்றவாளியல்ல வென்றும் தீர்மானிக்கும்படி மிகுந்த வணக்கத்துடன் மன்றாடிக் கேட்டுக்கொள்ளுகிறேன்.”

இதுதான் கடைசியாக சாக்கிரடீஸ் பகன்ற மொழிகள். மேலும் சாக்கிரடீஸ் ஓர் உண்மை வீரர் என்று காட்டுவதற்கு மற்றும் சில ஆதாரங்களுண்டு. நியாயஸ்தலத்தில் 501 நபர்களில் 280 பேர் சாக்கிரடீஸ் குற்றவாளி யென்று தீர்மானித்தனர். இக் குற்றத்திற்கு ஏதன்ஸ்மா நகர வழக்கப்படி மரண தண்டனை விதிக்கப்பட்டது. உண்மையில் ஒரு குற்றத்திற்கும் உட்படாதவரான சாக்கிரடீஸ் பொறுமையுடன் தண்டனையைப் பெற்றுக்கொண்டார். முப்பது நாள் வரையில் அவரைச் சிறையில் வைத்திருந்தனர்.

சாக்கிரடீஸினுடைய உண்மைச் சிநேகிதர்கள் சிறைக்குள் சென்று அவர் தப்பித்துக்கொள்ள உபாயங்கள் கற்பித்தனர். சாக்கிரடீஸோ அவைகளுக்கெல்லாம் உடன்பட்டவரில்லை. 30-ம் நாள் அவருக்கென்று பாஷாணம் கொண்டு வரப்பட்டது. கிரீஸ் தேசத்திலேயே மிகுந்த கல்வியைப் பெற்றவரும், உண்மைக்கே இருப்பிடம் போன்றவரும், நியாயத்திற்குக் கட்டுப்பட்டவரும், தர்க்க சாஸ்திரத்தில் உலகத்திலேயே இவருக்கிணை எவருமிலர் என்று சொல்லக்கூடிய திறமை வாய்ந்தவருமாகிய உண்மை வீரரான சாக்கிரடீஸ், அவர் சரித்திரத்தைப் படிப்பவர் யாவரும் என்றும் அவரைப் போற்றுமாறு தனக்கென்று எடுத்து வைத்திருந்த பாஷாணத்தை சந்தோஷத்துடனும், தன்னை விட்டுப் பிரியாத நண்பர்களுடன் கடைசி வரையிலும் வேடிக்கையாகச் சம்பாஷித்துக்கொண்டும், உயிர் போகும் வரையிலும் மிகுந்த அமைதியுடனும், எடுத்துப் பருகிய பின் உயிர் துறந்தனர்.

---

# இந்தியா, செல்வத்தை இழந்த விதம்.

ஸ்ரீமான் T. S. அவனாசிலிங்கம் அவர்கள், B. A., B. L.

## I

### ஈஸ்ட் இந்தியாக் கம்பெனி

ஆங்கிலேயர் இந்தியாவுக்கு வியாபாரிகளாக வந்தார்கள். இந்தியாவில் வியாபாரம் செய்வதற்காகப் பங்குகள் சேர்த்து, ஒரு கம்பெனி ஏற்படுத்தி, அந்தக் கம்பெனி இந்தியாவில் வந்து வியாபாரம் செய்துவந்தது. வியாபாரிகளுக்கும், பங்குக்

காரர்களுக்கும், லாபத்தில் ஆசை என்பதும், லாபம் சம்பாதிப்பதில் மற்றவர்களுடைய நன்மையைப்பற்றி அவர்கள் நினைக்கமாட்டார்களென்பதும் தெளிவாக விளக்கும். ஆங்கில வியாபாரிகளும் அங்ஙனமே யிருந்தனர். அவர்களுக்கு வேண்டியது லாபமும், அதிகப் பணமும்தான். இதனால் தாங்கள் வியாபாரம் செய்யும் தேசமும் ஜனங்களும் எக்கேடு கெட்டுப்போனாலும் அவர்களுக்குக் கவலையில்லை. வருஷத்துக்கு வருஷம் ஏறிய வட்டியும் லாபமும் வந்துகொண் டிருந்தவரை, பங்குக்காரர்களுக்குச் சந்தோஷம். அப் பணம் மற்றவர்களைக் கொள்ளையடித்து வாங்கப்பட்டாலும் அதைப்பற்றி அவர்கள் நினைப்பதில்லை. ஆங்கிலேயர்கள் எவ்விதம் வியாபாரம் செய்துவந்தார்கள் என்று நாம் இங்கு மறுபடியும் சொல்லவேண்டிய அவசியமில்லை. அவர்கள் என்னென்ன கொடுமைகள் செய்து, நம் தேசத்துக் கைத்தொழில்காரரைப் பலவிதமாக வருத்தி, பலாத்காரமாக அவர்களுடைய சாமான்களைப் பெற்று தேசத்தின் கைத்தொழில்களை நாசம் செய்து, பெருவாரியான லாபங்களை யடைந்தார்கள் என்பதைப்பற்றி பல சமயங்களில் படித்தும் கேட்டும் இருக்கிறோம்.

## சம்பாதித்த விதம்

1757-ம் ஸால் ஆங்கிலேயர் பிளாசி யுத்தத்தில் வங்காள நவாபைத் தோற்கடித்தனர். அதிலிருந்து அவர்கள் மதிப்பு அதிகமாயிற்று. வெள்ளைக்காரர்கள் அதிக மரியாதையுடன் நடத்தப்பட்டார்கள். ஆங்கிலேய வியாபாரக் கம்பெனியாரின் எல்லா வேலைக்காரருக்கும் இந்த மரியாதை அளிக்கப்பட்டது. இங்ஙனம் கொடுத்த மரியாதை அவர்கள் தலையைத் திருப்பியது. கம்பெனியாரின் தாழ்ந்த வேலைக்காரர் கூட இதை உணர்ந்தனர். கம்பெனியாரின் வேலைகளைச் செய்வதைத தவிர ஒவ்வொரு வேலைக்காரனும் தனக்குச் சொந்தத்துக்கு வியாபாரம் செய்யத் தலைப்பட்டான். வரி கொடுக்காமல் தங்கள் சரக்குகளை உள் நாட்டுக்குக் கொண்டுபோக அனுமதி, நவாப்புக்கு மொத்தமாகக் காணிக்கை கொடுத்து, கம்பெனியார் பெற்றிருந்தனர். இப்படிக் கம்பெனியார் தங்கள் சரக்குகளை உள் நாட்டுக்கு வரி கொடுக்காமல் கொண்டுபோகப் பெற்றிருந்த சுதந்திரத்தை, கம்பெனியின் வியாபாரிகளும், சட்டத்துக்கும் நியாயத்துக்கும் விரோதமாகத் தாங்கள் அடைந்து, வரி கொடுக்காமல் வியாபாரம் செய்து வந்தார்கள். அவர்கள் தங்கள் நாட்டிலிருந்து கொண்டுவந்த பொருள்களை நம் தேசத்து ஜனங்களை வாங்கும்படி கட்டாயப்படுத்தி அதற்காக ஒன்றுக்கு இர்ண்டு விலை வாங்கினார்கள், நம் நாட்டில் செய்யப்பட்ட அவர்களுக்கு வேண்டிய சாமான்களை நம் கைத்தொழில்காரரிடம்



இருந்து பலாத்காரமாய்ப் பெற்று அதற்கு ஒன்றுக்குப் பாதி விலைதான் கொடுத்தார்கள். இவ்விதமாய் கம்பெனியும், கம்பெனியின் வேலைக்காரர் ஒவ்வொருவரும் ஏராளமான திரவியங்களைச் சம்பாதித்துத் தங்கள் ஊர்களுக்குக் கொண்டுபோனார்கள்.

இதைத் தவிர சென்னை உத்தியோகஸ்தர்கள், தாங்கள் உதவி செய்த நவாப்புகளிடமிருந்து ஏராளமான பரிசுகளும் பெற்று, அவைகளைத் தம் நாட்டுக்குக் கொண்டுபோனார்கள். ஒவ்வொரு புது நவாப்புக்கு உதவி செய்த சமயமெல்லாம், அந்த நவாபிடத்திலிருந்து ஏராளமான திரவியம் அடைந்தார்கள். பிளாசி சண்டைக்குப் பிறகு மீர்ஜாப்பரை நவாப் ஆக்கிய பொழுது, ஆங்கில உத்தியோகஸ்தர்கள் 12,38,575 பவுன்கள் பரிசாகப் பெற்றனர். 1760-ம் வருஷத்தில் மீர்காசீம் நவாப் ஆனபோது, ஆங்கில உத்தியோகஸ்தர்கள் 2,00,269 பவுன்கள் பரிசாகப் பெற்றனர். மீர் ஜாப்பர் இரண்டாவது தடவை 1763-ம் ஸால் நவாப் ஆனபோது 5,00,165 பவுன்கள் பெற்றனர். 1765-ம் ஸால் (Najim-ud-daula) நஜீம உட்டௌலா நவாப் ஆனபோது 2,30,356 பெற்றனர். ஆக எட்டு வருடங்களில் 21.69,665 பவுன்கள் பெற்றனர். இதைத் தவிர இக் காலத்திலேயே வேறு காரணங்களுக்காக 37,70,883 பவுன்களும் பெற்றனர்.

## கம்பெனியார் வரி வசூலித்தல்

1865-ம் வருஷம்வரை ஆங்கிலேயர் ஓர் வியாபாரம் செய்யும் கம்பெனியாராகவே இருந்தார்கள். ஒவ்வொரு சமயங்களில் ஒரு அரசனுக்கு விரோதம், வேறு ஒரு அரசனுக்கு உதவி சிற்சில சமயங்களில் செய்து வந்தனர். ஆனால் 1865-ம் வருஷம் இராஜ்ஜியம் பெற்று, அதுமுதல் வரி வசூலிக்க ஆரம்பித்தனர். அச் சமயமிருந்த மொகலாய அரசருக்கு ஒரு கப்பம் கட்டுவதாக ஒப்புக்கொண்டு, 1865-ம் வருஷத்தில் வங்காளம், பீகார், ஒரிஸ்ஸா யாகாணங்களில் வரி வசூல் செய்யும் சுதந்திரத்தைப் பெற்றனர்.

ஒரு தேசத்தில் வரி வசூல் செய்வது எதற்காக வென்றால், அத் தேசத்து நலத்துக்கு வேண்டிய காரியங்களைச் செய்யவும், நீதி முறைகள் ஏற்படுத்தவும், தேச மக்களுக்குக் கல்விச் சாலைகள் ஏற்படுத்தவும், கிருஷியையும், இன்னும் மற்றத் தொழில்களையும் வளம்பெற வளர்க்கவும், இன்னும் இதுபோன்று நாட்டின் மக்கள் நன்மைக்காக உபயோகப்படுத்தவுமே. ஆனால், ஆங்கிலேயர் இதையெல்லாம் மறந்தனர். தாங்கள் லாபம் ஒன்றையே கருதியிருந்தபடியால், வசூல் செய்யப்பட்ட வரிகளில், செலவு போக

மீதியை இங்கிலாந்துக்குத் தங்கள் கம்பெனியின் பங்குக்காரர்களுக்கு லாபமாக அனுப்பப்பட்டது. இவ் வரிகள் இந்திய மக்கள் நன்மையைக் கருதி வசூல் செய்யப்பட்டவை என அவர்கள் கொஞ்சமேனும் நினைத்தார்களில்லை. இலாபமடைவதிலேயே கருத்தாய் இருந்த அவர்கள், இவ் வரிகளை யெல்லாம் தங்கள் வியாபாரத்தில் வந்த லாபத்தில் ஒரு பகுதியென நினைத்தனர்.

1765-ம் வருஷத்திலிருந்து 1771-ம் வரை இந்திய வரிகள், இங்கிலாந்துக்கு அனுப்பப்பட்டதின் கணக்கு கீழ்கண்ட கட்டத்தில் காணலாம்:

| வருஷம் | மொகலாய அரசர், நவாப் இவர்களுக்குக் கொடுத்தது வரி வசூல் செய்வதற்கான செலவு இவைகள் போக மீதி வரி | சிவில், சேனை மற்ற உத்தியோகஸ்தர்கள் முதலிய செலவுகள் | மிகுதித் தொகை இங்கிலாந்துக்கு அனுப்பப்பட்டது |
|---|---|---|---|
| | பவுன்கள் | பவுன்கள் | பவுன்கள் |
| 1765—1766 | 16,81,427 | 12,10,360 | 4,71,067 |
| 1766—1767 | 25,27,594 | 12,74,093 | 12,53,501 |
| 1767—1768 | 23,59,005 | 14,87,383 | 8,71,622 |
| 1768—1769 | 24,02,191 | 15,73,129 | 8,29,062 |
| 1769—1770 | 20,89,368 | 17,52,556 | 3,36,812 |
| 1770—1771 | 20,07,176 | 17,32,088 | 2,75,088 |

மேலே கண்ட கணக்கிலிருந்து ஒவ்வொரு வருடமும் வசூலாகும் வரிகளில் (செலவு போக) மூன்றில் ஒரு பாகம் இங்கிலாந்துக்கு அனுப்பப்பட்டதாகத் தெரிகிறது. ஆனால் உண்மையில் இதைவிட மிக அதிகமாகமே அனுப்பப்பட்டிருக்கிறது. கம்பெனியாரால் இந்தியாவில் ஏற்படுத்தப்பட்ட உத்தியோகஸ்தர்கள் பலரும் ஆங்கிலேயராய் இருந்தபடியால், அவர்களுக்குக் கொடுத்த சம்பளங்கள் முதலியன யாவும் இங்கிலாந்துக்கே அனுப்பப்பட்டன. மேலும் ஆங்கில உத்தியோகஸ்தர்களுக்கு அவர்கள் அக்கிரமமான வியாபாரத்தின் லாபம் முழுமையும் இங்கிலாந்துக்கே அனுப்பப்பட்டது. ஒவ்வொரு வருடமும் இந்தியாவிலிருந்து வெளியேறின செல்வத்துக்கும், வெளி நாடுகளிலிருந்து இந்தியாவுக்கு வந்த செல்வத்துககும் கணக்கிருக்கின்றது. நம் நாட்டுக்கு வந்ததைவிட, நம் நாட்டைவிட்டு வெளியேறியது எவ்வளவென்ற கணக்கைப் பார்த்தால், எவ்வளவு செல்வம் இந்தியாவிலிருந்து இங்கிலாந்துக்கு அனுப்பப்பட்டிருக்கிறதெனத் தெரியவரும்; 1766, 1767, 1768 ஆகிய மூன்று வருஷங்களில் 6,24,375 பவுன்



கள் இறக்குமதியா யிருக்கின்றன. 63,11,250 பவுன்கள் ஏற்றுமதியா யிருக்கின்றன. நமது நாட்டிற்குள் வந்ததுபோல் சுமார் பத்துப் பங்கு திரவியம் நம் நாட்டைவிட்டு, முக்கியமாய் இங்கிலாந்துக்குப் போயிருக்கிறது.

## முகமதிய ஆட்சிக்கும் ஆங்கில ஆட்சிக்கும் வித்தியாசம்

இதற்கு முன் ஆண்டுவந்த இந்து முகம்மதிய அரசாட்சிகளுக்கும், ஆங்கில அரசாட்சிக்கும் இதுவே பெரிய வித்தியாசம். முகம்மதிய அரசர்கள் எவ்வளவு கொடுமையாக மற்ற விஷயங்களில் இருந்திருப்பதாகச் சொல்லப்படினும், அவர்கள் வசூலித்த வரிகளும், சேகரித்த செல்வமும் இந்தியாவிலேயே இருந்தன இந்தியாவிலிருந்து மற்ற நாடுகளுக்கு அவை எப்பொழுதும் அனுப்பப்படவில்லை. அவை யாவும் இந்தியாவிலேயே நம் மக்களுக்கு உபயோகமாகுமாறு செலவழிக்கப்பட்டன. நேராக மக்கள் உபயோகத்துக்கென செலவழியாதிருப்பினும், அச் செல்வம் முழுதும் பல்வேறு வழிகளில் நம் நாட்டு ஜனங்களுக்கே திரும்பியும் வந்து சேர்ந்தது. இந்து முகம்மதிய அரசர்களின் கீழ் இருந்த பெரிய உத்தியோகஸ்தர்கள் யாவும் இந்தியர்களாகவே யிருந்தனர். அரசனுக்கும் உத்தியோகஸ்தர்களுக்கும் இந்தியாவே சொந்த நாடாக இருந்தது. ஆதலால் நாட்டின் நன்மையே அவர்களுடைய நன்மையா யிருந்தது. உத்தியோகஸ்தர்கள் திரட்டிய பொருட்களும் அவர்கள் சம்பாதித்த செல்வமும் இந்தியாவிலேயே இருந்தன. அவை வெளி நாட்டுக்கு அனுப்பப்படவில்லை. ஆதலால் நாட்டின் தனம் அவர்கள் அரசாட்சிகளின் கீழ் குறையவேயில்லை. அவர்கள் செல்வம் கைத்தொழில்களை விருத்தி செய்வதற்கு ஏதுவாயிருந்தன. கைத்தொழில்கள் விருத்தி அடைந்திருந்ததால் நாட்டின் செல்வம் அதிகரித்துக்கொண்டே வந்தது. ஆனால் ஆங்கிலேயர் காலத்தில் இவை யாவும் மாறியது. ஆங்கிலேயருக்குச் சொந்த நாடு இங்கிலாந்தாய் இருந்தது. ஆதலால் அவர்கள் தங்கள் சொந்த நாடாகிய இங்கிலாந்தின் நன்மையையே நாடி வந்தனர். அவர்களுக்கு இந்தியா பணம் சம்பாதிப்பதற்கு ஒரு நல்ல இடமாய்த் தோன்றியதே ஒழிய, அவர்கள் இந்திய மக்களின் நன்மையைக் கோரவில்லை. அவர்கள் பெற்றோர்களும், மக்களும், அவர்கள் பிறந்த இடமும், சுற்றமும், உறவும், யாவரும் இங்கிலாந்தில் இருந்தால், எவ்வளவு குறுகிய காலத்தில் எவ்வளவு அதிக பொருள் சேகரித்துக்கொண்டு தம் நாடு திரும்புவோம் என்ற நினைவையே அவர்கள் கொண்டிருந்தனர். வியாபாரத்தினால்

வந்த லாபங்கள் அனைத்தும் இங்கிலாந்துக்கு அனுப்பப்பட்டன. ஆங்கில அரசாட்சியின் கீழ் பெரிய உத்தியோகஸ்தர்கள் யாவரும் ஆங்கிலேயராகவே இருந்தனர். அவர்களுக்கு இந்திய வரிகளிலிருந்து கொடுக்கப்பட்ட சம்பளங்கள் முழுதும் இங்கிலாந்துக்கு அனுப்பப்பட்டன. இதுவரையில் இந்தியாவிலிருந்து வெளி நாடுகளுக்கு இவ்வளவு செல்வம் சென்றதில்லை. இவைகளைத் தவிர, இந்தியாவில் செய்யப்பட்ட வரிகளில் இங்கு உத்தியோகஸ்தர்களுக்குக் கொடுக்கப்பட்ட சம்பளங்கள் போக மீதமான வரிகளும் நாட்டு மக்களின் நன்மையை உத்தேசித்து செலவு செய்யப்படாமல் இங்கிலாந்துக்கே அனுப்பப்பட்டன. 1765-ம் வருஷத்திலிருந்து 1771-ம் வருஷம்வரை ஒவ்வொரு வருடமும் இந்தியாவின் வரியிலிருந்து இங்கிலாந்துக்கு அனுப்பப்பட்ட தொகைகளை முன் காட்டினோம். 1771-ம்வரு முதல் 1779-ம்வருவரை இந்திய வரியிலிருந்து எவ்வளவு தொகை இங்கிலாந்துக்கு அனுப்பப்பட்டிருக்கிறதெனக் கீழிருக்கும் கணக்கிலிருந்து தெரியவரும்:

| வருஷம் | மொத்த வரவு | மொத்த செலவு | நாட்டுக்கு வெளியில் அனுப்பப்பட்டது |
|---|---|---|---|
| | பவுன்கள் | பவுன்கள் | பவுன்கள் |
| 1771—1772 | 32,59,564 | 28,84,192 | 3,75,372 |
| 1772—1773 | 28,66,968 | 25,27,141 | 10,39,827 |
| 1773—1774 | 31,60,186 | 27,27,975 | 4,32,211 |
| 1774—1775 | 35,64,915 | 33,00,124 | 2,64,791 |
| 1775—1776 | 41,98,017 | 34,38,480 | 7,59,537 |
| 1776—1777 | 39,71,440 | 34,24,401 | 5,47,039 |
| 1777—1778 | 36,88,088 | 33,53,029 | 3,35,059 |
| 1778—1779 | 37,82,690 | 49,72,590 | 11,89,900 + |

\+ வரவைவிடச் செலவு அதிகமாயிருக்கிறது.

கடைசி வருஷத்து (1778-79)தில் மாத்திரம் வரவுக்கு மீறி செலவு செய்யப்பட்டிருக்கிறது. மற்ற வருடங்களில் வரவை விட செலவு குறைந்திருக்கிறது. இங்ஙனம் மீதியான தொகை இங்கிலாந்துக்கு அனுப்பப்பட்டது. இத்தொகைகள் பணமாய் இங்கிலாந்துக்கு அனுப்பப்படவில்லை. இத் தொகைகளைக் கொண்டு இந்தியாவில் செய்யப்படும் சாமான்களை வாங்கி, அச்சாமான்கள் இங்கிலாந்துக்கு அனுப்பப்பட்டன. இதைப்பற்றி காமன்ஸ் சபையில் ஒரு கமிட்டி, 1893வருல், (In the nineth Report of 1793 Page 48 of Dutt's Economic Histry of India). கீழ் கண்டபடி



சொல்லியிருக்கிறார்கள் "சென்ற பல வருடங்களாக, பெங்காள தேசத்து வரிகளில் ஒருபகுதி, இங்கிலாந்துக்குச் சாமான்கள் வாங்கி அனுப்புவதற்காக, ஒதுக்கி வைக்கப்பட்டு வருகிறது. வரியிலிருந்து அதிகமான தொகைகளுக்கு சாமான்கள் வாங்கி அனுப்புகிற உத்தியோகஸ்தனே கெட்டிக்காரனாக நினைக்கப்பட்டான். இது இந்தியாவின் செழிப்புக்கும் செல்வத்துக்கும் ஓர் அளவாகக் கருதப்பட்டது. ஆனால் உண்மையில் இதுவே இந்தியா தரித்திரம் அடைந்ததற்குக் காரணம்." * *

1770-ம் வருஷத்தில் வங்காளம் மிகக் கோரமான பஞ்சத்தில் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த போதிலும், பலவிதமான கொடுமையான சூழ்ச்சிகள் செய்து இங்கிலாந்துக்கு அதிகமான சாமான்கள் வங்காள வரிகளைக்கொண்டு வாங்கப்பட்டன. வங்காள வரிகளைக் கொண்டும், தாங்களே உண்டாக்கும் சரக்குகளின் (Produce of monopolies) விற்பனைகளைக் கொண்டும், வங்காளத்தில் வாங்கின சரக்குகள், எப்பொழுதும் 1,000,000, பவுன்களுக்குக் குறையாது, சாதாரணமாக 1,200,000 பவுன்களுக்குப் பக்கமாக இருக்கும். யாதொரு பிரதிப் பிரயோஜனமும் இல்லாமல் இங்கிலாந்துக்கு அனுப்பப்படும் தொகை குறைந்தது இந்தப் பத்து லக்ஷம் பவுன்களாகும். இதைத் தவிர வருஷம் 1,000,000 பவுன்கள் வங்காளத்திலிருந்து (ஆங்கிலேய) கம்பெனியின் வியாபாரத்துக்காக சீனா தேசத்துக்கு அனுப்பப்பட்டது. அந்தப் பணத்துக்கு வர வேண்டிய சரக்குகள் சீனாவிலிருந்து நேராக ஐரோப்பாவுக்குப் போயின. சிவில் உத்தியோகங்களிலும் அநேகமாய் இந்தியர்கள் இராததால் சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்கு செலவிடப்படும் தொகையில், இந்தியர்களுக்கு ஒன்றும் கிடைக்கவில்லை. மிகக் குறைந்த சில பேர்களைத்தவிர்த்து, சாதாரணமாக இந்தியர்கள் தாழ்ந்த வேலைக்காரர்களாகவும், ஆங்கிலேயர்களுக்கு குமாஸ்தாக்களாகவும் இருந்தார்கள். இவ்வாறு இந்தியாவில் செலவு செய்யப்பட்ட தொகையும், ஆங்கில உத்தியோகஸ்தர்களுக்குக் கொடுக்கப்பட்டு இங்கிலாந்துக்கே அனுப்பப்பட்டது.

(இன்னும் வரும்)

"பாரதி"

ஓர் தேசிய மாதப் பத்திரிகை.

| மாலை 3 | பிரஜோற்பத்தி புரட்டாசி-ஐப்பசி 1931-ஞு அக்டோபர்மீ | மணி 10 |
|---|---|---|

# மதுரை நாயக்கர்கள் காலத்துச் சேதுபதிகள்.

ஸ்ரீமான் **K. G.** கிருஷ்ணன் அவர்கள், B. Sc. (Hons.)

## நாயக்கர்கள் வரலாறு

கிருஷ்ண தேவராயர் 1509-ம்ஞு விஜய நகரத்திற்கு மகா ராஜாவாகச் சிம்மாசன மேறினார். விஜய நகரத்து ஆட்சியின் எல்லையில் தெற்கே கன்னியாகுமரிவரையுள்ள பாகங்கள் சேர்ந்திருந்தன. இந்த ராஜ்ஜியத்திற்குள் பாண்டிய, சோழ இராஜ்ஜியங்களும் உள்ளடங்கியிருந்தன. கிருஷ்ண தேவாருக்குப் போர் வீரராகவும், தலைமை அதிகாரியாகவும் அமர்ந்திருந்த நாகமா நாயக்கருக்கு வெகு காலத்திற்குப் பின் (காசி விஷ்வநாதர் தரிசனத்திற்கும் நடந்து சென்றதாகத் தெரிகிறது) ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அதற்கு விஷ்வநாதன் எனப் பெயரிடப்பட்டது. விஷ்வநாதான் 16 வயதடைந்ததும் கிருஷ்ண தேவராயருக்குத் தாம்பூலம் சுமப்பவனுக வேலைக்கு அமர்ந்தான். விஷ்வநாதன் அரண்மனை உத்தியோகங்களில் மேன் மேலும் உயர்ந்து கடைசியாக ஒரியா (Orissa) தேசத்து யுத்தத்திற்குக் கிருஷ்ண தேவராயருடன் சென்றிருந்தான். இந்த யுத்தத்தில் போர் செய்த வல்லமையைக் கண்டு ராயர் விஷ்வநாதனை இராய்ச்சூரைக் கைப்பற்ற அனுப்பிச் சித்திபெற்றார். இதனல் விஷ்வநாதன் தென் பாகத்தின் கலகங்களை அடக்கத்தகுந்த படையுடன் அனுப்பப்பட்டான்.



சோழ ராஜன் (வீரசேகரன்) பாண்டிய தேசத்திற்குப் படையெடுத்துவந்து பாண்டிய ராஜன் சந்திர சேகரனைத் தோற்கடித்து விட்டான். ஆகவே சந்திர சேகரன் கிருஷ்ணராயரிடம் முறையிட, ராயர் உடனே நாகமா நாயக்கரை யனுப்ப அவர் சோழ ராஜனை ஜெயித்து விரட்டிவிட்டார். தென்பாகத்துக் கலகங்களைக் குறித்துத் தகுந்த ஆளை மதுரையை ஆளவைக்க வேண்டுமென்று நினைத்து நாகமா நாயக்கர் ராயரின் கட்டளைப்படி பாண்டியனைச் சிம்மாசன மேற்றிவைக்கவில்லை. இதனல் ராயருக்குச் சினமுண்டாகி நாகமாவைத் தண்டித்துவர ஒருவரும் முன்வராமை கண்டு நாகமா நாயக்கர் குமாரன் விஷ்வநாதனை ஓர் படையுடன் அனுப்பிவைத்தார். விஷ்வநாதன் அரசர் கட்டளையைச் சிரமேற்றாங்கித் தன் தகப்பனை எதிர்த்துக் கைதியாக்கி அரசர் முன்னிலையில் கொண்டுவந்தான். உடனே அரசர், விஷ்வநாதன் கடமையைச் சற்றும் பின்வாங்காது செய்து முடித்ததற்குப் புகழ்ந்து நாகமா நாயக்கரை மன்னித்தார்.

தென் பாகத்தில் தகுந்த ஆட்சியின்றி கலகங்கள் விளைந்து கொண்டே வந்ததால் விஷ்வநாத நாயக்கரை பாண்டிய நாட்டிற் கதிபதியாகவும், தென் பாகத்திற் கதிகாரியாகவும் நியமித்து அனுப்பினார். அது சமயம் பாண்டியப் பாரம்பரையும் மறைந்து போய்விட்டது. விஷ்வநாத நாயக்கர் ஆளுகைக்குப் பூரண அதிகாரியாகி தன் பிரதானிகளாகிய அரியநாதன், கேசவப்ப நாயக்கர் முதலியவர்கள் உதவியைக் கொண்டு மதுரைக் கோட்டைகளையும், மீனாட்சி சுந்தரேஸ்வரர் தேவாலயங்களையும் கட்டி முடித்தார். விஷ்வநாத நாயக்கர் ஏராளமாய்ச் செலவு செய்து அநேக சீர்திருத்தங்கள் செய்தார். இவர் காலத்தில் மதுரை இராஜ்ஜியம் வடக்கே உறத்தூர், வாலிகோண்டபுரம், தெற்கே கன்னியாகுமரி, மேற்கே கோயமுத்தூர், ஈரோட், தாராபுரம், கிழக்கே இராமேஸ்புரம், கீழ்கடல் வரையும் பரவியிருந்தது. விஷ்வநாத நாயக்கர் 1529–64 வரை ஆண்டபின் அவர் குமாரர் கிருஷ்ணப்ப நாயக்கர் I. 1572 வரையிலும், அவருக்குப் பின் அவர் குமாரர் வீரப்ப நாயக்கர் 1595 வரையிலும், அவர் குமாரர் கிருஷ்ணப்ப நாயக்கர் II. 1601 வரை ஆண்ட பிறகு இவருடைய தமையனார் கஸ்தூரிரங்கர் சிம்மாசனமேறிய ஒரு வாரத்திற்குள் கொலையுண்டார். பிறகு கிருஷ்ணப்ப நாயக்கரின் மற்றொரு தமையனார் விஷ்வப்ப நாயக்கர் குமாரர் முத்துகிருஷ்ணப்ப நாயக்கர் ஆட்சிக்கு வந்தார்.

## மறவர் நாட்டு ஸ்தாபனம்

இராமநாதபுர நகரும், அதைச் சுற்றியுள்ள பாகங்களும் மறவர் நாடாயிருந்தது. பாண்டியர்கள் சேதுபதிகளை ஏற்படுத்தி மறவர் நாட்டை ஆண்டு வந்திருக்கலாமெனக் கருதப்படுகிறது. நாயக்கர்களின்

தலைமையான விஷ்வநாதர் முன்னேற்பாடுகளைக் களைந்து புதிதாக இரண்டு காரியக்காரர்களை நியமித்து அவர்களால் மறவர் நாட்டை மேல்பார்த்து வந்தார். இதனால் நாடு சீர்பெறாமல் களவு, கொலை முதலிய கொடிய செய்கைகள் அதிகமாயின.

நாயக்கர்கள் கீழ் கடற் பாகங்களை மேல்பார்க்காமல் விட்டதால் போர்த்துக்கீயர் வந்து குடியேறி முத்து எடுப்பதிலும், மீன் பிடிப்பதிலும் வேலை பார்த்து வந்தனர். போர்த்துக்கீயர் நாயக்கர் உத்தரவின்றிக் குடியேறிக் கொண்டதால், அவர்களை உள்ளேறவிடாமல் தடுப்பதவசியமா யிருந்தது. தவிரவும் புண்ணிய ஸ்தலமாகிய இராமேஸ்வரத்திற்குப் போகும் கோடான கோடி ஜனங்களை மறவர் நாட்டில் கொள்ளையடித்துத் தயங்கவிடுவது வழக்கமா யிருந்தது. இக் காரணங்களை முன்னிட்டு முத்துக்கிருஷ்ண நாயக்கர் பழைய சேதுபதிகளை மறுபடியும் உண்டாக்கி, மறவர் நாட்டை அடக்கியாள நினைவுகொண்டார். அச் சமயம் கொலை களவில் அழுந்திக்கிடந்த நாட்டைப் புதிய நாடாக்கத் தகுந்த ஆள் வேண்டியதா யிருந்தது. அத் தருணத்தில் சடைக்கத் தேவர் 1 தகுந்தவராய் காணப்பட்டார். ஆகவே முத்துகிருஷ்ண நாயக்கர் சடைக்கத் தேவரை உடையன் சேதுபதியாக ஏற்படுத்தி வருஷா வருஷம் கப்பங்கட்டி. ஆண்டு வரும்படி செய்தார். உடையன் சேதுபதி இராமநாதபுரத்தை ஆண்டு வரும்போது இராமேஸ்வரம் ஏகும் பிரயாணிகளின் பாதுகாப்புக்காக இராமநாதபுரம், போகலூர் முதலிய விடங்களில் இராணுவங்களை வைத்திருந்தார். காளையார்கோவில், பட்டமங்கலம் முதலிய விடங்களை அடக்கி மேல்பார்க்கத்தகுந்த ஆட்களை நியமித்தார்.

உடையன் சேதுபதி அநேக சிறந்த சீர்திருத்தங்களைச் செய்து ஜனங்களுக்கு முன்னேற்றத்தையும், சமாதானத்தையும் உண்டு பண்ணினார். காடுகளைக் களைந்து நல்ல விவசாயங்களை விருத்தி செய்தார். இவர் இராமேஸ்வர ஆலயத்திற்கு 1607-ம் வருடத்தில் ஐந்து கிராமங்களும், 1608-ல் ஆலயத் தொண்டர்களுக்கு எட்டுக் கிராமங்களையும் தருமமாக ஒதுக்கி வைத்தார். உடையன் சேதுபதி 1623-ம் ௵ வரை நல்ல தரும பரிபாலனஞ் செய்து மறைந்தபின், அவர் குமாரர் குட்டன் சேதுபதி ஆட்சிக்கு வந்து 1635-ம் ௵ வரை ஆண்டு காலமடைந்தார்.

## சடைக்கத் தேவர் II

குட்டன் சேதுபதி மாண்ட பின் அவர் குமாரர் சடைக்கத் தேவர் II ஆளுகையைக் கைக்கொண்டார். அப்பொழுது மதுரையை நாயக்கர்களில் ஏழாவதாகிய திருமலை நாயக்கர் ஆண்டு வந்தார்.



சடைக்கத் தேவரின் ஆட்சியின் இரண்டாம் ஆண்டில் குட்டன் சேதுபதியின் வைப்பாட்டிப் பிள்ளை “தம்பி” என்பவர் சேதுபதி ஸ்தானத்திற்கு தனக்கே பூரண உரிமையுண்டென்று தர்க்கித்துத் திருமலை நாயக்கரிடம் முறையிட்டான். திருமலை நாயக்கர் “தம்பி”யை ஆதரித்துச் சடைக்கத் தேவரை நீக்க இராமப்பையா, இரங்கண்ணா நாயக்கர் இவர்களின் அதிகாரத்தின் கீழ் பெரும் படை யொன்றை யனுப்பினார் திருமலை நாயக்கர் “தப்பி”யை ஆதரித்தது சடைக்கத் தேவர் கப்பம் கட்டத் தவறியதே காரணமெனத் தெரிகிறது. நாயக்கர் போர்த்துக்கீயரின் உதவியைக் கொண்டார். சேதுபதி டச்சுக்காரர்களின் உதவியைப் பெற்றார். இவ்விதமாகவே இப் பாதக மேனாட்டார்கள் இரு பக்கமும் சேர்ந்துகொண்டு அடங்கிப் போகிற சண்டையை அதிகப்படுத்தி கையுயர்ந்த பக்கம் தாங்கள் செய்த உதவிக்கு வெகுமானமாக அநேக ஊர்களைக் கைப்பற்றி வந்தனர். இம் முறையையே கடைசிவரைக் கையாண்டு நம் மூட சுதேச மன்னர்களிடமிருந்து இந்தியாப் பூராவையும் கைப்பற்றிக் கொண்டனர். அந்தோ! அரபிக்காரனை ஏமாற்றிக் கூடாரத்தில் இடத்தைப் பெற்று அரபிக்காரனை வெளியேறச் செய்த ஒட்டகையைப் போல நம் இந்தியாவை ஏமாற்றிப் பறித்துப்போட்டனர்.

திருமலை நாயக்கரின் படை சேதுபதியின் படையை முறியடித்துப் பாம்பன்வரை துரத்திச் செல்லவே சேதுபதி இராமேஸ்வரத்தில் ஓடி மறைந்துகொண்டார். நாயக்கர் படை பாலம் கட்டித் தீவையடைந்து சேதுபதியைக் கைதி செய்து மதுரை யடைந்தனர். இப் போர் முடியுமுன் நாயக்கர் படைத் தலைவர் இராமப்பையா மரணமடைந்தார். “தப்பி” மறவர் நாட்டை ஆள முயன்றபோது குடிகள் இணங்கவில்லை. மேலும் சடைக்கத் தேவரின் உடன் பிறந்தார் மக்கள் இரகுநாதத் தேவர், நாராயணத் தேவர் இவர்கள் “தம்பி”யை எதிர்த்தனர். இதனால் மறவர் நாட்டில் கலகங்கள் அதிகரிக்கத் தொடங்கின. “தப்பி” மறுபடியும் நாயக்கர் உதவியை நாடினான். நாயக்கர் மறவர் நாட்டின் அபாய நிலைமையைக் கண்டு அதை அடக்கியாள “தம்பி” தகுந்தவனல்லவென்றறிந்து, சடைக்கத் தேவரைச் சிறையினின்றும் விடுத்து மறவர் நாட்டுக்குச் சேதுபதியாக்கினார். அதற்குப் பின் நாடு முன்போல அமைதியடைந்தது. ஆனால் சில வருடங்களுக்குப் பின் (1645) “தம்பி” சடைக்கத் தேவரைக் கொலை செய்துவிட்டான். உடனே திருமலை நாயக்கர் மறவர் நாட்டை மூன்று பாகமாக்கி, இரகுநாதத் தேவர், அவர் தம்பி தனக்கத் தேவர், ‘தம்பி” ஆகிய இம் மூவர்களிடம் ஒப்புவிக்க ஏற்பாடு செய்தார். ஆனால் பிந்திய இருவரும் சீக்கிரத்தில் இறந்துபோகவே இரகுநாதத் தேவர் தனிப்பட்ட சேதுபதியானார்.

## திருமலைச் சேதுபதி

இரகுநாதத் தேவர் காலத்தில் நாட்டின் கஷ்ட நஷ்டங்கள் வெகு விரைவில் நீங்கின. திருமலை நாயக்கருக்கு இவர் அநேக தடவை உதவி செய்திருக்கிறார். திருமலை நாயக்கரை எதிர்த்து வந்த மகமதியரையும் (?), எட்டியாபுரத்து அதிபதியையும் இரகுநாதத் தேவரின் உதவியினால் நாயக்கர் முறியடித்துத் துரத்திவிட்டார். இப் பேருதவிக்காக நாயக்கர் இரகுநாதத் தேவருக்கு மன்னார்கோவிலையும், முத்துச்சிப்பி வருமானத்தில் கொஞ்சமும் பிரதி உபகாரமாக அளித்தார். அதனோடு அநேக பட்டங்களையும், மதுரையில் நடைபெறுவதைப் போல நவராத்திரி உற்சவத்தைக் கொண்டாடவும் அனுமதியளித்தார். (இவ் வுரிமை வேறு யாருக்கும் இருந்ததில்லை) இரகுநாதர் இராமேஸ்வரத்தில் அநேக சீர்திருத்தங்களும் செய்தார். இதற்காக "இராமேஸ்வர அதிபதி" என்ற நாமமுமளிக்கப்பட்டார்.

காந்தீரவ நரசராஜா (மைசூர் மகாராஜா)வின் படை மதுரையை முற்றுகை போட்டது. மைசூர் சேனாதிபதி தான் கைதி செய்த ஆண், பெண் இருபாலாரையும் மூக்கை யறுத்து மைசூருக்கனுப்பினான். இத் தருணத்தில் நாயக்கர் படுத்த படுக்கையிலிருந்தமையால் தன் உண்மைச் சிநேகர் இரகுநாதச் சேதுபதிக்குச் சேதி விடுத்தார். உடனே இரகுநாதர் 25,000 மறவர்களைத் திரட்டி வந்து மதுரையிலிருந்த 35,000 படையுடன் மைசூர் இராணுவத்தை எதிர்த்துப் போராடி திண்டுக்கல்வரை துரத்தி வெற்றி பெற்றார். இதில் இருபுறத்திலும் சுமார் 24,000 பேர் மாண்டனர். இவ் வெற்றிக் கறிகுறியாய் திருமலை நாயக்கர், இரகுநாதச் சேதுபதிக்கு "திருமலைச் சேதுபதி" யென்ற பட்டத்தை யளித்ததோடு கப்பம் வாங்குவதையும் நிறுத்தி அநேக வெகுமானங்களையும் அளித்தார்.

பேர் பெற்ற மங்கம்மாள் கணவனும், ஒன்பதாவது நாயக்கருமாகிய சொக்கநாதர் மதுரையை 1659-ம் ௵லிருந்து ஆள ஏற்பட்டது. இவர் 16-வது வயதில் சிம்மாசனமேறினார். இவரின் உயிர் நீக்க அநேக சூழ்ச்சிகள் செய்யப்பட்டன. அவைகளுக்கெல்லாம் தப்பி, தன் விரோதிகளைக் களைந்து செங்கோல் செலுத்தினார். இவர் காலத்தில் அநேக யுத்தங்களேற்பட்டதோடு சுமார் 1662-ல் கொடிய பஞ்சமும் ஏற்பட்டு ஆயிரக் கணக்கான ஜனங்கள் மாண்டனர். ஆகாரமற்ற ஜனங்களுக்கு ஆகாரம் தருவதாகச்சொல்லி பாவி! வெள்ளையர்கள் (டச்சுக்காரர்கள்) அவர்களை அழைத்துக்கொண்டு கடலோரம் சென்றவுடன் படகுகளில் ஏற்றி அடிமைகளாக மற்ற பாகங்களில் கொண்டு சென்று விற்றனர்.



## நாயக்கர்-சேதுபதி யுத்தம்

1663-ல் பீஜப்பூர் மகமதிய அரசர் ஐதல்கான் என்ற சேனாதிபதியின் கீழ் ஒருபடையைத் திருச்சினாப்பள்ளிக்கனுப்பினான். ஐதல்கான் மதுரைக்கு வந்து ஜனங்களைக் கொன்றும், கிராமங்களை நெருப்புக் கிரையாக்கியும் வந்தான். சொக்கநாத நாயக்கர் ஒன்றுந் தோன்றாதவராகி ஐதல்கானுக்குப் பெருத்த திரவியங் கொடுத்து அனுப்பிவிட்டார். இச்சமயத்தில் திருமலைச்சேதுபதி யாதொரு உதவியும் புரியவில்லை. ஆகவே சொக்கநாதர் சேதுபதியின் கர்வத்தை யடக்க ஓர் பெரும் படையை மறவர் நாட்டுக்கனுப்பி திருப்பத்தூர், புதுக்கோட்டை, மானாமதுரை, காளையார்கோவில் முதலிய ஊர்களைக் கைப்பற்றினார். சேதுபதியின் படை அடர்ந்த காடுகளில் மறைந்து நின்று யுத்தம் புரிந்தது. இச்சமயத்தில் மதுரையிலோர் உற்சவத்தை நடத்த வேண்டியதா யிருந்ததால் சொக்கநாதர் தன் சேனாதிபதியை யுத்தத்தை நடத்தச்செய்து விட்டுத் திரும்பினார். அப்பொழுது சேதுபதியின் படைகள் கூடிய சீக்கிரம் திரண்டு வந்து நாயக்கர் படையை ஜெயித்து முறியடித்து விட்டது. இதை யறிந்த நாயக்கர் அளவற்ற விசனமுற்றுத் தான் கைப்பற்றிய ஊர்களை வைத்துக்கொண்டு மறவர் நாட்டோடு எதிர்க்காமலிருந்துவிட்டார். திருமலைச்சேதுபதி 1674-ல் விண்ணுலகை யடைந்தார்.

## "கிழவன்"சேதுபதி

திருமலைச்சேதுபதிக்குப் பின் அவர் உடன் பிறந்தான் மகன் இராஜ சூரியன் என்பவர் ஆட்சிக்கு வந்தார். அப்பொழுது தஞ்சாவூர் இராஜ குமாரன் செங்கமலதாஸ் சொக்கநாத நாயக்கரை எதிர்த்துப் போராடினான். இராஜசூரியன் செங்கமலதாஸுக்கு உதவி புரிந்ததைக் கண்ட நாயக்கரின் சேனாதிபதி வெங்கட கிருஷ்ணப்பன் இராஜசூரியனைக் கைதியாக்கிச் சிறையிலிட்டான். இராஜசூரியன் சிறையிலேயே கொல்லப்பட்டதாகக் கருதப்படுகிறது. நாயக்கர், மறவர் நாட்டுக்குத் தலைமை வகிக்கத் தகுந்த ஆளை மறவர்களே தேர்ந்தெடுக்கும்படி கட்டளை யிட்டார். அதிக காலம் தர்க்கம் நடந்து கடைசியாகத் திருமலைச்சேதுபதியின் கூத்தியாள் மகன் இரகுநாதத் தேவரைச் சேதுபதியாகத் தேர்ந்தெடுத்தனர். இரகுநாதத்தேவர் அப்பொழுது வயதில் முதிர்ந்தவரா யிருந்ததால் அவரைக் "கிழவன்" சேதுபதி என்றழைத்தனர். இவர் வெகு ஊக்கமும், தைரியமுமுடையவர். இவர் தன் சார்பிலிருந்த இரு மனிதர்களைத் திடீரென்று கொன்றுவிட்டார். ஏனெனில் இவர்

களின் அதிகாரம் அதிகமாயிருந்ததால் தனக்குத் திடீரென்று ஆபத்து நேரிட்டாலும் நேரிடலாமென நினைத்தார். சேதுபதியின் ஆட்சியின் கீழ் புதுக்கோட்டையை ஆண்டுவந்த பல்லவராயன் தொண்டமான் தஞ்சாவூர் மகா ராஜாவை நேசித்து அவருடைய ஆட்சிக்குக் கீழிருக்க ஆசை கொண்டதைச் சேதுபதி யறிந்து தொண்டமானைத் துரத்திவிட்டு அவருடைய விடத்தில் தன் மைத்துனர் இரகுநாதரை ஏற்படுத்தினர். இந்த இரகுநாதரே தற்காலப் புதுக்கோட்டை இராஜ்ஜியத்தை ஸ்தாபனஞ் செய்தவர்.

## “பர இராஜகேசரி”

சொக்கநாத நாயக்கர் அடிக்கடி யுத்தங்கள் நடத்தி வந்ததால் ஜனங்களின் கஷ்டம் அதிகரித்தது. இதைக்கண்ட குடிகள் சொக்கநாத நாயக்கர் மதி யிழந்து விட்டதாகக் கருதி அவரைச் சிம்மாசனத்திலிருந்து நீக்கிச் சிறையிலிட்டனர். அவர் ஸ்தானத்திற்கு அவருடைய இளைய சகோதரர் முத்துலிங்க நாயக்கரை (1678) ஏற்படுத்தினர். இவர் காலத்திலும கஷ்டங்கள் ஒழியவில்லை. வைகையில் வெள்ளம் வந்து அநேக வீடுகளும் உயிர்களும் சேதமாயின. இப் பரிதாபகரமான நிலைமையில் ரஷ்டன்கான் என்னும் மகமதியன் தன் படையுடன் முத்துலிங்கர் வெளியில் சென்றது பார்த்து, திருச்சினப்பள்ளிக்குள் நுழைந்து சிறையிலிருந்த சொக்கநாத நாயக்கரைக் கொணர்ந்து மறுபடியும் அவரை அரசராக நியமித்துத் தானும் அதிகாரம் செலுத்தி வந்தான். மைசூர் படையொன்றை எதிர்த்துச் சண்டை செய்ய முடியாததால் “கிழவன்” சேதுபதி, கோவிந்தப்பையா முதலியோர் சேர்ந்து ரஷ்டம்கானையும் அவன் ஆட்களையும் கொன்றுவிட்டனர். பிறகு சொக்கநாத நாயக்கரின் நிலைமை ஸ்திரமாயிற்று. இப் பேருதவிக்கு “கிழவன்” சேதுபதிக்கு “பர இராஜகேசரி” (அன்னிய அரசர்க்குச் சிங்கம்) என்ற பட்டமளிக்கப்பட்டதோடு குமாரப் பிள்ளையும் மறவர் நாட்டின் சீர்திருத்த வேலைக்காக அனுப்பப்பட்டான். சொக்கநாதர் (1682) இறந்தவுடன் அவர் குமாரர் இரங்ககிருஷ்ணப்ப நாயக்கர் III ஆட்சிக்கு வந்தார்.

## “கிழவன்” சேதுபதியின் சதியோசனை

1686-ல் “கிழவன்” சேதுபதி, முன்பு மதுரை நாயக்கரின் மந்திரியாயிருந்த வெங்கட கிருஷ்ணப்பாவோடு சேர்ந்து சதியாலோசனை செய்து, தஞ்சாவூர் மகாராஜாவான செங்கமலதாஸின் உதவியைப் பெற்று மதுரையை எதிர்த்துப் போராட ஆயத்தமானார். முன்பு சொக்கநாத நாயக்கர் “கிழவன்” சேதுபதிக்கு குமாரப் பிள்ளையை வேலைக்காக அளித்தாரென்று கூறினோம்.



அக் குமாரப பிள்ளை சேதுபதியின் அடாத யோசனையை அறிந்து சேதுபதியையும், வெங்கட கிருஷ்ணப்பனையும் கைதி செய்து மதுரைக்கனுப்ப முயன்றான். இதை யுணர்ந்த சேதுபதி குமாரப் பிள்ளையையும, அவர் குடும்பத்தையும் அடித்துக் கொன்றான். இதைக் கேட்ட இரங்ககிருஷ்ண நாயக்கர் மறவர் தலைவரை தண்டிக்கப் படையெடுத்துச் சென்றார். ஆனால் சேதுபதி தஞ்சாவூரிலிருந்து உதவியைப் பெற்று நாயக்கரின் படையை முறியடித்துத் துரத்திவிட்டார்.

இரங்கக்கிருஷ்ண நாயக்கருக்கு அவர் இறந்த பின் ஓர் ஆண் குழந்தை பிறந்தது. ஆதலால் இரங்கக்கிருஷ்ண நாயக்கரின் அன்னை மங்கம்மாள் 1689-ல் மதுரை ஆட்சியைக் கைக்கொண்டு அநேக யுத்தங்கள் புரிந்து பகைவரைத் தந்திரமாய் கைவசப்படுத்தியும், ஜெயித்தும் வந்தாள். மங்கம்மாள் தனக்குண்டான பல யுத்தங்களால் மறவர் நாட்டைச் சரியாக அடக்கியாள முடியாததால் “கிழவன்” சேதுபதி சுயேச்சையாக ஆண்டு, மதுரைக்கு இஷ்டமான கப்பங்கட்டி வந்தார். 1698-ல் “கிழவன்” சேதுபதி மதுரையைக் கைப்பற்றியதாகவும், கொஞ்ச நாளைக்குள் நரசப்பய்யா (மதுரைச் சேனாதிபதி) சேதுபதியை மதுரையை விட்டுத் துரத்திவிட்டதாகவும் மார்ட்டின் என்னும் கிறிஸ்து மதபோதகரின் கடிதத்தால் தெரிகிறது.

## மதுரையோடு யுத்தமும் சுய ஆட்சியும்

மங்கம்மாள் தஞ்சாவூரை எதிர்த்து யுத்தம் செய்த காலத்தில் “கிழவன்” சேதுபதி தஞ்சாவூரோடு ஒற்றுமையா யிருந்ததால் 1702-ல் மங்கம்மாள் சேதுபதியைத் தண்டிக்க நரசப்பையாவின் கீழொரு படையை அனுப்பினாள். இப்பொழுது நரசப்பய்யா தஞ்சாவூரின் உதவியைப் பெற்றுச் சேதுபதியை எதிர்த்ததில் தோல்வியுற்றதோடு தானும் உயிர்துறக்க நேரிட்டது. 1702-ல் “கிழவன்” சேதுபதி மதுரையின் சம்பந்தத்தை அறவேயொழித்துச் சுய அரசாய் ஆளத் தொடங்கினார். 1709-ல் இராமநாதபுரம் பஞ்சத்தால் பீடித்திருக்கும் போது தஞ்சாவூர் சேனை போர் புரியவர அதைச் சேதுபதி முறியடித்துத் துரத்தித் தஞ்சாவூரைச் சேர்ந்த அரந்தாங்கிக் கோட்டையைக் கைப்பற்றிக் கொண்டார்.

“கிழவன்” சேதுபதி 1710-ல் சுமார் தன் 80-வது வயதில் மரணமடைந்தார். முன் குறிப்பிட்ட மார்ட்டின் கடிதப்படி “கிழவன்” சேதுபதிக்குச் சுமார் 47 மனைவிகளிருந்ததாகவும் அவர்களெல்லாம் “கிழவன்” சேதுபதியோடு உடன்கட்டை யேறிவிட்ட

னர்களென்றும் காணப்படுகிறது.* இவருடைய அரசாட்சி 1674-லிருந்து 1710-வரை நடந்து வந்தது. இவர் நல்லறிவும், மனோ வல்லமையும் படைத்தவர். இவர் ஆட்சியில்தான் மறவர் நாடு சுதந்திரமடைந்தது. இவர் கிறிஸ்து மதபோதகர்கள் அநேகர்களைக் கொடுமையாகத் தண்டித்து வேத மத விருத்தியைத் தடுத்தார். இச் சேதுபதி தன் குடிகள் மீதும், தேசத்தின் மீதும் மிகவும் அன்பு கொண்டவர். தன் கடைசி நாட்களில் இவர் கொடிய பஞ்சத்தையும் பார்க்க நேரிட்டது. இவர் காலத்திலேயே ஓர் பெரும் புயலேற்பட்டு அளவற்ற சேதங்களேற்பட்டன. "கிழவன்" இறக்குமுன் தன் கூத்தியாள் மகனாகிய பவானி சங்கர தேவரை தனக்குப் பின் ஆளுகைக்கு வர நியமித்தார். ஆனால் குடிகள் சம்மதிக்காததால் "கிழவன்" தன் இளைய குமாரனாகிய விஜயரகுநாதத் தேவரை சிம்மாசன மேற்றுவிக்கச் சம்மதித்தார். மூத்த குமாரனான வடுகநாதத் தேவர் தன் இராஜியத்தை நல்லறிவு படைத்த தன் தம்பிக்கே கொடுத்து விட்டதாகத் தெரிகிறது.

## விஜயரகுநாத சேதுபதி

விஜயரகுநாத சேதுபதியைக் குடிகள் கொண்டாடினார்கள். பவானி சங்கரன் எப்பொழுதும் சேதுபதிக்கு இம்சை கொடுத்து வந்தான். சேதுபதி அரந்தாங்கிக் கோட்டையிலேயே வசித்து வந்தார். இவர் கடவுள் வழிபாட்டில் சிறந்தவர். இராமேஸ்வரத்திற்கு அடிக்கடி போய்வந்தார். அங்கே அநேக கோவில்களைக் கட்டி அவைகளுக்கு வேண்டிய நிதிகளையும் ஏற்படுத்தினார். இவர் கிறிஸ்துமத போதகர்களுக்கு இடம் கொடுத்து மதுரையில் (1711-ல்) பெரிய கிறிஸ்துவ ஆலயம் ஏற்பட்டது. ஆனால் கொஞ்ச காலத்திற்குள் அவர்களின் கொடிய செய்கைகளுக்காக அவர்களை வெறுத்தார். அன்றியும் அவர்கள் கோயில்களையும் அழித்தார். வெகு காலம் வருத்தி வந்த பஞ்சம் 1720-ல் நீங்கிற்று. மழை ஏராளமாய்ப் பெய்து தேசம் செழிப்படைந்தது. இச் சமயத்தில் பவானி சங்கரன் புதுக்கோட்டை, தஞ்சாவூர் மகா ராஜாக்களின் உதவியைக் கொண்டு அரந்தாங்கியை எதிர்த்தான். திடீரென்று சேதுபதி வியாதியஸ்தராகி இராமநாதபுரம் கொண்டு சென்றவுடன் (1720) இறந்தார்.

## பவானி சங்கரனின் கொடுமை

விஜயரகுநாத சேதுபதி இறக்குமுன் தாண்டத் தேவரை ("கிழவன்" சேதுபதி தகப்பன் வகையில் ஓர் பேரன்) அரசாட்

* மதுரை நாயக்கர்களின் மனைவிகளும் தங்கள் கணவர்கள் இறந்ததும் உடன்கட்டை யேறிவந்தனர்.



சிக்கு ஏற்படுத்தினார். ஆனால் பவானி சங்கரன் தன் மாமியாளின் உதவியாலும், சில குடிகளின் ஒத்தாசையாலும் மறவர் நாட்டுக்குச் சேதுபதியானான். உடனே தாண்டத் தேவர், மதுரை, புதுக்கோட்டை இராஜாக்களின் உதவிகளைப்பெற்று பவானி சங்கரனைத் துரத்திவிட்டார். பவானி பிறகு தஞ்சாவூரை யடைந்து தான் பாம்பாறுக்கு வடக்கேயுள்ள எல்லாப் பாகத்தையும் கொடுத்து விடுவதாகச் சொல்லித் தனக்கு உதவி செய்ய வேண்ட தஞ்சாவூர் மகாராஜா தன் சேனையை அனுப்பிப் புதுக்கோட்டையை ஜெயித்து அவன் இரு இராஜா குமாரர்களையும கைதி கொண்டார். ஆனால் சமாதானமேற்பட்டது. பிறகு தஞ்சாவூர் சேனை இராமநாதபுரக் கோட்டையைச் சுரங்கமெடுத்து உட்சென்று தாண்டத்தேவரைக் கொன்றவுடன் பவானி சங்கரன் மறுபடியும் சேதுபதியானான்.

பவானி சங்கரன் கொடுங்கோலரசு புரிந்தான். அநேகரின் கிராமங்களை அநியாயமாய்க் கைப்பற்றிக் கொண்டான். அவர்களில் இருவர் (ஒருவர் காத்தய்யா தேவர், தாண்ட தேவரின் தாய் மாமன்) தஞ்சாவூர் மகா ராஜாவிடம் சென்று முறையிட்டனர். இவர், பவானி சங்கரன் வாக்களித்தபடி ஊர்களைக் கொடுக்காததால் அவர்களின் முறைப்பாட்டிற் கிணங்கி பவானியை எதிர்த்து உரையூரினருகில் பெரிய யுத்தம் நடந்ததில் பவானியைக் கைதியாக்கிக்கொண்டு தஞ்சாவூர் வந்து சேர்ந்தார்.

## மறவர் நாட்டின் பிரிவினைகள்

1729-ல் தஞ்சாவூர் மகாராஜா தனக்கு வாக்களிக்கப்பட்ட ஊர்களைக் கைப்பற்றிக் கொண்டு மீதியான மறவர் நாட்டை ஐந்து பாகமாக்கி அவைகளில் மூன்று பாகத்தை காத்தய்யா தேவருக்குக் கொடுத்தார். காத்தய்யா தேவரின் குமாரன் முத்துவிஜயரகுநாத சேதுபதியாக சிம்மாசனமேறினார். மீதியான இரண்டு பாகங்கள் காத்தய்யா தேவரோடு வந்து முறையிட்ட மற்ற இருவருக்குங் கொடுக்கப்பட்டன. இவர்களிலொருவர் சிவகங்கை இராஜாவானார். இவ்வாறு மறவர் நாடு பிரிக்கப்பட்டுப் போகவே சேதுபதியின் செல்வாக்கும் குறைந்து முன்னிருந்த பெருமை யெல்லா மிழந்து சாதாரண அதிகாரியைப் போலொத்த நிலைமை ஏற்பட்டது. இவ்வித மறவர் நாட்டு உட்பிரிவினைகள் மதுரை விஜயரங்க சொக்கநாத நாயக்கர் காலத்திலேற்பட்டன. விஜயரங்க சொக்கநாத நாயக்கருக்குக் குழந்தை ஏற்படாததால் அவருக்குப் பின் அவர் மனைவி மீனாட்சி மதுரையை ஆண்டு வந்தாள். மீனாட்சியின் ஆட்சி சுமார் 4 வருஷ காலம் (1732–6) தான் ஏற்பட்டது. மீனாட்சியோடு மதுரை நாயக்கர்கள் ஆட்சி பூர்த்தியாகிவிட்டது.

# நம் நாட்டின் முப்பெரும் லக்ஷியங்கள்.

திரு. **P. V.** பத்மநாபன் அவர்கள், B. A., B. L.

(565-ம் பக்கத் தொடர்ச்சி.)

நம் நாட்டின் சமூக சீர்திருத்தத் துறையில் ஈடுபட்டு அரும் பாடுபட்டு வருகின்ற உண்மைத் தேசாபிமானிகளின் இரண்டாவது பெரிய லக்ஷியமாவது சமத்துவமே. சமத்துவம் என்னும் தத்துவத்தில் ஏற்றத் தாழ்வைக் கருதா சம தர்மமாகிய உயரிய கொள்கையே அடங்கி யிருக்கின்றது. எவ்விதத்திலும் முன்னேற்ற மெய்தி நவீன நாகரிகத்தில் தனி சிறந்து விளங்கும் நாடுகளில் சம தர்மக் கொள்கையே நிலவுகின்றது. சம தர்மத்தை யறவே ஒழிக்கும், பிறவி பேதத்தை அடிப்படையாகக் கொண்ட போலி ஏற்றத் தாழ்வுகளைக் கற்பித்து அதர்ம எண்ணங்களையே ஆதரிக்கும் நாட்டை 'எந் நலமும் கொல்லவென எடுத்த சுடுகாடே' என்று கூறுவது மிகையாகாது. மக்கட் பிறவின் பெருக்கத்தின் பொருட்டு ஆண் பெண் மக்களுக்குள் இறைவன் அமைத்துள்ள இயற்கைப் பாகுபாடு மட்டுமே அறிவிற்கும் ஒழுக்கத்திற்கும் உடன்பாடானது. ஏனைய பேதங்கள் அனைத்தும் சமூக முன்னேற்றத்திற்குத் தடையாய் நிற்கின்றன. ஆடவர்களுக்கும், மகளிர்களுக்கும் உள்ள பேதமும் அவர்களுக்குள் ஏற்றத் தாழ்வை விளைக்க ஏற்படவில்லை.

ஆதலால், சம தர்ம வாழ்க்கைக்கு இடையூறாய் இருக்கும் வழக்க ஒழுக்கங்கள் எத்தன்மையன? அவற்றிற்கு நம் நாட்டில் எத்துணை ஆதரவும் செல்வாக்கும் இருக்கின்றன? அவற்றால் இப்பொழுது எய்தியிருக்கும் சீர்கேடான நிலைமையிலிருந்து நம் நாடு மீள்வதற்கு நாம் கையாளவேண்டிய சிறந்த முறைகள் யாவை?

சமதர்ம வாழ்விற்கு முதல் எதிரி ஜாதி பேதம். ஜாதி பேதம் என்னும் கொடிய வழக்கம் நம் நாட்டில் தொன்றுதொட்டு வேரூன்றிக் கிடக்கின்றது. இதற்குத் தமிழ் நாட்டில் கிராமங்களில் சர்வ சாதாரணமாய் முளைத்துச் செழித்துப் படரும் சாகதாளி அல்லது சப்பாத்துக்கள்ளி என்னும் பேய்ப்பூண்டையே உபமானமாகக் கூறலாம். மழையின்றி சகல ஜீவராசிகளும், தாவரவர்க்கங்களும் வாடி வதங்கிக் கடுமையான நீர்க் கருப்பினால்



வருந்தும் அருங் கோடையிலும் கள்ளியாகிய பைசாசத் தாவரம் எவ்வித இடைஞ்சலுமின்றி 'வானுற வோங்கி வளம் பெற'ச் செழித்து வளரும். அதைப்போலவே, தமிழ் மக்கள் அமைதிக்கும், நாகரிகத்திற்கும் பயங்கரமான பற்பல உற்பாதங்கள் நிகழ்ந்த காலத்திலும், ஜாதிபேதம் என்னும் அலகை நிர்ப்பயமாய் இருமாப்புடன் தலைவிரித்தாடியது. உலகம் முழுவதும் சமரச உணர்ச்சியினாலும், சுதந்திர வேட்கையினாலும் தூண்டப்பெற்று ஜனநாயக தத்துவம் 'களிநடம்' புரியும் இந்த (கிறிஸ்து சகாப்தம்) இருபதாம் நூற்றாண்டில்கூட நம் அருமைத் தாய் நாட்டை, எண்ணிறந்த வீரர்களையும், அறிஞர்களையும், அரசர்களையும், புலவர்களையும், தத்துவ ஞானிகளையும் பெற்றெடுத்த நம் தவத் தமிழகமாகிய அன்னையை, ஜாதிபேதமென்னும் பெரும் பேய்பிடித்து ஆட்டுவது பரிதாபத்திலும் பரிதாபமன்றோ? "வள்ளுவர்செய் திருக்குறளை மருவற நன்குணர்ந்தோர்கள் உள்ளுவரோ மனுவாதி யொரு குலத்துக் கொருநீதி?" என்றார் ஆசிரியர் சுந்தரம் பிள்ளை. தமிழ்ப் புலமைக்கே நடு நாயகமாய் விளங்கும் திருவள்ளுவரும், அவர் அருளிய திருக்குறளை 'மருவற நன்குணர்ந்த' சுந்தரம் பிள்ளையும் புகழொடு தோன்றிப் புகழுற வாழ்ந்து புகழுடம் பெய்திய புண்ணிய பூமியாகிய நம் பாரத நாட்டிலா 'ஒரு குலத்துக்கு ஒரு நீதி' வழங்கப்பெறுவது? "பிறப் பொக்கும் எல்லாவுயிர்க்கும்; சிறப் பொவ்வா செய்தொழில் வேற்றுமையால்" என்னும் தெய்வத் திருக்குறளின் பொருள் என்ன? ஆறறிவினராகிய மக்கள் அனைவரும் பிறப்பினால் சம அந்தஸ்து வாய்ந்தவர்களே. ஒழுக்கத்தினால் மட்டுமே மனிதன் இனத்தாரிடமிருந்து பிரிந்து உயரக் கூடும். இதுவே தமிழ் மறையின் சீரிய கோட்பாடு.

ஒரு ஜன சமூகத்தில் ஒரு பகுதியினர் கல்வி கேள்விகளில் ஈடுபட்டுக் கல்விக் களஞ்சியங்களாகத் திகழவேண்டுமென்றும், வேறொரு பகுதியினர் போர்த் தொழிலில் தேர்ந்து பகைவர்களை வென்று சுத்த வீரர்களாய் விளங்கவேண்டுமென்றும், பிறிதொரு பகுதியினர் வாணிபத்திலும், வேளாண்மையிலும் சிறந்து, "திரை கட லோடியும் திரவியம் தேடி" இலக்குமி புத்திரர்களாய்ப் பொலியவேண்டுமென்றும், ஏனையோர் முதல் மூன்று வகுப்பினர்களுக்கும் குற்றேவல் புரிந்து அடிமை வாழ்வில் திளைக்கவேண்டுமென்றும் விதிகள் ஏற்படுமாயின் அந்த ஜன சமூகத்தின் எதிர்கால வாழ்வில் அமைதியும், இன்பமும் நிலவும் என எண்ணுவதற்கில்லை. ஒரு குடும்பத்தில் பிறந்த சகோதரர் நால்வருள் ஒருவனுக்குச் சாஸ்திர ஆராய்ச்சியிலும், இரண்டாமவனுக்குச் சிலம்பப் பயிற்சியிலும், மூன்றாமவனுக்குப் பொருள் ஈட்டுவதிலும், நான்காமவனுக்கு ஊழியம் புரிவதிலும் மனம் செல்லுமானால் அவர்களை

ஒரு ஜாதியினர் என்பதா? அல்லது வெவ்வேறு வகுப்பினர் என்பதா? அன்றி அவர்கள் புரிந்துவந்த தொழிலையே ஏற்குமாறு அவர்கள் நால்வரையும் கட்டாயப்படுத்துவதா? அவரவர்கள் அறிவிற்கும், விருப்பத்திற்கும், ஆற்றலுக்கும் தகுந்தபடியே அவர்களுக்குத் தொழிலும் அமையவேண்டும். இன்றேல், தொழிலும் தொழிலாளியும் ஒருசிறிதும் அபிவிருத்தி யெய்த முடியாது. ஆதலால், தொழில் அபிவிருத்தியைக் கருதி ஜாதி பேதம் ஏற்பட்டிருப்பின் தொழில் அபிவிருத்தியின் பொருட்டே அது இப்பொழுது அழிந்து படவேண்டும். மேலும், ஒரு தொழிலுக்கு வேண்டிய தொழிலாளிகளை ஒரு குலத்திலிருந்தே திரட்ட முடியாது. உதாரணமாக, இராணுவ இலாகா அதிகாரிகள் க்ஷத்திரிய குலத்திலிருந்தே படை வீரர்களைச் சேகரிக்க முயன்றால், நம் நாடு முழுவதும் தேடித் திரிந்தாலும் ஒரு சிறிய பட்டாளத்தைக்கூட அமைப்பது அரிது. பொதுஜன சேவைக்கு (Public service) சூத்திரர்களையே நியமிக்க விரும்பினால் அதுவும் அசாத்தியமே. அதைப்போலவே நிதி நிலையங்களில் (Banks) வைசியர்களையும், கல்லூரிகளில் ஒரு வகுப்பாரை பொறுப்பு வாய்ந்த பதவிகளில் அமைக்கக் கருதினால் அதுவும் முற்றிலும் அசம்பாவிதமன்றோ!

ஜாதி பேதத்தினால் விளையும் பொல்லாங்குகள் எண்ணிறந்தன. அவற்றுள் சமதர்ம வாழ்வைப் பாழாக்கி ஒரு குலத்துக்கு ஒரு நீதியை வழங்குவது ஒன்று. தொழில் அபிவிருத்திக்கு இடங்கொடாமல் தொழிலாளிகளின் முன்னேற்றத்திற்கு இடையூறாய் நிற்பது மற்றொன்று; மூன்றாவது, ஒரே நாட்டில் பிறந்து வளர்ந்து தம் தாய் நாட்டின் முன்னேற்றத்திற்காக ஒத்துழைத்துப் பொது நலத்தின் பொருட்டுத் தத்தம் உடல் பொருளாவிகளைத் தியாகம் செய்யவேண்டிய வீர புருஷர்கள் உள்ளத்தில் ஏற்றத்தாழ்வு என்னும் நச்சுப் பூண்டின் விதையை விதைத்துப் பயிராக்குவதே. 'ஒன்று சேர்ந்தால் வாழ்வோம்; பிளவு பட்டால் வீழ்வோம்' (United we stand; divided we fall) என்பது ஓர் ஆங்கிலப் பழமொழி. ஒற்றுமையின்றி ஓர் அற்ப காரியமும் நடைபெறாது. திருவொற்றியூர் தேர்நிலை பெயர வேண்டுமானால் பலர் ஒன்று சேர்ந்து அதைத் தமது முழுப் பலத்துடன் இழுக்கவேண்டுமல்லவா? தேரை இழுக்க விரும்பும் அன்பர்கள் தனித்தனியாய்ச் சென்று அதைப்பற்றி யீர்க்க முயன்றால் அது ஓர் அங்குல தூரமேனும் நகருமா? ஒரு குடித்தனம் இனிது நடைபெற வேண்டுமாயின் அக் குடும்பத்தின் தலைவனும் தலைவியுமாகிய தம்பதிகள் இருவரும் உளமொத்துக் குடும்ப பாரத்தைச் சேர்ந்து ஏற்க வேண்டும். அவ்வாறு ஸ்திரீ புருஷர்கள் ஒத்துழைப்பதனால்



இல் வாழ்க்கை என்னும் வான் சகடம் எளிதில் ஓடிவிடும். தலைவனும், தலைவியும் தமக்குள் மாறுபட்டு ஒருவரை யொருவர் அடக்கியாள முயல்வார்களாயின், அவர்கள் வதியும் வீடு பேய்கள் நடமாடும் இடுகாட்டினும் படுபாழே. ஒரு துரைத்தனம் சிறப்பாக நடந்தேற வேண்டுமானால், அரசும், அமைச்சரும், குடிகளும் ஒத்துழைக்க வேண்டியது அவசியம். குடிகளை வருத்தும் கொடுங்கோல் மன்னனும், அரசைக் கவர முயலும் அமைச்சனும், ஆட்சியைக் குலைத்துப் புரட்சியை விளைக்க விரும்பும் குடிகளும் துரைத்தனத்தை வகிக்கப் பாத்திரரல்ல. சமதர்ம வாழ்க்கையில் இன்புற வேண்டிய ஜன சமூகமும் தனக்குள் எவ்வித ஏற்றத் தாழ்வுகளுக்கும் இடம் கொடாமல் ஒற்றுமையையே ஆதரிக்க வேண்டும்.

பிறப்பினால் கற்பனை செய்யப்படும் பேதம், தொழிலைப் பொருத்ததாயின், நான்கு ஜாதியாரின் தொழில்களும் ஒன்றுக்கொன்று எவ்விதத்திலும் தாழ்ந்தனவல்ல. கற்றவர்க்குச் சென்றவிடமெல்லாஞ் சிறப்பாதலால், பார்ப்பனன் (கல்வியினால்) சிறப்பெய்துகின்றான்; அரசனைக் கடவுளின் பிரதிநிதியாய்ப் பாவிப்பதினால் க்ஷத்திரியன் (ஆளும் திறமையினால்) மேன்மை யுறுகின்றான்; பொருளிலார்க்கு இவ்வுலகத்தில் ஒன்றுமில்லை யாதலால் (செல்வத்தினால்) வைசியன் உயருகின்றான்; பிறருக் குழைப்பதே ஒழுக்கத்தில் உயர்ந்த மாந்தர் கடமை யாதலால் (தனக்கென வாழாப் பிறர்க்குரியாண்மையினால்) சூத்திரன் முதன்மை ஸ்தானத்தை வகிக்கின்றான். அறிவு, வீரம், செல்வம், உழைப்பு ஆகிய நான்கு குலங்களுக்கு உரிய விசேஷ அம்சங்களில் எது உயர்ந்தது? எது தாழ்ந்தது? எது நடுத்தரமானது? இவை நான்கும் சமமன்றோ? இவற்றைப் பெற மக்கட் பிறவியில் யாருக்குத்தான் உரிமையில்லை? ஆயினும், நம் நாட்டில் வேரூன்றி யிருக்கும் ஜாதி பேதம் என்னும் சுயநல வழக்கத்தின் வன்மையினால் நமது சகோதரர்களில் ஒரு பகுதியினரைத் தீண்டாதவர்கள் என நாம் விலக்கி வைத்திருக்கின்றோம். இவ்வாறு நம்மவர்களில் சிலரை எக் காரணமுமின்றி இழி பிறப்பினராக ஒதுக்கி வைத்திருப்பது நமது உயரிய சமயத்திற்கும், சிறந்த நாகரிகத்திற்கும், உன்னத இலக்ஷியங்களுக்கும் ஒரு பெரிய களங்கமல்லவா?

ஆதலால் தீண்டாமை, என்னும் பேய் வழக்கம் நமது சமூகத்தின் சமதர்ம ஒழுக்கத்தை யறவே ஒழிக்க ஏற்பட்டிருக்கின்றது. இது சுருதி யுக்தி யனுபவங்களுக்குத் தினையளவும் உடன்பாடானதல்ல. "வேண்டுதல் வேண்டாமை யிலான்" என வெகு அழகாய்க்

குறளாசிரியர் வருணித்திருக்கும் கருணாநிதி 'தீண்டுதல்,' 'தீண்டாமை'களை மட்டும் அங்கீகரிப்பாரா? நரமாம்ச பக்ஷணத்தைக் காட்டிலும், பன்மடங்கு கொடிதன்றோ தீண்டாமை? உருவத்திலும், அறிவிலும், நடையுடை பாவனைகளிலும் நம்மை முற்றிலும் ஒத்திருக்கும் சிலரைக் கொல்லாமல் கொன்று உண்ணாமல் உண்பதே தீண்டாமையாகும். தீண்டாதவர்கள் உழைப்பின் பயனே நாம் நாடோறும் உண்ணும் உணவும், உடுக்கும் உடையும். அவர்கள் படுவதெல்லாம் பாடு; அடைவதெல்லாம் கேடு. இவ்வாறு நம்மவர்களில் ஒரு பெரும் பகுதியினரை அடிமை வாழ்வில் அழுத்திவைத்திருத்தல் நம்மை அடியோடு அழித்துவிடும். தீண்டாமைக்குக் காரணம் தீண்டாதவர்களின் புறத்தூய்மை யின்மையென்று நம்மில் சிலர் வாதிக்கக்கூடும். அவர்களது புறத்தூய்மை யின்மைக்கு நமது அகத்தூய்மை யின்மையே முதற்காரணமாகும். மக்கள் தொகுதியில் பெரும்பாலோர் சிறுபாலாரைத் தீண்டத் தகாதவர்களென வகுத்து அவர்களை விலக்கிவிட்டால், அச் சிறு பாலார் சமூக வாழ்வில் உயருவது எங்ஙனம்? அது சமூகப் பிரஷ்டமன்றோ? ஜன சமூகத்தின் நலத்தின் பொருட்டு அருணோதயத்திற்கு முன் எழுந்து வயல்களுக்குச் சென்று பகல் முழுவதும் நெற்றி வியர்வை நிலத்தில் விழ மெய்வருந்த உழைத்து உலகை யூட்டும் உத்தமர்களுக்கு (தீண்டாதவர்கள்) நாம் இயற்றும் கைம்மாறு சமூகப் பிரஷ்டமா? "எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகற்கு" என்றார் தெய்வப்புலவர். நம்மில் சிலரைத் தீண்டாதவர்களாய் விலக்கி வைத்திருப்பதனால் தான் நம் நாடு இதர நாடுகளால் இப்பொழுது தீண்டாத நாடாய் விலக்கி வைக்கப்பெறும் நிலைமையில் இருக்கின்றது.

நம்முடன் பிறந்து நம்மோடு வளர்ந்து நமது சுக துக்கங்களைப் பகிர்ந்துகொள்ளும் பெண் மக்களை நாம் நம்மிலும் தாழ்ந்தவர்களாகக் கருதுவது சமதர்மக் கொள்கைக்கு முற்றிலும் விரோதமானது. "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்று போதிக்க வந்த புலவர், நமது பிரத்தியக்ஷ தெய்வங்களில் அன்னைக்கே முதன்மை ஸ்தானத்தை யளித்திருக்கின்றார். ஆதலால் பெண் மக்களைத் தெய்வப் பிறவியாகக் கருதுவதே அறிவுடைமை. ஆண் மக்களும், பெண் மக்களும் சேர்ந்திருந்தால் மட்டுமே சமூக வாழ்வு பரிமளிக்கும். பெண்களே இல்லாத ஆண் சமூகத்தில் கேவலம் மிருக வாழ்க்கையையே காணலாம். ஆண்களே இல்லாத பெண் சமூகத்தில் உயிர் படைத்த ஓவியங்களை இயங்குவதைப் பார்க்கலாம். அன்னையினிடமிருந்து ஆற்றலும், பிதாவினிடமிருந்து அறிவும் மக்களுக்கு அமைகின்றன. ஆற்றலின்றி அறிவும், அறிவின்றி ஆற்றலும் தனியே இயங்க இயலுமா?



"பாகத்திலொருவன் வைத்தான்; பங்கயத்திருந்த பொன்னை
ஆகத்திலொருவன் வைத்தான்; அந்தணனாவில் வைத்தான்"

எனத் தித்திக்கும் தேன் மொழிகளால் கவியரசர் (கம்பர்) நாம் வழிபடும் மும்மூர்த்திகளும் தத்தம் தேவியர்களுக்கு அளித்திருக்கும் சமத்துவத்தை வருணிக்கின்றார். ஆனால், நாம் நமது வாழ்க்கைத் துணைவிகளை எவ்விடத்தில் வைத்திருக்கின்றோம்? பகலில் சமையல் அறையிலும், இரவில் பள்ளியறையிலுமே. கோல்ட்ஸ்மித் என்னும் ஆங்கிலக் கவி "எமது வீரதீரச் செயல்களெல்லாம் அடுப்பண்டையிலும், எமது தேச யாத்திரைகளெல்லாம் நீல நிறப் படுக்கையிலிருந்து சாம்பல் நிறப் படுக்கைக்குமே" (All our adventures are by the fire-side and all our migrations from the blue bed to the brown) என்று தமது கற்பனைக் கதையொன்றில் எழுதியிருக்கின்றார். இக் கவியின் வாக்கு நமது பெண் மக்களின் தற்கால நிலைமையை விளக்கப் போதுமானது. அடுப்பண்டையிலும், படுக்கையறையிலுமே வாணாளை வீணாளாக்கும் பெண்மணிகளே நமக்குத் தாய்மார்களாதலால், நமது வாழ்க்கையும் உண்பதிலும் உறங்குவதிலுமே கழிகின்றது.

ஆதலால், நம் நாட்டின் சமூக வாழ்வு தூய்மையுற வேண்டுமானால், ஆங்காங்கு சமதர்மக் கொடிகள் வானளாவிப் பறக்க வேண்டும். ஜாதி பேதம் என்னும் பைசாசம் நம் நாட்டு மண்ணுக்கே இரையாகி மடிந்த இடத்தில் புல் முளைக்க வேண்டும். ஏற்றத் தாழ்வென்னும் சொல் நமது சமூக வாழ்வின் அகராதியிலிருந்து எடுபட வேண்டும். நம் நாட்டு வனிதா ரத்னங்களுக்குச் சமதர்மம் வழங்கப்பட வேண்டும். மக்கள் சமூகத்தில் பிறப்பினால் எவ்வித வேற்றுமையும் ஏற்படக்கூடாது. பத்திரிகைகளிலும், பிரசங்க மேடைகளிலும், கல்லூரிகளிலும், மடாலயங்களிலும் சமதர்ம ஞானத்தைப் பரப்ப முயல வேண்டும். நியாயத்திற்கொவ்வா மத சம்மதமில்லா ஜாதி பேதத்தை யறவே யொழித்தலே மெய்யறமாகும்.

ஜாதி பேதம் இறந்தால் ஹிந்து மதமே அடியோடு அழிந்துவிடும் என்னும் பலமான கூக்குரல் எழும்பும். சமூக நலத்திற்கும், தேசமுன்னேற்றத்திற்கும் கேடு சூழக்கூடிய சாஸ்திரங்களை விழுங்குவதற்குக் கடலில் போதுமான நீர் இல்லையா? அவற்றைச் சுட்டெரித்தற்கு முப்புரத்தையும், தென்னிலங்கையையும், காண்டவ வனத்தையும், மதுரையம்பதியையும் உண்ட தீக்கடவுளுக்கு வல்லமை யில்லையா? ஜாதி பேதம் நமது சமய சம்மதமானதுமன்று. ஏனெனில் நம் வேதங்களிலும் அதற்கு ஆதாரமில்லை,

# ஆரம்பக் கல்வி.

ஸ்ரீமான் *N.* ரெங்கசாமி அவர்கள், B. A., L. T.

நாகரிகமுற்ற தேசங்கள் யாவற்றிலும் இப்பொழுது கடைப்பட்டது நமது இந்திய தேசமே. காரணம் கல்வியில்லாமையே. புராதன காலத்தில் கல்வியின் கரைகண்டது நமது இந்திய நாடே யாயினும், தற்காலத்துத் தனது தனயரின் இழி நிலையை நோக்கி பாரத மாதா தலைகுனிந்து கண்ணீர் விடுகின்றனள். சில பெரிய படிப்பாளிகளும் விற்பன்னர்களும் தற்பொழுது இருந்தும் யாது பயன்? சாதாரண உயிர் வாழ்வதற்குச் சில பெரியோரால் யாது பிரயோசனம்? கல்வியறிவு சிறிது மற்ற கருப்பனும் வெள்ளையனுமன்றோ கௌரவத்தையும் சிரமத்தையும் கருதாது ஏர் பிடித்து நிலத்தைப் பண்படுத்தி, நமக்கு உண்ண உணவும் உடுக்க உடையும் உவந்தளிக்கின்றனர்? இவரேயன்றோ யாவரும் போற்றற்குரிய உலகோபகாரிகள்!

கல்வித் துறையில் முற்பட்ட தேசம் எது வென்றால், சில பண்டிதர்களும் அறிஞர்களும் ஆராய்ச்சிக்காரர்களும் கொண்ட தேச மன்று; பின்னை எத்தேசந்தா னென்பீரேல், கிஞ்சித்து எழுதப்படிக்கத் தெரிந்து சாதாரண இலௌகிக விஷயங்களைக் குற்றங் குறையின்றி நடாத்தும் வெள்ளையனும் கருப்பனும் கோடிக் கணக்காக உள்ள தேசம் என்றே கூறுவோம்.

---

சமய குரவர்களும் அதை யாதரிக்கவில்லை. ஆதலால், நியாயத்திற் கொவ்வா– மதசம்மதம்பெறு ஜாதி பேதத்தை யறவே யொழித்தலே மெய்யறமாகும். தமிழணங்கின் அருங்கவைப் புதல்வர்காள்! விழிமின்; எழுமின்; சமதர்மத்தை வழங்குமின்; இன்றேல், என்றும்............

(தொடரும்)



நம் நாட்டில் கல்வியறிவு சிறிது மற்றவர் எத்தனை பேர்! கிராமாந்தர வாசிகளில் எவ்வளவு பேருக்கு எழுதப் படிக்கத்தெரியும்? நம் நாடு முன்னடைய வேண்டுமானால், மாபெரும் கலாசாலைகள் தேவை இல்லை; சின்னஞ் சிறிய ஆரம்பப் பாடசாலைகளே தேவை. ஐயமறக் கற்ற பட்டதாரிகள் தேவை இல்லை; கிஞ்சித்துக்கற்ற வெள்ளையனும் கருப்பனுமே தேவை. தாய்க் கிண்ணிப் பிச்சை எடுக்கத் தனயன் கும்பகோணத்தில் கோதானம் செய்தானும்? அதுவேபோல், கல்விக் கண்ணின்றி அஞ்ஞானமாகிய இருட்டில் ஓலமிட்டு அலைந்து திரியும் சோதரர் பலரிருக்க, உயர்தரக் கல்வி போதிக்கும் கலாசாலைகள் பல ஏன்? பட்டதாரிகள் மிகுவதால் வேலை இல்லாத் திண்டாட்டமன்றோ அதிகரிக்கின்றது.

செல்வம் படைத்தோர்க்கும் இட மனோசக்தி வாய்ந்தோர்க்குமன்றோ பட்டங்கள், கிட்டும்? கலாசாலைகளுக்காக எவ்வளவு லக்ஷக் கணக்கான திரவியச் செலவு! ஆயினும், பிரதி பிரயோஜனமடைவோர் மிகச்சிலரே. இத் திரவியத்தைக் கொண்டு ஆயிரக் கணக்கான ஆரம்பப் பாடசாலைகள் வைப்போமாயின், லக்ஷக்கணக்கான பாமரர் ஞானம் பெறுவர். அண்ணாமலையாரும் இவ்விதமே செய்திருப்பாராயின் இவ்வைந்தாறு வருடங்களுக்குள் எவ்வளவு பேர் எழுதப் படிக்கத் தெரிந்திருப்பர்!

ஆகையால், தற்போது வீணாகக் கலாசாலைகள் கட்டாது ஆரம்பப் பாடசாலைகள் கட்டுங்கள். கோயில் குளங்கள் முதலியவைகளுக்காகவும், விழாக்களுக்காகவும், கலியாண முதலிய சுப காரியங்களுக்காகவும் அளவு கடந்து கோடிக் கணக்கான திரவியமன்றோ வீணே செலவழிகின்றது! இந்தியாவின் ஏழ்மைத் தனத்திற்கு இவையும் ஒரு காரணமன்றோ? ஆதலின் நமது திரவியத்தை வீணே செலவழியாது, கோடிக் கணக்கான ஜனங்கள் ஞானக்கண் பெறுமாறு ஒவ்வொரு கிராமத்திலும் ஆரம்பப் பாடசாலைகள் ஏற்படுத்துங்கள்! வேலையில்லா ஒவ்வொருவரும், அவகாசமுள்ள ஒவ்வொருவரும், கல்விக் கண்ணில்லாத நம் சோதரரின் கல்விக் கண்களைத் திறவுங்கள்!

# சுதந்திரம்.

திரு. T. R. ராஜகோபால் அவர்கள்.



“உண்மையில், மானுடன் சுதந்தரி; எனினும், உலகெங்கும் அடிமை என்ற இருப்புச் சங்கிலியால் கட்டுண்டு வருந்தி வாடுகின்றான்!”

“சுதந்திரம் எவ்விடத்தில் நிலைத்து நிற்கின்றதோ, அவ்விடமே என் வாசஸ்தானம்.”

ஆன்மாவின் அக அமைப்பைச் சுய மாண்பைக் குண நடத்தைகள் மூலமாகத் தெளிவிக்கும் சக்தியே சுதந்திரம் என்பது.

வாழ்க்கையின் ஆரம்பமும் முடிவுமாவது சுதந்திரம்; பக்க பலமும் அதுவே. தேக நொய்மைக்கும், புத்தி மழுக்கத்திற்கும், அவிவேகத்தின் வளர்ச்சிக்கும், மனோ வியாகூலத்திற்கும், உள்ளத் துடிப்புக்கும் ஆதாரமும்—தூண்டுகோலுமான அடிமைத் தளையைத் தெறித்து, சரீர பலத்தைப் பெருக்கி, தயாள—தாராள நோக்கத்தை விருத்தித்து, உடைந்த உள்ளத்தை ஆற்றிக் கூட்டுவித்து, அயர்வுறு ஊக்கம்—தளரா வுழைப்பு—தன்னம்பிக்கை—நன்னம்பிக்கை யாகியவைகளைச் செழிப்புடன் வளர்த்து மெம்மேலெழும்ப— முன் செல்ல இன்றியமையாத சாதனமும்—சாதகமுமாக மிளிர்வது சுதந்திரமே. சுருக்கத்தில், இப் புவியின் மீது அளத்தற்கரிய பொருவிலாச் சக்தியுடன் ஒளிப்பது சுதந்திரமாகும்.

வாழ்க்கையாகிய பூமியில், சுதந்திர விரையை விதைத்துச் சுய முயற்சி— சுய வூக்கம்— ஏகாக்ரச் சித்தமாகிய துளிகள் நிறம்பப் பெற்ற தெண்ணீரை வார்த்துக் கல்வி வேலியைக் கட்டவே, அத் தெய்வீக விரை முளைத்தெழுந்து, செடியாகச் செழித்து, தன்னயங் கருதாமையாகிய வலிய பட்டையினாற் காக்கப்பட்டு, மிகப் பெரிய விருக்ஷமாக உயர்ந்து, விவேகம்—வீரியம்—அன்பு—இனிமை— பரஸ்பர விசுவாசம்—தியாக சிந்தனை— பொறுமை முதலான கிளைகளை நாலா பக்கங்களிலும் பரப்பி முதிர்ந்து, குறுகிய அறிவு பூரித்துச் சிறு தொழிற்களில் தலையிட்டு உயங்கும் புன்மாக்களுக்குப் பெருந்துணை புரிவதாகும்.



கழனிகளுக்கு வாய்க்கால் போலும், மலர்களுக்குப் பனித்துளி போலும், வெப்பம் மிகுந்து வறண்டுபோன நிலத்திற்கு மழைத் தாரைபோலும், பற்பல வியாதிகளால் பீடிக்கப்பட்டு வாடி வருந்தும் துர்ப்பாக்கியனுக்கு ஆரோக்கியத்தை ஊட்டுவிக்கும் அமிழ்தம் போலும், ஒய்வு இல்லாது உழைத்துப் பரிதவிக்கும் ஊழியனுக்கு ஒழிவுபோலும் மாந்தர்க்குச் சுதந்திரம் என்பது.

சுதந்திரம் வியாபித்து நிற்குமிடத்திற்றான் வாழ்க்கையின் உயரிய லக்ஷியங்கள் நிறைபெறும். சுதந்திரமில்லாத இடத்தில், உயரிய வாழ்க்கை இல்லை; தைரியமுமில்லை; கல்வி யில்லை; வளர்ச்சியு மில்லை; நற் கருமங்களேற்று இயற்றுதற்கான வழிகளில்லை; வாழ்க்கை ஓர் இழிய பொம்மலாட்டமாகத் தாழ்ந்து வீணாகும்.

சுதந்திர வுணர்ச்சியும், சுதந்திர விருப்பமும், சுதந்திரம் எய்துதற்கான உழைப்பும் இல்லாத இடத்தில் சமத்வம் தோன்றாது; இவ்விரண்டையும் பெற்றிராத மக்களுள் சகோதரத்வம் உண்டாகிப் பெருகிப் பரவி நிலைக்காது.

எடுத்தாளாத ஆயுதம் துருப்பிடிப்பது போல், சதா காலமும் நற்றொழிற்களில் ஈடுபட்டிராத உடல் உரங்குன்றி, நானாவித நோய்களுக்கு விளை நிலமாகின்றது. சுய விசாரிப்பின்மையால், ஆய்ந்தோய்ந்து பார்த்து அறிதலில்லாமையால் மனம் இருண்டு பாழாகின்றது. தன்னம்பிக்கையும், நன்னம்பிக்கையும், தயாளத்வமும், தியாக வுணர்ச்சியும் இன்மையால் உள்ளம் குவிகின்றது. இக் காரணங்களினிமித்தம் வாழ்க்கை வியர்த்தமாகின்றது. ஜீவசக்தி ஓட்டம் ஒடுங்கி அடங்குகின்றது! அந்தோ!

ஆதலால், அடிமையாகிய கெட்டிச் சங்கிலியால் பிணிக்கப்பட்டு, குரூரம்— மூடபக்தி என்றவை வயப்பட்டு, பாராமுகம் என்ற நடுவிஷம் பருகி, அங்கந் தளர்ந்து—மதிகெட்டு— மனங் கலங்கி, உள்ளம் இருண்டு அவதிப்படும் மாக்களே, எழுமின்! மடி—மிடிகளின் உருக்களாகித் திரிந்து நெட்டுயிர்க்கும் சகோதர—சகோதரிகளே, உறங்கியது போதும், விழிமின்! கொடியர்களால் ஆக்கப்பட்ட வலைக்குட் சிக்கி அலமந்து வாடும் இந்தியர்களே, அவ் வலையை யறுத்து அப்புறப்படுத்தி, நிர்ப்பயத்துடன் வெளிவருமின்! சுயநலப் பேயின் ஆக்ஷிக்குட்பட்டுத் தத்தளிக்கும் புன்மையர்களே, அப் பேயை யடித்துத் துரத்துமின்! கபட நடத்தையை ஒழிமின்! நயவஞ்சகத்தைக் கைவிடுமின்! அதைரியத்தைப் போக்குமின்! விடுதலைத் தேவனின் ஆக்ஞையை, சுதந்திர முரசு ஒலியைக் கேண்மின்! கலைகளைப் போற்றுமின்! விவேகத்தை வளர்த்துமின்! கணக்கற்ற உயர்ந்த தொழிற்களில் பிரவிர்த்தியுங்கள்! ஞானிகளாவீர், மேன்மக்களாய்ப் பிரகாசிப்பீர்களாக!

## அறிஞர் அருமொழிகளும் ஆன்றோர் அறநெறியும்:

சுதந்திரமில்லாது சுசீலக் குணங்களும், புனித ஒழுக்கங்களுமில்லை. நன்மை தீமைகளின் தாரதம்மியங்களை அறிந்து, முன்னதைப்பற்றிப் பின்னதை விடுத்தற்கான உரிமையில்லையானால், வாழ்க்கைப் பயன் என்னையோ, லக்ஷியம் யாதோ? சுதந்திரம் இல்லாதவிடத்தில் அறம் தோன்றி வளர்வது எவ்வாறோ? சுதந்திரமில்லாவிடில், நற் சங்கங்கள் பெருகா; ஏனெனில், செல்வர்க்கும் மிடியர்க்கும், உழவர்—சாமானியர்களுக்குள்ளும் யாதொரு கூட்டுறவு அல்லது ஒற்றுமை ஏற்படாது; பின்னவரை முன்னவர் எப்பொழுதும் உதைத்துக் கீழிருத்தி வருத்தியே வருவார்கள்; பரஸ்பர அன்பும்—நம்பிக்கையும் ஒரு பொழுதும் உண்டாகா. எக் காரணத்தையிட்டாவது ஒருவர் மற்றவர் மீது கொடூர ஆக்ஷியே செலுத்தி வருவார்கள். பிறப்பும், பொருட் செல்வமும், டாம்பீகமும் பூரிக்கப் பெற்றவர்களுக்குப் பிரத்தியேகமான உரிமைகளும் சுக செளகரியங்களும் இல்லை என்ற உண்மையை முன்னினத்தவர் உணரார். இவை சரித வுண்மைகளன்றோ?

மானுடரின் பொது நன்மை— இன்பங்கள் பெருக அநுகூலிக்காத அல்லது பலதிறப்பட்ட இழிய கபடோபாயங்களால் அவைகளைச் சுருக்கிட்டு அடக்க யத்தனிப்பவரை அவஸ்யமாக அப்புறப்படுத்தல் நற் கருமமாகும்.

பிரஜைகளின் க்ஷேமத்திற்கு முரணாக நிற்பது ராஜத்வம் அல்ல. ராஜாங்கம் என்பது ஜனங்களின் மேலேற்றத்திற்கான உபாயங்களைப் பல துறைகள் வழியாகத் தெரிவித்து, அவைகளை ஒவ்வொருவரும் பின்பற்றி ஒழுகச் செய்வதற்கான கருவியாகும். பிரஜைகளின் சுபீக்ஷத்திற்காகப் பிரஜைகளால் நிருமிக்கப்பட்டு மேன்மேலும் உயர்வதாகும் ராஜாங்கம் என்பது. பிரஜைகளை அகாரணமாய்க் குரூரச் சட்டங்களால் ஒழுத்தி அடக்கி, விலங்குகளுக்குந் தாழ்ந்தவர்களாக மாற்றுவதற்கு ராஜாங்கங்கள் இருந்து வருவனவல்ல; உண்டானவையுமல்ல.

ஆன்மாக்களை உயர்த்தாது, பற்பல (தீயச்) சட்டங்களாலும், (கொடுந்) தண்டனைகளாலும் பலாத்காரமாக அடக்கி, மெய்க் கல்வியளிக்காது போலிப் படிப்புக்களையும் அல்லது அடிமை இச்சையையும்—பய வுணர்ச்சியையும்— மூடச் செருக்கையும்—வீண் படாடோபங்களையும்— கபட நடத்தைகளையும்— கன் னெஞ்சையும் ஊட்டக்கூடிய கல்விகளையும்— வழிகளையும் அதிகரிக்கச்செய்யும் ராஜாங்கத்தையும்—உழையர்களையும்— சங்கங்களையும் அன்பு சாத்வீகம் ஆகிய ஆயுதத்தால் வேருடன் பெயர்த்தெறிய வேண்டும்.



மானுடராசியின் மீது ஆக்ஷி செலுத்துபவன் ஒருவனே. அவ்வொருவனையே நாம் பல்வேறு பெயர்களிட்டு ஆராதித்து வருகிறோம். ஆக்குவதும் அழிப்பதும், சிருஷ்டிப்பதும் துகளாக்குவதும், உயர்த்துவதும் தாழ்த்துவதும் அப்பரவஸ்துவே; அத்தொழிற்களைச் செம்மையாக நடத்தற்குரியன் நடத்தக் கூடியவன் அவனேயாம். ஆதலால், அநுதினமும் அவனைத் தொழுது, அவன் ஆக்ஞைக்குக் கீழ்படிந்து, அவ்வப்போது போன்மாக்கள் மூலமாக அவன் காட்டிவரும் பாதையைப் பற்றி ஒழுகுவோமாகில், காலக்கிரமத்தில், நம்முடைய வாழ்க்கையின் லக்ஷியம் தெளிந்து நிறைபெறும்.

மானுடராசி ஒரே கடவுளின் புத்திரர்களாவர்; ஆதலால், மாந்தர் ஒருவர்க்கொருவர் சகோதரர்களாகின்றார்கள்; ஆதலினால், மிதமீறிய சுயநலச் சிந்தனை—குரோதம்— பய வஞ்சகம்—பொறாமை—வெறுப்பு முதலான தீமைகள், மாந்தர்க்குள் நின்று நிலவக்கூடாது.

பலதிறப்பட்ட தொழிற்களில் ஒவ்வொருவரும் அவரவர் திறனுக்கேற்றதைத் தெளிந்து கைமேற்கொண்டு செய்யவேண்டும். மிடியின் தாய் மடி; மடியின் தகப்பன் மௌட்டியம்.

விசுவாசம் தொழிற்கள் மூலமாகத்தான் செழித்து வளர்வது. தொழிற்களில் தலையாயது நிட்காமப் பணியே.

உனக்கு உரித்தானவைகளை உன்னிடமிருந்து ஒருவராலும் அபகரித்துவிட முடியாது. உன் உரிமைகளில் முதன்மையானது சுதந்திரம். உன் மனப்போக்கை எத்தகையராலும் அடக்க முடியாது.

சங்கங்கள் மூலமாகத்தான் சுதந்திரம் பிரபலமாகின்றது.

பரஸ்பர நம்பிக்கை—நேர்மை—வாய்மை—தாராளத்வம்—பொறுமை—தியாக சிந்தனை யாகியவைகளின் திரண்ட உருவமே சங்கம் என்பது.

தியாகசிந்தனை குடிகொள்ளாத இடம் புலியின் குகைக்குச் சமானமானது. உதாரத்வமும் ஒத்துழைக்குங் குணமும் உடையதாயிராத மக்கள் ஓநாய்க்குங் கீழானவர்கள்.

கடவுளால் அளிக்கப்பட்ட ஜீவனை மென்மேல் உயர்த்திப் பிரகாசிக்கச் செய்ய வேண்டும்; அஜாக்கிரதையினாலோ, மமதையினாலோ, அல்லது துர்நடத்தைகளாலோ ஜீவாக்கினியை மழுக்கி அணைத்துவிடக் கூடாது. ஒருவனுடைய மெய்க்குண நடத்தைகள் ஏற்றியற்றும் கர்மங்கள் வாயிலாக அறியப்படும். நற்கருமங்களுக்கு ஆழ்ந்து பரந்த கல்வியும், சுயவிசாரிப்பும் சத்சங்கமும் ஆதாரமாவன.

சிறந்த லக்ஷியம், அல்லது மேதக்க நோக்கம், இதை அநுபவத்திற்குக் கொண்டு வருவதற்கான உழைப்புமே மேலற்றத்தின் உரையாணிகளாவன.

போன நாட்கிரங்குவதே தொழிலாய்ப் பொருந்தாளத்தனையும் போக்கி, கடந்து சென்ற சீர்—செல்வம்— பெருமைகளைப் பன்முறை நினைத்துப் பார்த்து உள்ளம் உருகி, இவ்வாறு ஜீவ காலம் முழுவதையும் கழிப்பது விவேகத்திற்கு இழுக்காகும்; ஞானத்திற்குத் தடையாகும்.

ராஜ்யம்—சங்கம்—குடும்பம், இம்மூன்றும் பிரிக்கக் கூடாவண்ணம் சம்பந்தித்திருப்பன. ஒன்றின் குணாதிசயங்கள், அல்லது ஏற்றத் தாழ்வுகளை மற்றவை பிரதிபலிக்கும்.

சுதந்திரம்—சமத்துவம்—சகோதரத்துவம் என்பன தியாக சிந்தனையாலும் நிஷ்காம கர்மங்களாலுமே சீர்மையுடன் நிலைநிறுத்தப்படுவன.

ஜீவன் ஒன்றே. அங்கமும் சங்கமும் அதின் தோற்றங்களாவன. இவ்விரு ஜ்வாலைகளும் ஒரே கும்பத்தினின்று எழும்பிப் படிப்படியாய் இறுதியில் ஜகதீசனில் சந்தித்துச் சேர்வன. அங்கமில்லாது சங்கமில்லை, சங்கமில்லாது அங்கமுமில்லை. தீர்ந்து தெளிந்த அறிவும் தன்னம்பிக்கையும் இல்லாது சுயத்வம் இல்லை; பரஸ்பர விஸ்வாசமும், அன்பும், இனிமையும் இல்லாது சங்கமில்லை. ஒன்றற்கொன்று சார்பாக உள்ளன. க்ஷேமம்—இன்பம்—சமாதானம்—சத்தியம் என்பவைகள் அவைகளின் ஒத்த உழைப்பின் பலன்களாவன. சுயத்வம் மாத்திரம் மிதமீறிப் போனால், கலகம் உண்டாகும்; சங்கம் அல்லது ஜனசமூதாயம் எல்லைகடந்து போயின், கொடுமை அதிகமாகும்.

பாராமுகம்—ஜடத்வம்—சஞ்சலம்—பயமாகியவைகள் ஜீவான்மாவைப் பாதித்து நிலைதடுமாறச் செய்து, யாதொரு உள்ளக் கருத்து—அகநோக்கம்—ஏகாக்ர சித்தம்— மனவுறுதிகளில்லாமையால், புலன்களையும்—மனத்தையும்— நெஞ்சையும் அலைப்புறுத்துகையில், வாழ்க்கையை வெறுத்து மரணத்தை ஆவலுடன் எதிர்பார்க்கிறார்கள் சிற்றறிஞர்கள். தளர்ச்சி என்றால் திகில்; போர்—தொழில்— சிரமம் என்பவைகளைப் பற்றி நினைத்த மாத்திரத்தில் பயம்; அஞ்சுதற்கு அஞ்சாது, அஞ்ச வேண்டாதவைகளுக்கு அஞ்சி உயங்கி மாய்கின்றனர் பலவாயிரப் புன்மாக்கள்! என்ன விந்தை! சோம்பித் திரிதற்கும், உண்டு உறங்கிக் காலத்தை அவமே கழித்து மடிதற்கும் ஜீவன் இவ்வுலகில் அவரித்து இருந்து வருவதல்ல. இவ்வுலகமும்— உலக வாழ்க்கையுமே ஜீவான்மாவின் முடிவுகளல்ல. காலச் சக்கரம் சுழல்கின்றது; பாசங்களாகிய சண்டமாருதம் நாலாபக்கங்களிலும் வெகு மும்முரமாக வீசுகின்றது; பல்வேறு துன்பங்களான பாறைகள் சுற்றிலும் தடுத்து நிற்கின்றன;



இவைகளிடையில் காயக் கப்பல் தத்தளிக்கின்றது! இவ்விபத்துக்களிலிருந்து தப்பி உய்தற்கான வழியாதோ? பொறிகளைக் கட்டி, மனதைத் திடப்படுத்தி, உள்ளத் துடிப்பைக் கவனியாது, அந்தரான்ம சக்தியை நம்பவே, ஞானேதயமாகி, அச்சக்தி—அந்த ஞானம் அவைகளை எதிர்த்துத் நகர்த்துப் பொடியாக்கி முன் செல்ல உலவும்.

பிறப்பு முதல் இறப்பு வரையிலும், தொட்டில் முதல் சுடுகாடு வரையிலும் ஒவ்வொரு ஆன்மாவையும் கடப்பாடு என்பது விடாது பற்றித் தொடர்கின்றது. நாளேற நாளேற, வயது செல்லச் செல்ல, இக்கடப்பாடும் பற்பல கிளைகளிட்டு வளர்கின்றது. இக்கடப்பாடு சுய வளர்ச்சிக்காகவும், சகோதர—சகோதரிகளின் க்ஷேமத்திற்கும், தேசத்தின் மேன்மைக்கும், தேசத்தினரின் சிறப்பிற்கும், சர்வத்திற்கும் மேலான அடிப்படையான ஜகத் பிதாவுக்கும் பல வழிகளில் செலுத்தி நிறைவேற்றப் படுகின்றது.

தீமையை அடக்கி நன்மையைப் பரப்ப, குழப்பத்தைத் தீர்த்துச் சீர்மையை ஸ்தாபிக்க யாவரும் ஒன்றுசேர வேண்டும். வறுமைப் பிணியைப் போக்க வேண்டும். சோம்பலாகிய பேயை அடித்துத் துரத்த வேண்டும். செல்வச் செருக்கினரை முறிக்க வேண்டும். கொடுங்கோன்மையை வீழ்த்த வேண்டும். மௌட்டியத்தை ஒழிக்க வேண்டும். அடிமைச் சங்கிலியை உடைத்தெறியவேண்டும்.

சுயநலம்— பரோபகாரச் சிந்தனை, அல்லது தன்மறுப்பு என்ற சரிழைகளால் ஆக்கப் பட்ட போர்வை தரித்து உலாவுவது ஜீவான்மா. சரீராரோக்கியத்திற்கு உற்ற துணையாவது முன்னது; ஆன்மா வளர்ச்சிக்கும், சங்க முன்னேற்றத்திற்கும், ஜாதியின் விர்த்திக்கும், பரஸ்பர அறிவு—ஒற்றுமை— அன்புகளின் செழிப்பிற்கும் அநுகூலமாவது பின்னது. முன்னதினின்று உரிமைப் பாவனையும், பின்னதினின்று கடமை எண்ணமும் பெருகிப் பரவுகின்றன. முன்னதின் முடிவு சுய சுக போக வாழ்க்கை; பிறர் நலம்—பெருமை சுபிக்ஷங்களே பின்னதின லக்ஷியமாகும். கோபம்—பொறாமை—செருக்கு—அவநம்பிக்கை—தேகத் தடிப்பு— புத்தி மழுக்கம்— உள்ளத் துடிப்பு— மனக் கலக்கம்—புலன்களின் இழிவு—அழிவுகளே முன்னதின் பலன்கள்; பொறுமை—தயாளத்வம்— மனச் சீர்மை— நெஞ்சுக்கனிவு—புலக்கட்டு—புரைதீர் ஞானம் என்றவைகளே பின்னதின் குணங்களாவன. கலகம்—எழுச்சி—போர்களுக்கு ஆதாரமும்—பக்கபலமுமாவது முன்னது; க்ஷேமம்—ஒற்றுமை அன்பு— இனிமைகளுக்கு விளைநிலமாவது பின்னது. பிடி—நோய்—வலி வருத்தம்—ஏக்கமாகியவைகளுக்குக் காரணமாவது முன்னது; செழிப்பு—ஆரோக்கியம்—தயை—திருப்தி—ஆனந்தகளுக்கு அஸ்திபாரமாவது பின்னது. மக்களை வசத்து வருத்தி மாக்களாக மாற்றுவது முன்னது; அம்மாக்களைச் சேர்த்து ஆன்மாக்களாக உயர்த்துவது பின்னது; ஏகத்

# வீர்மாலா கோட்மதே.

## ஸ்ரீமான் M. சின்னச்சாமி அவர்கள்.

(5)

வெகு காலத்திற்கு முன் இராஜபுதனத்தில் பூங்கல் எனும் பெயரையுடைய ஓர் சிற்றரசன் இருந்தான். அவனுக்கு ஊடிர் என்பது இராஜதானியாக விருந்து வந்தது. அங்கு மாணிக்கராஜ் எனும் வீர க்ஷத்திரியன் தலைவனாக விருந்தான். அவனுக்குக் கோட்மதே எனும் செல்வப் புத்திரி யொருவளிருந்தாள். அவள் அழகில் சிறந்தும், அதற்கேற்ற குணங்கள் அமைந்தும் விளங்கினள். கோட்மதே பருவம் அடைந்தவுடன், அவளின் அழகுக்கும், குணத்திற்கும் ஆசைப்படாதார் இராஜபுதனத்தில் ஒருவருமில்லை. ஆண்டவன் அவளுக்கு இளம் பிராயத்திலேயே வீர ஹிருதயத்தை யளித்திருந்தான். வீரர்களுடைய கதைகளில் அவளுக்கு ஆவல் அதிகம். மிக உற்சாகமாய் வீரர்கள் சரிதையைக் கேட்பதோடு, மனதில் அதை யிறுத்தி வேறொன்றிலுங் கருத்தைச் செலுத்தாதும் இருந்து வருவாள். அவளுக்கு மணப் பருவம் நிறையவே, பெரிய பெரிய க்ஷத்திரியர்களெல்லாம் அவளையடைய விரும்பினர். இதற்காக மாணிக்கராஜிடம் வருபவர்கள் சந்தேகமாகவே வருவார்கள்.

---

வத்தைச் (Individuality) சாதிப்பது முன்னது; சுயத்வத்தை (Personalitiy) வெளிப்படுத்துவது பின்னது. ஆன்ம சக்தியை யடக்கி யொடுக்கி யவிப்பது முன்னது; பின்னதோ அச்சக்தியை மெய்மே லெழுப்பிப் பிரகாசிக்கச் செய்வதாம். சுயேச்சையை (Libertinism) அவலம்பித்துப் படுவது முன்னது; பின்னதோ சுதந்திரத்தைப் பரப்பி நிலைக்கச் செய்வது. சுருக்கத்தில், அமரத்தன்மை எய்துதற்கான உறுதிமார்க்கம் பின்னதாம்.

மானுட சரீரம் ஓர் தேவாலயம்; சுய ஞானம் என்ற மந்திரப் பலகையின் மீது வீற்றிருக்கின்றது அந்தரான்ம விக்கிரஹம். இவ் வான்மாவின் மாண்பைக் கடமை யறிவும்–தொழில்களேற்றுப் புரிதலுமே அறிவிப்பன. இத் தேவாலயத்தினின்று செருக்கு-தற்பொழிவு என்பவைகளை அறவே அப்புறப்படுத்த வேண்டும். கல்வி அறிவினால், பலதிறப்பட்ட தொழிற்களியற்றுவதினால், பல்வேறு அருபவமுதிர்ச்சியால் ஆன்ம ஞானம் வலியுறுகின்றது, தியாக சிந்தனையினால் பிரகாசிக்கின்றது.

---



அவ்வமயம் ராடேனர் நரேஸ் என்பார் மிகக் கீர்த்தி வாய்ந்தவரா யிருந்தார். அவருடைய இராஜ்யமும் மிகப் பெரிதாகவிருந்து வந்தது. அவருக்கு மண்டேனர் எனும் நகரம் இராஜதானியாக விளங்கிற்று. இதற்கு நரகேசரி சூடா என்பவர் அதிபதியா யிருந்தார். அவர் கீர்த்தி மிகப் படைத்தவர். இவருடைய பெயரைக் கேட்ட மாத்திரத்தில் பெரிய பெரிய வீரர்களுடைய மார்புந் துடிக்கும். இவருக்கு அநேக புத்திரர்களிருந்தார்கள். அவர்களில் அடர்கீமல் என்பான் மிகப் பிரசித்தி பெற்றவன். அவன் தந்தையைப் போன்றே யுத்தப் பயிற்சியில் மிகத் தேர்ந்து விளங்கியதால், தந்தைக்கு இவனிடம் அதிகப் பிரியமுண்டு. இக் காரணத்தால் அவனுடைய தந்தையும் விவாஹத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து கோட்மதேயை நிச்சயஞ் செய்தார்.

அவ்வமயம் ஜைசல்மேர் இராஜ குமாரனான ஸோதூல் என்பான் மிகக் கியாதி படைத்திருந்தான். அவனும் எத்தனையோ யுத்தங்களில் சென்று வெற்றிமாலை சூடி யிருக்கின்றான். கோட்மதே இவ் வீர இராஜ குமாரனின் பராக்ரமக் கதைகளைக் கேட்டுக் கேட்டு, அவனையே தன் மனதில் வீரனாக—காதலனாக ஒப்புக்கொண்டிருக்கிறாள்.

இவளுடைய விவாஹமோ நெருங்கிவிட்டது. அவ்வமயம் எவ் வேலையாகவோ ஸோதூல், ஊடிர் இராஜதானிக்கு வந்திருந்தான். மாணிக்க ராஜ் அவனை மிக மரியாதையாக அழைத்துவந்து தன்னுடைய வீட்டில் உபசரித்தான் இதற்கு முன்னரே இன்னவனின் வீர வர்ணனைகளைக் கோட்மதே கேள்வியுற்றிருப்பினும் இன்று இருவரும் நேரில் சந்திக்க நேர்ந்தது. அவனின் சுந்தரம் போன்ற முகம் கம்பீரமான நடையும், கோட்மதேயின் காதலை யதிகரிக்கச் செய்தது.

ஸோதூலும் இம்மாதிரியே அவளிடங் காதலுற்றிருந்தான். இச் செய்தி மாணிக்க ராஜனுக்கும் அவர் மனைவிக்குந் தெரியாது. விவாஹம் சமீபிக்கவே தன் தாய் தந்தையர்களிடம், அப்பொழுது தன் முடிவை வெளியிட்டாள். திக்கற்ற மாணிக்கராஜ் இச் செய்தியால் மிகப் பீதி யடைந்தார். புத்திரியின் விருப்பப்படி விவாஹத்தை முடித்தால் ஓர் பெரிய அரச சிங்கத்தின் கோபத்திற்கானாக வேண்டிவருமே என்று தூக்கித்தார். இவளுடைய கர்ஜனையால் தன்னுடைய சிறிய அரசும் தலை கீழாய் மாறிவிடுமே என நடுங்கினார். அடர்கமலுக்கு நிச்சயார்த்தம் செய்த பிறகு இவ்விதம் வருமென்று சிறிதும் கருதவேயில்லை. எவ்விதம் அவர்கள் ஒப்புக்கொள்ள முடியுமென வருந்தினார். தன்னுடைய குமாரிக்கும் வேண்டிய சமாதானங்கள் செய்து பார்த்தார். அவளோ அவனை மனதிலுங்கூட நினையாதே என்று தெளிவாய்க் கூறிவிட்டாள். அம் மட்டுமோ? பெண்களுரிமையில் நீங்கள் தலையிட அதிகாரமுமில்லை யெனப் புகன்றாள். எப்பொழுது ஒருவரை நான் மனதில் நினைத்தேனோ அவரே எனது கணவர் ஆவர் என்பதைப் பெண்கள் தர்மத்தில் நான் கற்றுக் கொண்டிருக்கின்றேனெனவுங் குறிப்பிட்டாள்.

வரப்போகிற ஆபத்தை நினைத்து மாணிக்கராஜனும், அவர் மனைவியும் மிகப் பிரலாபித்தார்கள். இவர்கள் எவ்வளவுக்குப் பிரலாபிக்க வாரம்பித் தார்களோ அவ்வளவுக்கு அவள் ஸோதூலுவினிடம் பிரேமை வைத்தாள்.

இச் செய்தி அடக்கமாக விருந்தபோதிலும், ஸோதூலின் பிதாவான இரணங்கதேவ் காதிற் கெட்டிவிட்டது. அவரும் இதற்கு முன் அடர்க்மல்லுக்கு நிச்சயஞ் செய்திருப்பதையும் மறந்தார். இச் சுந்தரி கோரமான ஆபத்தோடு நமதில்லத்தில் புகுந்தாலும், க்ஷத்திரியர்களாகிய நாம் இதற்குப் பயப்படுதல் கூடாதெனக் கருதினார். உடனே அவர் மாணிக்கராஜிடம் சென்று இவ் வீரசிரோன்மணியான உனது குமாரியின் சரணாரவிந்தத்தில் வீரர்கள் தலைவணங்குவார்கள். நாமும் க்ஷத்திரியர்கள்தான்; பயமடைதல் வேண்டாம். அவர்களும் அந் நிச்சயத்தை மறந்துவிடுவார்கள். 'நீர் மிக மிக மகிழ்வுடன் மருமகளை என வீட்டிற்கனுப்பிவையும்' எனத் தேர்தல் கூறினார்.

அவருடைய வேண்டுகோளின்படியே ஸோதூலின் வாளுக்கு, கோட்மதே மாலை சூட்டினாள். மாணிக்கராஜும் பயந்துகொண்டே பாதி ராத்திரியில் சடங்குகளை செய்து முடித்தான். மணமகனும் மணமகளும் ஒருருவமானார்கள். மணவினை முடிந்த பின்னர் கோட்மதேயும் ஸோதூலும் விடைபெற்று, தங்கள் இல்லத்திற்குப் பயணமாகினார்கள். அவ்வமயம் மாணிக்கராஜ் அப் புதிய தம்பதிகளைப் பார்த்து, "இம் மணவினையைக் கேட்ட அடர்க்மல் சாந்தமாகவிரான்; அவசியம் வழியில் உங்களுடன் சண்டைக்கு வருவான். அவ்விதம் வந்தபோதிலும் அவனை எதிர்க்க என்னுடனிருக்கும் சேனையை யழைத்துச் செல்லுங்கள்" எனக் கூறினான். உடனே ஸோதூல் மாணிக்கராஜைப் பார்த்து, நீங்கள் ஏன் பயப்படுகின்றீர்கள்! என்னுடைய கூட்டாளியும் வீரமுள்ளவளே. அவளும் வீரத்தாயின் பாலருந்தி யிருக்கின்றாள். ஆனதால் சிறிதும் நீங்கள் கவலையடையாதீர்கள் எனப் புகன்றான். மருமகன் எவ்வளவு தேருதல் கூறியும் சமாதானமில்லாது, அவர்களுடன் நல்ல வீரர்களாகப் பார்த்து ஐநூறுவரை அனுப்பிவைத்தான்.

மாணிக்கராஜ் எவ்விதஞ் சந்தேகமடைந்தானோ அவ்விதமாகவே முடிந்தது. இவர்கள் சடங்குகளை எவ்வளவு சீக்கிரமாக முடித்தார்களோ அவ்வளவு சீக்கிரமாகவே அடர்க்மல் காதிற்கெட்டியது. இது செய்தியறிந்த அடர்க்மல்லின் தகப்பன் தன் குமாரனை அடர்க்மல்லிடம் "குழந்தாய்! இப்பொழுதே போய் ஸோதூலைக் கொன்று கோட்மதேயைச் சிறைசெய்து வா. அவளை என்னுடைய அரண்மனையின் வேலைக்காரியாக்ச் செய்கிறேன். ஊடிர் ராஜதானியையு மிடித்துச் செங்கலாக்கி வா. இந்த முட்டாளான மாணிக்கராஜுக்கு இவ்வளவு துணிவும் ஏற்பட்டதா? நம்மை அவன் இவ்விதமாகவா அவமானஞ் செய்ய வேண்டும்? ஆனாலும் என்ன! அங்கு இரத்தம், நதியாக ஓடட்டும்" எனக் கூறினான். இவ்வுரை கேட்ட அடர்க்மல்லும் அதிக வீரர்களோடும், வாகனங்களோடும் கடலலைபோல் கொந்தளிப்புடன் கிளம்பிவிட்டான்.

சதிபதிகளிருவரும் சந்தடியின்றி இடைவழியில் சென்றுகொண்டிருக்கும்போதே, அடர்க்மல் ஆங்கு தோன்றி அவர்களைத் தடுத்தான். இதைக் கண்ணுற்ற ஸோதூல் அவனை நோக்கி வினயமாகக், கோபப்படக் காரணம் யாது? நாமிருவரும் வீணில் போர்புரிந்து கொள்வதில் யாது பிரயோஜனம்? ஆதலால் எங்களுக்குத் தடையின்றி வழியைவிடு" என்றான். இவ்வுரை கேட்ட அடர்க்மல், "கெட்ட கொலைபாதகா! உன்னு



டைய இரத்தத்தை யுத்த தேவிக்கு அர்ப்பணஞ் செய்ய நான் இங்கு வந்திருக்கின்றேன். எனது மனதைக் கெடுத்ததுமன்னியில், என்னை இதுவரை மதியாதுமிருந்தாய். ஆதலால் உன்னை ஓரங்குலமும் முன்செல்ல விடேன். இப்பொழுது இருவரும் யுத்தத்திற்குத் தயாராக வந்துவிட்டோம். இரண பேரிகையையும் முழக்கிவிடுவோம்" எனக் கடுகடுத்துக் கூற, ஸோதூல் அவனை நோக்கி "நானும் உன்னைக்காட்டிலுங் குறைந்தவனில்லை. இருப்பினும் நிரபராதிகளான இவ் வீரர்களைக் கொலை செய்வதில் யாது பயனுமில்லை. ஆகவே நம்மிருவருக்கும் வெற்றி தோல்வியறிய நமது வீரர்களில் ஒருவரைத் தேர்ந்தெடுத்து யுத்த களத்தில் சண்டைக்கு விட்டுப் பார்ப்போம். அதுவே நமது வெற்றியுந் தோல்வியும் ஆகுமெனக் கூற, அவனும் இதை ஒப்புக்கொண்டான்.

இரு பக்கங்களிலும் இரு வீரர்களைத் தேர்ந்தெடுத்து மைதானத்தில் விடுத்தார்கள். அவர்கள் வெகு நேரம்வரை போர் புரிந்தார்கள். கடைசியாய் ஸோதூலுடைய வீரன் அடர்க்மல்லின் வீரனுக்கு நன்றாக இரு அடிகள் கொடுத்தான். அதனால் ஸோதூலின் வீரன், தான் வெற்றியடைந்ததாக நினைத்துக் கர்வமடைந்து உன்மத்தனானான். அம்மட்டுமல்ல; கத்தியையெடுத்து அடர்க்மல் சேனையையும் எதிர்த்தான். இதனால் மணமக்களுக்குக் கெடுதியும் நேர்ந்தது. பயங்கரமான யுத்தமும் ஆரம்பமாய்விட்டது. சேனைகள் தாக்குவதினால் ஆகாயத்தில் எதிரொலி கிளம்பியது. இந்நிலையைப் பார்த்த ஸோதூலும் யுத்த சன்னத்தனானான். தன் ஆசை நாயகியான கோட்மதே யிடம் விடை கேட்டான். கோட்மதே புதிய மணமகள்; ஸோதூலும் புதிய மணமகன். இவர்களின் கைகளில் மணவினையில் அணிந்த சிவப்பும், மஞ்சளும் அழியாது அப்படியே இருந்தது. கோட்மதே தன் கணவனை நன்கு பார்த்தும் பேசியறியாள். இன்னும் சாந்தியும் நடைபெறவில்லை; எனின், இவர்கள் சுகத்தை எப்படி யறியக் கூடும். ஆனால் இருவர் மனதிலுங் காதல் பொங்கித் ததும்பிக்கொண்டிருந்தது. அவ்வமயம் அவன் தன் வீர பத்தினியை நோக்கி, "மாதே! ஒன்றைமட்டும் நினைவிருத்திக்கொள்; அதுதான் கீர்த்தி. அக் கீர்த்தியானது இன்றுங்கூடப் பாரதமணிகளிடந் தலைசிறந்து விளங்குகின்றது. என்ன கூறுகின்றாய்" என்று கேட்டான். அதற்கவள்,

"நாதா க்ஷத்திரியர் யுத்த பூமிக்குச் செல்லும்போது ஒன்றையும் யோசிப்பதில்லை; கலங்குவதுமில்லை. அவர்கள் யுத்தத்தின் அவசரத்தால் முகத்தைக்கூடத் திரும்பியுங் காண்பிப்பதில்லை. தாங்கள் எப்படி வீர பத்தினியை யடைந்தீர்களோ அப்படியே யானுங் கௌரவத்தை யடைந்துள்ளேன். தாங்கள் யுத்த பூமிக்கு மகிழ்ச்சியுடன் செல்லுங்கள். வெற்றி கிடைப்பின் இவ் வுலகில் நாமிருவரும் சந்தித்துச் சுகத்தை யடைவோம். தோல்வி கிடைப்பின் இருவரும் சையோகமாய் அக்கினியில் மூழ்கி வீர சுவர்க்கத்தை யடைந்து அங்கு சுகத்தை யனுபவிப்போம்" என விடையிறுத்தாள். அவ் வீரவுரை கேட்ட ஸோதூல் அவளை மார்போடு கட்டியணைத்தான். இங்குதான் காதலரிருவர்கள் கடைசிச் சம்பாஷணையும், முதல் சம்பாஷணையும்; இங்குதான் ஆனந்தமான முதலிரவும், கடைசியிரவும்; இதுதான் முக்கிய கடைசி நாள். ஸோதூல் இரண பூமிக்குச் சென்றான். யுத்தம் பலமாக நடைபெற்றது. அவனும் அநேகரை வெட்டி

வீழ்த்தினான். கடைசியாய், அடர்க்மல் எதிரிலும் போய் நின்று அவனைப் பார்த்து "ஹே! சோதரனே!! ஏன் இந்த இரத்தக்களரி விளையாடல் வேண்டும்? வருவாய்; நாமிருவரும் ஒரு முடிவு செய்துவிடுவோம். அம் முடிவும் சீக்கிரந் தெரிந்துவிடும்" என்று கூறினான். அது கேட்ட இரு படைகளும் சாந்தமாகியது. இச் சத்திய வார்த்தை கேட்ட அடர்க்மலும் போராசைவிடுத்து, இவனெதிரில் வந்து நின்றான். இவனும் ஸோதூலைக் காட்டிலும் குறைந்தவீரனில்லை. இருவரும் போர் புரிய ஆரம்பித்தார்கள். இருதிறப் படைகளும் வேடிக்கை பார்த்தன. அடர்க்மல் அடிபட்டான். ஆயினும் ஸோதூலும் மிகக் காயமடைந்திருந்தான். அடர்க்மல் கீழே விழுவதைப் பார்த்து ஸோதூலும் குதிரையிலிருந்து கீழே விழுந்து மூர்ச்சையானான்.

இச் செய்தி கேட்ட கோட்மதே அங்கு வந்து தோன்றினாள். அவளுடைய மனதில் கிஞ்சிற்றுங் கவலைக்குறி யில்லை. ஆனால் அதற்குப் பதிலாக அவள் முகத்தில் வீரம் சொட்டிக்கொண் டிருந்தது. அவள் கீழே விழுந்துகிடக்கும் தன் கணவனை யெடுத்துத் தன் மடியில் அவனது சிரசை வைத்து ஓர் உபாயஞ் செய்தாள். அதன்பயனால் அவன் வெகு நேரத்திற்குப் பின் மிகக் கஷ்டத்தோடு கண்களைத் திறந்து பார்த்தான். காதலியின் மடியில் தலை வைத்திருப்பதைப் பார்க்க அவனது முகத்தில் புன்சிரிப்புத் தவழ்ந்தது. சிறிது நேரத்திற்குப் பின் தன் காதலியை நோக்கி, "பிரியே மன்னிப்பாயாக; என்னாலல்லவோ உனக்கும் இவ்வித நிலை இன்று நேர்ந்தது. நான் உனக்கு யாதொரு சுகத்தையுங் கொடுக்கவில்லையே" என்று கூறிக் கண்ணை மூடினான்; ஓர் இருமல் வரவே அவன் பிராணனும் ஆனந்தமாய்ப் பறந்தது. இது கண்ட அவ் வீரபத்தினி ஆஹா! "தங்களுடைய ஆத்மாவன்றோ புண்ணியஞ் செய்தது. நானல்லவோ தங்களைவிட்டுப் பிரிந்தேன். ஸ்வர்க்க யாத்திரை எனக்கில்லாமலா போய்விடும்? இதோ யானுங்கூட வருகின்றேன் என்று கூறி, எழுந்திருக்குந் தருணம் அவளுடைய கண்களிலிருந்து இருசொட்டுக் கண்ணீர் ஸோதூலின் முகத்தில் விழுந்தது. அந்த யுத்த பூமியின் எண்ணமும் நிறைவேறியது. அப் புதிய தம்பதிகளின் சௌபாக்யமும் முடிவடைந்து விட்டது. கடைசியாய் அவள் வீராவேஷத்துடன் எழுந்தாள். தன்னுடைய ஒரு கையைத் தானே வெட்டி, அதைத் தன் தந்தையார் தனக்குதவியாய் அனுப்பியிருந்த வீரர்களிடங் கொடுத்து காணிக்கையாகச் சமர்ப்பியுங்கள் என்றாள். மற்றொரு கையைத் தன் தாதியை வெட்டும்படி செய்து அதை மாமனாருக்குக் காணிக்கையாக அனுப்பிவைத்தாள். பிறகு என்ன நடக்கக்கூடும்? கடைசியாய் சதிபதிகளிருவரும் அவ்விடம் வந்து சாம்பலாயினர். அந்தோ! பரிதாபம்!



ஊர் நல்லசேலை நெய்வதில் பெயர் பெற்றது. வடுகபட்டிச் சேலைக்கு மதுரை ஜில்லாவில் கிராக்கி அதிகம். நெசவுத் தொழிலையே குலத் தொழிலாகக் கொண்ட தேவாங்கர்களும் பத்மசாலியர்களும் இக் கிராமத்தில் அதிகமாக வசிக்கிறார்கள். இங்கு பல தறிகள் இருக்கின்றன. இவ் வூரிலிருக்கும் வாலிபர்கள் தேசீயத்தில் அதிகப் பற்றுடையவர்கள். இங்கு இருக்கும் நெசவுக்காரர்கள் கதரை அபிவிருத்தி செய்ய ஆரம்பித்தால், மதுரை ஜில்லாவின் கதர் தேவையை நிவர்த்தி செய்துவிடலாம். வடுகபட்டிவாசிகள் இவ் விஷயத்தில் முன்வரல் வேண்டும்.

## மத சமூகச் சச்சரவுகள்

புதுக்கோட்டை, காஷ்மீர் முதலிய விடங்களில் ஏற்பட்டிருக்கும் கலகங்களையும் இன்னும் சில இடங்களில் பரவியிருக்கும் விரோதங்களையும் கேட்டால் எமக்கு மிகவும் வருத்தமாயிருக்கிறது. தனிப்பட்ட நபர்கள் சுய காரியங்கள் செய்வதிலுங்கூட மதம் அல்லது சமூகத்தில் புகுத்துவதால் பாதகமான காரியங்கள் ஏற்படுகின்றன. "நமது நாட்டில் மூட நம்பிக்கைகளும் வகுப்புத் துவேஷமும் மத வெறியுமே நமக்குப் பெரும் விரோதிகளாக இருக்கின்றன" என்று கவிஞர் தாகூர் தேச மக்களுக்குத் தனது செய்தியை அனுப்பியிருக்கிறார். மதத் தலைவர்களும் சமூகத் தலைவர்களும் சமாதானமும் சமரசமும் உண்டாகும்படியாக எல்லாக் காரியங்களையும் செய்ய வேண்டுகிறோம். பல்வேறு மதத்தினர்களையும் பல்வேறு சமூகத்தினர்களையும் கொண்டது நம் நாடு. ஆகையால் ஒவ்வொரு மதஸ்தரும் ஒவ்வொரு சமூகத்தவரும் மற்றவர்களுடன் பரஸ்பரமாயிருந்தாலன்றி விடுதலையில் விமோசனமில்லை.

## ஜனத் தொகை

சென்ற ஜன சங்கையைப்பற்றி சர்க்கார் வெளியிட்ட அறிக்கையின்படி இந்தியாவின் மொத்த ஜன சங்கியை 35,29,86 876 மக்கள். இதில் 18,19,21.914 ஆண்கள்; 17,10,64,962 பெண்கள். மொத்த ஜனத் தொகையில் இந்துக்கள் 23,83,30,912; முகம்மதியர்கள் 7,77,43,928; சீக்கியர்கள் 43,66,442; கிறிஸ்துவர்கள் 59,61,794. சென்னையில் மொத்த ஜனங்கள் 4,65,75,670. இதில் இந்துக்கள் 4,03,92,900; முஸ்லீம்கள் 33,16,083; கிறிஸ்துவர்கள் 2,05,009. இப்பொழுது எடுக்கப்பட்ட கணக்குப்படி சென்ற 10 வருஷங்களில் 100-க்கு இந்துக்கள் 10 பேர் விகிதமும், முஸ்லீம்கள் 13 பேர் விகிதமும், சீக்கியர்கள் 33 பேர் விகிதமும், புத்தர்கள் 8 பேர் விகிதமும் விருத்தியாகி யிருக்கிறார்கள்.

## அழகணன் கைத்தொழிற் கலாசாலை

## (Alaganan Technical Institute)

தருமத்தை உயிர்நாடியாகக் கொண்டது நமது தேசம். வித்யா தானத்தை மிகவும் போற்றுவது நமது நாடு. முல்லைக்குத் தேரும் மயிலுக்குப் போர்வையும் கொடுத்தவர்கள் தமிழரசர்கள். கல்வி மான்களுக்கே தானம் கொடுத்துக் கொடுத்துப் புகழ்பெற்ற பாரி அரசனை எந்தத் தமிழரேனும் மறப்பரோ? வித்வான்களுக்கு முறத்தில் முத்துக்களை வாரி வாரிக் கொடுத்த சீதக்காதி மறக்காயரை இந்நாள் தமிழகம் நன்கறியும். கொடை மிகுதியும் வித்வக் கூட்டமும் பெருகியிருந்த—புகழ்ப்பெற்ற நந் தமிழ் நாட்டு ஜனங்களில் 100-க்கு 98 பேர்கள் படிப்பில்லாது அந்தகாரத்தில் ஆழ்ந்து கிடக்கிறார்கள். அன்ன சத்திரங்கள் ஆயிரம் வைப்பதைக் காட்டிலும் கோவில்கள் பதினாயிரம் கட்டுவதைக் காட்டிலும் ஒரு ஏழைக்குக் கல்வி கற்பித்தவருக்குக் கோடி புண்யம் உண்டு என்று பாரதியார் கூறுவதைக் கவனிக்க வேண்டும். "எல்லாப் பாதகங்களுக்கும் காரணம் கல்வி யில்லாமையே" என்றார் புத்த பிரான். இக்கால தர்மமோ கல்வியையே வற்புறுத்துகிறது.

இந்தியாவில் குலாலர் ஒரு பெருஞ் சமூகம். பண்டைக்கால முதல் இவர்கள் தங்களுடைய கைத்தொழிலால் இந்திய மக்களுக்குப் பேருதவி செய்துகொண்டு வருகிறார்கள். இவர்களுடைய முன்னேற்றத்தைக் கருதிச் சென்னையம்பதியில் இவ்வாண்டின் மத்தியில் தென்னிந்திய குலாலர் மகாநாடு முதலாவதாகக்கூடப் பெற்றது. தொழிற் கல்விச்சாலை ஒன்று திறக்க வேண்டுமெனத் தீர்மானம் ஒன்று நிறைவேறப்பட்டது. மதுரை ஜில்லா வியாபார அரசரும் (Merchant Prince and Commercial Magnate of Madura District) சென்னை சட்டசபை அங்கத்தினரும் குலால உலகின் தனிப்பெரும் தலைவரும் தென்னிந்தியக் குலால மகாஜன சங்கத்தின் அக்ராசனாதிபதியும் லட்சுமி கடாட்சம் பூரணமாய்ப் பெற்றிலங்குபவருமான ஸ்ரீமான் A. S. அழகணன் செட்டியாரவர்கள் அன்புடன் குலாலர்களின் கைத்தொழிற் சாலைக்கு ரூபா 20,000 கொடுத்துதவி இருப்பதைக் கேட்டு மட்டற்ற மகிழ்ச்சியடைகிறோம். குலால வாலிபர்களின் பல்வேறு கல்வி அபிவிருத்திக்காக இன்னும் எவ்வளவோ செய்ய வேண்டுகிறோம். அத்தொழிற் பாடசாலைக்கு **அழகணன் கைத்தொழிற் கலாசாலை** எனப் பெயரிடப்பட்டிருக்கிறது மிகப் பொருத்தமே. செல்வச் சிறப்பும் செல்வாக்குப் பெருக்கும் ஒருங்கே அமையப்பெற்ற கனம் செட்டியாரவர்கள் நாடு, மொழி, சமூகங்கள் முதலியவைகளின் அபிவிருத்திக்காக மேலும் மேலும் வேண்டிய உதவி புரியக் கேட்டுக்கொள்கிறோம். ஒவ்வொரு சமூகத் தலைவரும் பிரபுக்களும் தங்கள் தங்கள் சமூக முன்னேற்றத்திற்காகவும் தேசாபி விருத்திக்காகவும் தாராளமாக உதவி செய்ய முன்வர வேண்டுகிறோம்.



## அச்சுக்கூட மசோதா

சுதேசப் பத்திரிகைகளையும் உண்மைப் பத்திரிகைகளையும் தேசியம் செறிந்த பத்திரிகைகளையும் அடக்கி ஒடுக்கி நசுக்கச் சர்க்கார், கொண்டுவந்த அச்சுக்கூட மசோதா இந்திய சட்டசபையில் நிறைவேறிவிட்டது கேட்டு, அளவற்ற வருத்தமடைகிறோம். தேச முன்னேற்றத்தில் விருப்பம் கொண்ட எந்த இந்தியர் இதைக் கண்டு வருந்தாமலிருக்க முடியும்? புதிய அச்சுக்கூடங்கள் ஜாமீன் கட்ட வேண்டுமாம். மூன்று மாதங்களுக்குச் சரியாய் நடந்தால் ஜாமீன் தொகை திருப்பிக் கொடுக்கப்படுமாம். இச் சட்டத்தால் அச்சுக்கூடங்களுக்கும் பத்திரிகைகளுக்கும் எவ்வளவோ பாதிப்பு ஏற்படப்போகிறது. தேசத்தில் பத்திரிகைகளுக்குச் சுதந்திரமில்லையானால் அவைகளில் விருத்திக்குரிய ஒன்றும் சொல்லவோ இயற்றவோ சாத்தியமிருக்காது. எத் தேசம் நாகரீகமுற்று உலக மதிப்பில் உன்னதமாய்த் தோன்றுகிறதோ அங்குப் பத்திரிகைகள் சுயேச்சையுடன் வெளிவந்துலாவுவதைப் பார்க்கலாம்.

ராஜிப் பேச்சுப் பேசும் இக் காலத்தில், காந்தி—இர்வின் ஒப்பந்தப்படி சமாதானம் நிலவ வேண்டிய இக் காலத்தில், இந்திய சர்க்கார், இந்தியர் மீது அவநம்பிக்கை கொண்டு வேற்றுமையாக நினைத்து அடக்குமுறை உணர்ச்சி மிகுந்து தேசப் பத்திரிகைகளையும் அச்சுக்கூடங்களையும் அடக்க முன்வந்து கேட்பாரின்றி நினைத்தபடி யெல்லாம் செய்வதால் என்னதான் நன்மை வந்துவிடப்போகிறது? அரசாங்கம் இவைகளையெல்லாம் விட்டு இந்தியர்களைத் தாராளமாக நடத்த முன்வந்தாலன்றி, நாட்டில் சமாதானம் நிலவும்படி செய்ய முடியாதென்பதை அறிவது அவஸ்யமாகும்.

## கே. ஸி. ராய் அவர்களின் பிரிவு

இந்தியாவில் பத்திரிகைத் தொழிலில் அபிவிருத்தி அடைந்து, பத்திரிகைகளுக்கே செய்திகளை அனுப்பும் ஸ்தாபன மொன்றை ஸ்தாபித்து, இந்திய சட்டசபையிலும் அங்கம் பெற்று பத்திரிகை உலகில் நட்சத்திரம் போன்று பிரகாசித்த ஸ்ரீமான் கே. ஸி. ராய் அவர்கள் காலங் கடந்துவிட்டதற்காக துக்கிக்கிறோம். அவருடைய ஆன்மா சாந்தி அடைவதாக.

## தபால் கட்டண உயர்வு

முன்பு கார்டு விலை 3 பைசா; கவர் விலை 6 பைசா. குறைந்த தந்தி விகிதம் 6 அணா. சில வருடங்களுக்குப் பின்பு கார்டு $\frac{1}{2}$ அணாவாகவும், கவர் 1 அணாவாகவும் உயர்த்தினார்கள். தந்தியின் விகிதம் குறைந்த கட்டணம் $1\frac{1}{2}$ அணாவாகவும் உயர்த்தப்பட்டது. இப்படி உயர்த்தியதால் வருமானம் மிகுந்து மிஞ்சவே, உயர்ந்த தபால் உத்தியோகஸ்தர்களுக்குச் சம்பளம் அதிகமாக்கப்பட்டது. நாளுக்கு நாள் இந்திய அரசாங்கத்தின் ஒவ்வொரு இலாக்காவும் வரவுக்கு மிஞ்சிய செலவு செய்துவந்ததால், அரசாங்கம் பணக் கஷ்டத்தால் ஸ்தம்பித்துவிட வேண்டியதாயிற்று. க்ஷேம நிதியும் சிக்கனமுமின்றி வாரி யிறைத்துச் செலவு செய்துவிட்டு, நாட்டில் பணக் கஷ்டம் நாளுக்குநாள் மிகுந்துவரும் இப்பொழுது புதிய வரிகளை ஏற்படுத்தியும் சில வரிகளை உயர்த்தியும் குடிகளை மேலும் மேலும் கஷ்டப்படுத்த ஆரம்பித்துவிட்டது. "செட்டி நஷ்டம் குடியில்" என்னும் தமிழ் நாட்டின் பழமொழியை அரசாங்கம் அனுசரிக்கிறது போலும்.

கார்டை $\frac{3}{4}$ அணாவாகவும் கவரை $1\frac{1}{2}$ அணாவாகவும் உயர்த்தச் சட்டம் செய்யப்பட்டுவிட்டது. சமீபத்தில் ரிஜிஸ்டர் விகிதம் 2 அணாவிலிருந்ததை 3 அணாவிற்கு உயர்த்திவிட்டார்கள். ஏழை இந்தியாவின்மீது இன்னும் எத்தனை எத்தனை வரிகளோ? இவைகளுக்கெல்லாம் விமோசனம் என்றோ?

## காந்திஜீயின் புகழ்

மகாத்மாவைக் கிறிஸ்துவின் அவதாரமெனக் கூறிப் பல கிறிஸ்தவ அறிஞர்கள் புகழுகிறார்கள். மகாத்மாவினுடைய புகழ் அதிகமாக உலகமெங்கும் பரவிக்கொண்டிருக்கிறது. உலகத்தின் நாலு பக்கங்களிலிருந்து அவருக்கு அழைப்புகள் வந்துகொண்டிருக்கின்றன. உலகமே இவரிடமிருந்து அஹிம்ஸையை அனுபவத்தில் அறிந்துகொள்ளப் போகிறது. அவரது ஆத்மசக்தி பாரெங்கும் பரவிக்கொண்டிருக்கிறது. நச்சுக் காற்றுகளையும் விஷப் புகைகளையும் மரண ஒளியையும் அகற்றுவதற்கு போட்டி போட்டுக்கொண்டு மாற்றுகளுக்கு மேல் மாற்றுகளைக் கண்டுபிடிப்பதில் பயனில்லை. மகாத்மா காந்தி அடிகளின் அஹிம்ஸா தர்மமே உலகில் யுத்த வெறியைப் பெரிதும் மாற்றப்போகிறது. இவரால் உலகம் பாதுகாக்கப்படப் போகிறது!

## பெசண்டு அம்மையார்

அன்னை பெசண்டு அம்மையாரது 86-வது ஜெனன நாள் உலகமெங்கும் இருக்கும் பிரம ஞான சங்கத்தாரால் கொண்டாடப்பட்டது. அவர் இந்தியாவுக்குச் செய்திருக்கும் தொண்டு கொஞ்சமல்ல, வயது சென்ற போதிலும் வாலிப உணர்ச்சியுடன் இவர் அபாரமாய் உழைக்கிறார். அதிகமாகப் பரோபகாரத் தொண்டு செய்கிறார். இவரது ஊக்கத்தையும் உழைப்பையும் நம் நாட்டு வாலிபர்கள் பின்பற்ற வேண்டுகிறோம். நமது நாட்டின் விடுதலைக்காக சிறை சென்றவர். இந்தியாவை அபிமானத் தாய் நாடாகக் கொண்டவர். இன்னும் இவர் இந்தியாவுக்கு இப்பொழுது செய்திருப்பதைக் காட்டிலும் பன்மடங்கு வேலை செய்யும்படியாக இன்னாருக்கு அதிக சுகத்தையும் சக்தியையும் சந்தோஷத்தையும் நீண்ட ஆயுளையும் ஆண்டவன் அருள்வாராக!.

## சுதேச மன்னர்களுக்குச் சங்கடம்

இந்தியாவில் இந்திய சமஸ்தானங்களின் ஜனங்கள் மூன்றில் ஒரு பங்கு இருக்கிறார்கள். சமஸ்தானப் பிரஜைகளுக்குப் போதிய படி பிரதிநிதித்துவமும் சுதந்திரமும் கிடையாததால் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். சுதேச மன்னர்களிடம் கோடாகோடி ஆஸ்தியிருக்கிறது. அதனால் அவர்கள் செய்யும் டம்பச் செலவுகளையும் படாடோபங்களையும் சொல்லி முடியாது. இவர்களுடைய ஆஸ்திக்குக் காரணம் என்னவென்றால் குடிகளிடமிருந்து வாங்கும் பலவித வரிகளே. கஷ்டப்பட்டுத் தேடி அரசருக்கு வரிகளைக் கொடுத்துவிட்டு ஏழை மக்கள் மிக மிகத் திண்டாடுகிறார்கள்.

எத்தனை நாட்களுக்குத்தான் சுதேசப் பிரஜைகள் கஷ்டப்படுவார்கள்? சமஸ்தான பிரஜைகளுக்கு இப்பொழுது விழிப்புத் தோன்றிவிட்டது. ஆண்டுதோறும் பல விடங்களில் சமஸ்தானப் பிரஜைகள் மகாநாடுகள் கூடுகிறார்கள். மன்னர்களின் ஏதேச்சாதிகாரத்தை மட்டுப்படுத்திச் சமஸ்தான காரியங்களைச் சரியாய் நடத்துவதற்குப் பிரதிநிதிகள் அடங்கிய சபை ஏற்படுத்த வேண்டுமென்ற கிளர்ச்சி பலப்பட்டு வருகிறது.

பல சுதேச மன்னர்கள் அயல் நாடுகளுக்குச் சென்று, பெண் வேட்டைகளிலும், கிளப்புகளிலும், பந்தயங்களிலும், உடுப்புகளிலும், ஆபரணங்களிலும், இரத்தினங்களிலும், உல்லாச கேளிக்கைகளிலும் குடிகள் கஷ்டப்பட்டுத் தேடிக்கொடுத்த வரிகளை லட்சலட்சமாகச் செலவு செய்கிறார்கள். குடிகளின் முன்னேற்ற விஷயங்களில் சிக்கனம்காட்டி சுயநல விஷயங்களில் டம்பமாய்ப் பணத்தை நீர் போன்று வாரி வாரி இறைக்கும் மகா ராஜாக்களைப் பற்றி வாசகர்களே முடிவுகட்டிக் கொள்ளுங்கள். மன்னர்களின் ஒழுங்கீனத்தால் இப்பொழுது எத்தனையோ சமஸ்தானங்களில் ஜனங்களின் நிலை மிக மிகக் கேடாயிருக்கிறது. சுதேச சமஸ்தானங்களில் தீண்டாதவர்களின் நிலை மிகவும் பரிதாபம். சில சுதேச சமஸ்தானங்களில் வரி வசூலிக்கும் முறையோ மிகவும் மாறுபட்டிருக்கிறது.

மன்னர்களின் ஊழல்களை உலகம் அறிந்துவிட்டது. பிரஜைகளுக்கும் புத்துணர்ச்சி கிளம்பிவிட்டது. சுதேச மன்னர்கள் தங்கள் குடிகளின் வேண்டுகோளைக் கவனிக்க வேண்டும். இல்லாவிடில் சுதேச மன்னர்களுக்குப் பேராபத்து வரப்போகிறது. ராஜாக்கள் தங்கள் டம்பங்களையும் அதிக்கிரமங்களையும் விட்டுவிட்டுக் குடிகளின் விஷயங்களைத் தங்களின் சொந்த விஷயங்கள் போலக் கவனித்தாலன்றி மகா ராஜாக்கள் தங்களுடைய அதிகாரம் அனைத்தையும் இழந்துவிடுவார்கள என்று எச்சரிக்கிறோம்.

## கதர் விலை குறைந்துவிட்டது

எக்காலத்து தேசாபிமானிகளும் சுதேசியத்தைப் போற்றியே வந்துள்ளார்கள். இந்தியாவின் தற்காலத் தரித்திர நிலைக்குக் காரணம் அந்நிய ஆட்சியும் தேசாபிமானமின்மையுமே. நமது நாட்டில் உற்பத்தியாகும் வஸ்துக்களை நாம் உபயோகப்படுத்தவேண்டும். அயல் நாட்டுச் சாமான்களை விலக்க வேண்டும் அத்யாவஸ்யமானவைகளைப்பற்றி நாம் இங்கு சொல்ல முன்வரவில்லை. நமது நாட்டில் நம்மவர் தயாரித்த சாமான்கள் கிடைக்கும்பொழுது அயல் நாட்டுப் பொருள்களை அதிக மோகத்துடன் வாங்கவேண்டுமா? என்று கேட்கிறோம். கதர் கட்டுங்கள்; சுதேசிய விரதமெடுங்கள்; நாட்டின் நன்மைக்காக இவ்வளவு செய்யலாகாதா? கதரை அதிகமாய் உபயோகிக்க உபயோகிக்க கதர் விலை குறைந்துகொண்டு வருவதைக் கவனியுங்கள். சுதேசாபிமான மிகுந்து கதரை உபயோகப்படுத்த முன்வரும்படியாய்க் கேட்டுக்கொள்கிறோம்.

காந்தி வாரக் கொண்டாட்ட கால ஒரு வாரத்திற்குள் சில இலக்ஷ ரூபா கதர், வட நாட்டில் காங்கிரஸ் தலைவரின் விருப்பத்தின் வண்ணம் மொத்தமாகவும் சில்லரையாகவும் விற்கப்பட்டிருக்கிறது. நந் தமிழ் நாட்டில் அவ்வித முயற்சியைக் கைக்கொண்டு ஏழைகளுக்குத் துணைநிற்க முயன்றவரொருவரும் முன்வந்தாரில்லை. சமீபத்தில் வரப்போகும் தீபாவளிப் பண்டிகைக்கேனும் கதரை மிகுதியும் பரப்பும் முறையில் பிரவேசிப்பார்களாக. ஒருவர் கதருடுத்தினால் இந்தியாவின் ஏழைகளில் ஒருவர் பசி அடங்குகின்றது. இதுவே பெரிய தியாகம் என்றும் சொல்லுவோம்.

தேசீயத்திலும் கதர் விருத்தியிலும் தமிழ்நாடு மேலும் மேலும் முன்சென்று பண்டைச் சிறப்பினை யெய்துவதே குறியாக ஒவ்வொருவரும் முந்தி முன்வருவார்களாக.

# ஆராய்ச்சி மேடை.

## ஸ்ரீ சிரத்தானந்தர் சரித்திரம்.

ஆசிரியர்:— எம். ஆர். ஜம்புநாதன்.
பிரசுரர்:— சூடன் ஆண்டு கோ, மதராஸ்.

விலை அணு 12.

சுவாமி சிரத்தானந்தரது வேலைகளையும் அவரால் ஸ்தாபிக்கப்பெற்ற குருகுலத்தைப்பற்றியும் இந்தியர்கள் அதிகமாக அறிவார்கள். சுவாமி அவர்களுடைய பெருமைகளைக் காட்டிலும் அவரது குருகுலத்தின் பெருமையே பெரிது. ஆங்கிலேயக் கல்வி கற்கச் சென்றவிடத்தில் அவர் மதுபானத்தாலும் சிற்றின்பத்தாலும் கெட்டு, சுவாமி தயானந்தரது உபதேசத்தால் புத்துயிர் பெற்று, சில காலத்தில் குருகுலத்தின் மகிமையை அறிந்து ஹரிதுவாரத்தில் குருகுல ஸ்தாபனம் செய்ததையும் அவரது தேச சமூக ஊழியங்களையும் இந் நூலில் கூறப்பட்டிருக்கிறது. சுவாமிஜீயின் படத்துடன் அவரது ஜீவியம் ஆசிரியரால் வரையப்பட்டிருக்கிறது. குருகுலங்களைப்பற்றிய விஷயங்கள் எமது உள்ளத்தைக் கவர்ந்துவிட்டன. பண்டித பாமர ரஞ்சிதமான இலகுவான இனிய நடையில் எழுதப்பெற்றிருக்கிறது. நாட்டுப் பற்றுடைய ஒவ்வொருவரும் தேசீயக் கல்வியில் ஆசைகொண்ட அனைவரும் இந்த நல்ல புஸ்தகத்தை வாசிக்க வேண்டியதவசியம் என்று குறிப்பிடுகின்றோம். தேச பக்தியின் மேலீட்டாலும் தாய் மொழியின் ஆர்வமேலீட்டாலும் இதை எழுதி உபகரித்த ஆசிரியரைப் போற்றுகிறோம்.

தமிழகத்தில் ஜீவிய சரித்திர நூற்கள் புதிய முறையில் உணர்ச்சி உண்டாக்குவதாய், மாறுதல் தருவதாய் வெளிவருவது குறைவு. இவருடைய பேனா முனையிலிருந்து அநேக உயர் நூற்களையும் பல ஜீவிய சரித்திரங்களையும் எதிர் பார்க்கிறோம்.

---

## பொன் செய்யும் மருந்து.

ஆசிரியர்:— பொ. வ. பத்மநாபன், B.A., B.L.

பிரசுரர்:— வே. ஜ. முருகேச முதலியார், புரசைவாக்கம், சென்னை.

விலை அணு 3.

தொட்டதெல்லாம் பொன்னாக விரும்பிய ஒரு பேராசைக்காரனுடைய கதை—சின்னஞ்சிறு மாணவர்களுக்கு நல்ல நீதியைப் புகட்டும் அருமைச் சிறு கதை இது. கதை சிறிதா யிருப்பினும்

ஆசிரியர் தனது வன்மையால் பையன்களைச் சந்தோஷப்படுத்தும் முறையில் சுலபமாய் விளங்கும்படியான செந்தமிழ் நடையில் எழுதியிருக்கிறார். முத்துப்போன்ற பெரிய எழுத்தில் அச்சிடப் பெற்றிருக்கிறது. ஆரம்பப் பள்ளிக்கூடங்களில் இதனைத் துணைவாசகப் புஸ்தகமாக உபயோகிக்குமாறு நாம் சிபார்சு செய்கிறோம்.

---

## மாதூய வாழ்க்கை.

ஆசிரியர்:— கா. மு. அஹ்மதுமீரான்.

பிரசுரர்:— தாஸ் புஸ்தகாலயம், உத்தமபாளையம், (மதுரை ஜில்லா.

இனாமாகக் கொடுக்கப்படும்.

ஜனாப் கா. மு. அஹ்மதுமீரான் அவர்களால் முகமதுநபி நாயகம் அவர்களது மகிமையைப் பற்றி மாஞாலம்பெற்ற மாண்புசால் மகரின் மாதூய வாழ்க்கை என்னும் புஸ்தகம் எழுதப்பட்டிருக்கிறது. மத பேதமின்றி ஜாதி பேதமின்றிக் கக்ஷி பேதமின்றி எவரும் படித்தறிய வேண்டிய முறையில் வரையப் பட்டிருப்பது ஆசிரியரின் சமரசத் தன்மையைக் காட்டுகிறது. இம்மாதிரியான புஸ்தகங்கள் ஏராளமாக நம் நாட்டுக்குத் தேவையென்று சொல்லத் தேவையில்லை. ஒவ்வொரு பக்கத்திற் காணும் அறிஞர்களின் கருத்துக்கள் அடங்கிய வாசகங்கள் நன்றாயிருக்கின்றன.

---

## ருத்ர நாட்டியம்.

ஆசிரியர்:— கோவிந்த ராவ் குர்ஜாலி.

வெளியிட்டவர்:— குர்ஜாலி சன்ஸ், திருவெண்ணைநல்லூர்.

விலை அணா 8.

கிழக்கிந்திய வர்த்தகக் கூட்டத்தார் நமது நாட்டை அடிமைப் படுத்த உபயோகித்த முறைகளைப் பற்றியும் தேசத் துரோகிகளின் செய்கைகளைப் பற்றியும் வீர மாதாசிகளின் தைரியத்தைப் பற்றியும் இந் நூலில் அழகாகக் காட்டப்பட்டிருக்கிறது. நாட்டின் சரித்திரத்தை அறிய ஆவல்கொண்ட தமிழ் மக்கள் அனைவரும் இந் நூலை வாசிப்பது அவஸ்யமாகும்.

இந் நூலிலுள்ள அச்சுப் பிழைகளை ஆசிரியர் இரண்டாம் பதிப்பில் அகற்றிவிடுவாரென்று நம்புகிறோம்.

Edited and Published by R. NARAYANASWAMI.
Printed at ANANDA PRESS, Uthamapalayam, Madura Dt., S. India.

நல்ல சந்தர்ப்பம்! விரைவில் முந்துங்கள்!!

# 1929-ம் வருட

# "பாரதி" வால்யம்

## [முதல் வருடத்தியது.]

சில நூறு பிரதிகளே மறுபடியும் அச்சிட ஆரம்பிக்கப்படுகிறது.

சென்ற 30-ம் வருடம் முதல், 'பாரதி'யின் முதல் வருடமாகிய 1929-ம் ஆண்டின் பிரதிகளை விரும்பிய நூற்றுக்கணக்கான அன்பர்கள் கிடைக்கப் பெறாது ஏமாற்றமடைந்ததை யுத்தேசித்தும், ஏற்கெனவே இந்த முதல் வருட 'பாரதி'யை விரும்புவோர் நாளுக்குநாள் மிகுந்து வருவதை யெண்ணியும் இதனை மறு முறையும் அச்சிட் டுதவுவதாகத் தீர்மானித்துள்ளோம். முன்னர் விரும்பிய அன்பர்கள் அனைவரும் இதுபோது தங்கள் விருப்பத்தை யறிவித்து, நேர்த்தியாக அச்சிட்டுப் பைண்ட் செய்யப்போகின்ற 'பாரதி'யைப் பெற்று விருப்பத்தை நிறைவேற்றி மகிழ்வார்களாக.

அச்சிடுவதற்கு முன் குறைந்தது 300 பிரதிகள் வரை ஆர்டர் கிடைப்பதற்காகக் காத்திருக்கவேண்டி யிருக்கின்றது. இவ் விஷயம் விரைவில் பூர்த்தியாகுமெனவே கருதுகின்றோம்.

அச்சிடுவதற்கு முன்னர், முன் பணமனுப்பித் தங்கள் பெயரைப் பதிந்துகொள்வோருக்கு விலை... ரூ. 2—8—0

அல்லது 5 ஷில்லிங் (தபாற் செலவு இறைப்)

அச்சிட்ட பின்னர் விலை ... ரூ. 3—0—0

தபாற் செலவு அணா 12 பிரத்தியேகம்

உத்தமபாளையம், 31—8—31. } மானேஜர், "பாரதி"

## "பாரதி"யின் பம்பாய் ஏஜண்ட்.

# K. S. Naganathan,

## C/o. The Madura Knitting Co.,
## 47, Chackla Street,
# Bombay 3.

---

## "இந்திய மித்திரன்"

சிறந்த தேசீய வாரப் பத்திரிகை.

ஆசிரியர்: B. வேணுகோபாலன் அவர்கள்.

மலேயா நாட்டிலே தமிழ்ப் பத்திரிகைகளில் தேசீயத்தையே பிரதானமாகக் கொண்டு வெளிவருவது எது? தொழிலாளர்களுக்குத் தொண்டு யுழைப்பது எது? திக்கற்ற இந்தியக் கூலிகளுக்குச் சிறந்தவழிகளை எடுத்துக் காட்டி, மோசக்காரர்களின் படு மோசத்திற் காளாகாது தப்புவிப்பது எது? ஆயிரக் கணக்கான சந்தாதாரர்களைப் பெற்று எண்டிசை வர்த்தமானங்களையும் கொண்டு வீரமுடன் தீரமாக உலாவி வருவது எது? "இந்திய மித்திரன்" ஒன்றேயாகும்.

வருட சந்தா: மலேயாவுக்கு வெள்ளி 4/-
இந்தியா, பர்மா, சிலோனுக்கு ,, 5/-

விலாசம்: மானேஜர், "இந்திய மித்திரன்,"
87, பெல்பீல்ட் தெரு, ஈப்போ., F. M. S.

---

## 1931-ம் வருட "பாரதி" அனுபந்தம்.

"பாரதி"யைப்பற்றி அறிய இதனிலும் வேறு வழியில்லை.

100 பக்கங்கொண்டது. கட்டுரை, கட்டுரையாளர், நோக்கங்கள், சிறப்புரைகள், மதிப்புரைகள் ஆகிய இவற்றுடன் "பாரதி"யின் ஆரம்ப காலமுதல் இது பரியந்தம் வந்துள்ள சுவைதரும் சிறந்த பாக்களனைத்தையும் ஒருங்கே பெற்றிலங்குகின்றது.

விலை அணா 4 இந்தியா அல்லது இலங்கை ஸ்டாம்பு அனுப்பவும்.
வெளி நாட்டார் போஸ்டல் கூப்பன் அனுப்பவேண்டும்.



## நேர்த்திக்கும் உறுதிக்கும்
## உத்தரவாதம்.
## இங்கு

பிரிண்டிங், ரூலிங், பைண்டிங் ஆகிய
எல்லாவித வேலைகளும் விரும்பிய வண்ணம்
குறித்த காலத்தில் செய்து தரப்படுகிறது.

வெளியூர் ஆர்டர்களை உடனுக்குடன்
கவனிக்கப்படும்.

பரீக்ஷார்த்தமாகவேனும் உங்கள் ஆர்டர்களை
ஒரு முறை கொடுத்துப் பாருங்கள்.
வியாபாரிகளுக்கு வேண்டியவை யாவும் இங்கு தயாரிக்கப்படுகிறது.

## ஆனந்தா பிரஸ்,

உத்தமபாளையம்.

---

# "லோகோபகாரி"

பழமையும் புதுமையும் வாய்ந்த வாரப் பத்திரிகையை நீங்கள் விரும்பினால் லோகோபகாரிக்குச் சந்தாதாரராய்ச் சேருங்கள். உலகத்துச் செய்திகளெல்லாம் லோகோபகாரியில் சுருக்கமும் விளக்கமுமாக வெளி வருகிறது. முப்பத்தேழாவது ஆண்டு நடக்கிறது.

பத்திராதிபர்: பரலி— சு. நெல்லையப்ப பிள்ளை,
லோகோபகாரி பத்திரிகாலயம்,
சிந்தாத்ரிப்பேட்டை, சென்னை.

**வருஷ சந்தா ரூபாய் நான்கு.**

# "பாரதி"

## ஒரு தேசிய மாதப் பத்திரிகை.

மூன்றும் ஆண்டு நடைபெறுகிறது.

சுதந்திரம் பொங்கி சமத்
வம் ததும்பி சகோதரத்
வம் ஜ்வலித்து குறைந்த
சந்தாவிலே நிறைந்த
விஷயங்களால் உயர்ந்த
மாஸிகையாய் மதபேத
மற்று ஜாதி பேதமற்றுக்

கட்சி பேதமற்று இந்திய
ரனைவரும் பாரத மாதா
வின் மக்களென்ற
மேலான கொள்கையுடன்
தேசாபிவிருத்தியை
முக்கிய முதல்நோக்க
மாகக் கொண்டு

தேச விடுதலைக்காக உழைக்கும்
தேசீய மணங் கமழும் மாஸிகை

**"பாரதி" ஒன்றே யாகும்.**

உடனே சந்தாதாரர்களாய்ச் சேருங்கள்.
உங்கள் நண்பர்களுக்கும் இதனைப்பற்றி
அறிமுகம் செய்து சந்தாதாரர்களாய்ச்
சேர்த்துக் கொடுங்கள்.

### சந்தா விபரம்.

உள் நாடுகளுக்கு வருடத்திற்கு ரூ **2—0—0**
வெளி நாடுகளுக்கு " ரூ **2—8—0**
அல்லது **4** ஷிலிங்

தனிப் பிரதி விலை அணா 3. அயல் நாடு அணா 4.
மாதிரிப் பிரதி வேண்டுவோர் 3 அணா ஸ்டாம்பு அனுப்பவும்.
ஏஜெண்டுகளாக விரும்புவோர் எழுதவும்.

பொறுப்பாளர்,
"பாரதி" ஆலயம்,
உத்தமபாளையம், மதுரை ஜில்லா.



## புதிதாகச் சந்தாதாரராவோர்க்கு

## 1931-ம் வருட

பாரதி அனுபந்தம் இனாம்
பாரதி அனுபந்தம் இனாம்
பாரதி அனுபந்தம் இனாம்

மதுரை வக்கீல் ஸ்ரீமான் இ. எஸ். சுந்தா, பி. ஏ., பி. எல்., இயற்றிய

### பொருளாதார முக்கிய நூல்கள்.

1. அமெரிக்காவில் மதுவிலக்கு ... ... 0—8—0
2. இந்தியப் பருத்தி நெசவுத் தொழில் ... 0—4—0
3. ஐக்கிய பண்டகசாலை இயக்கம் ... 0—4—0

மதுவிலக்கு, சுதேசிப் பிரச்சாரம், தேச முன்னேற்றம் ஆகியவைகட்கு
அவசியமான புஸ்தகங்கள்.
எல்லாத் தமிழ் மக்களும் அறியும்படி எளிய தமிழ் நடையில்
எழுதப்பெற்றிருக்கின்றன.

கிடைக்குமிடம்:- மணி புத்தகசாலை, 12, கூட்ஷெட் தெரு, மதுரை.

## ஸ்ரீ அரவிந்தர் அருளிய

# அன்னை.

சுத்தானந்த பாரதியார்
மொழிபெயர்ப்பு.

யோகசக்தி பெறுவதற்கு அரியதுணை.

வானரசை உலகில் நாட்ட
அரவிந்தர் கொண்டிருக்கும் சக்தியை
விளக்குவது. விலை அணா **4.**

விலாசம்:
பாரத சக்தி நிலயம், புதுச்சேரி.

# 1930-ம் வருட வால்யம்

## புதிய சந்தா நேயர்கட்கோர் நல் விருந்து.

இதில் இந்திய தேசாபிமானிகளின் படங்களும் பெரியோரின் படங்களும், அவர்தம் விரிவான சரிதைகளும் அடங்கியுளது. இவையன்றி, சிறந்த ஆசிரியர்களாலும், பிரபல வியாயவாதிகளாலும் அறிவு தருவதாய் ஆனந்தம் நல்குவதாய் செல்வம் ஈவதாய் நவம் நவமாக எழுதப்பெற்ற அற்புதமான வியாசங்களை 800 பக்கங்களில் கொண்டதாயிருக்கின்றது. பத்திரிகையின் விஷயப் போக்குக்கும் அச்சுக்கும் ஏற்ற விதமாக நேர்த்தியான காலிகோவினால், அழகாகவும் உறுதியாகவும் பைண்ட் செய்யப்பெற்று, தங்க மசியில் காலிகோவில் அச்சிடப்பட்டிருக்கிறது.

பிரதி 1-க்கு விலை ரூ. 2—8—0

வால்யம் வாங்குவோர்க்குப் பாரதி அனுபந்தம் ஒன்று இனாமாக அனுப்பி வைக்கப்படும்.

தபால் செலவு பிரத்தியேகம்.

வெளி நாட்டிலுள்ளோர் தபால் செலவுக்கும் சேர்த்து 6 ஷில்லிங் போஸ்டல் ஆர்டர் அனுப்ப வேண்டும்.


# விளம்பர விகிதம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பாரதி பேரேடில் கட்டம் 1-க்கு | | | | ரூ. | 1—0—0 |
| சாதாரண | பக்கம் | 1-க்கு | மாதம் 1-க்கு | ரூ. | 10—0—0 |
| ,, | ,, | ½-க்கு | ,, | ,, | 5—8—0 |
| ,, | ,, | ¼-க்கு | ,, | ,, | 3—0—0 |
| கவர் | ,, | 3 ல் | ,, | ,, | 15—0—0 |
| ,, | ,, | 4 ல் | ,, | ,, | 20—0—0 |

விளம்பரத்திற்கு எப்பொழுதும் முன்பணம் அனுப்ப வேண்டும்.

நீண்ட கால விளம்பரஞ் செய்வோர் எழுதவும்.